கவிமணி

தேசிகவிநாயகம்பிள்ளை

பேராசிரியர்
எஸ். வையாபுரிப் பிள்ளை

பூமகள் பதிப்பகம்

கவிமணி
தேசிக விநாயகம் பிள்ளை

பேராசிரியர்

எஸ். வையாபுரிப் பிள்ளை

தொகுப்பாசிரியன்

பண்டித சு. வே. நடராசன், எம். ஏ., பி. ஓ. எல்.
ச. வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி, நாகமலை,
மதுரை.

பூமகள் பதிப்பகம்
நாகர்கோவில்

முதற் பதிப்பு — 1967

தொகுப்பாசிரியர் எழுதிய நூல்கள்

இலக்கியக் காட்சிகள்
இலக்கியம் காட்டும் மலைகள்
தமிழக வள்ளல்கள்
கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை
புலவர் வாழ்க்கை
செந்தமிழ்ச் செம்மல்கள்
மாணவர் கதையமுதம்
புலவர் மணிகள்
மதுரை மூதூர்

விலை ரூ. 2-50

விஜயா பிரிண்டர்ஸ், மதுரை—1967.

முன்னுரை

இந்நூற்றுண்டில் தோன்றிய கவிஞர் பெருமக்களுள் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள் தலை சிறந்த கவிஞராவர். இக்கவிஞர் பெருமகனார் புலமைச் செல்வமும், பண்புச் செல்வமும் ஒருங்கே அமையப் பெற்றவர். இப்பெருந்தகையோடு பழகும் ஒரு பெரும் பேறு 1940 ஆம் ஆண்டில் முதன் முதலில் எனக்குக் கிடைத்தது. இதனை எனக்குக் கிடைத்தற்கரிய ஒரு பெரிய பேருகக் கருதி இன்றும் மகிழ்கின்றேன். நிற்க.

பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள் கவிமணியவர்களின் அருமை நண்பர். அவர் சிறந்த புலவரும், நல்ல ஆராய்ச்சியாளரும், உயர்ந்த திறனாய்வாளருமாவர் என்பதனைத் தமிழ்கூறும் நல்லுலகம் நன்கு அறியும். அன்னார் கவிமணியவர்கள்பால் ஆழ்ந்த அன்பும் நன்மதிப்பும் உடையவர்; கவிமணியவர்களின் நூல்களைச் செவ்விய முறையில் வெளியிடுவதற்கு உறுதுணை புரிந்து உதவி வந்தவர்.

அவர் கவிமணியவர்களைக் குறித்துக் கட்டுரை எழுதியதோடு, அவர்களுடைய நூல்களுக்கு ஒப்புயர் வற்ற முன்னுரைகளும் வழங்கியுள்ளனர். பேராசிரியர் அவர்களின் முன்னுரைகள் அனைத்தும் தங்கத்திற்கு மெருகூட்டுவது போலக் கவிமணியின் நூல்களுக்கு மெருகூட்டிப் பெருமை தந்து நிற்கின்றன. அவை யாவும் இலக்கியநயம் செறிந்தனவாகவும், ஆராய்ச்சியுரைகள் மலிந்தனவாகவும், திறனாய்வுரைகள் அமைந்தனவாகவும் விளங்குகின்றன. அம்முன்னுரைகள் அவ்வந்நூல்களுக்குக் கலங்கரை விளக்கங்களாக அமைந்துள்ளன என்னலாம்.

இங்ஙனம் வையாபுரிப்பிள்ளை அவர்கள் கவிமணியைக் குறித்து எழுதிய கட்டுரையினையும், கவிமணி

யின் நூல்களுக்கு அவர்கள் அளித்துள்ள முன்னுரை களையும் ஒருசேரத் திரட்டி ஒரு நூலாக வெளியிடுவதாயின், அது தமிழகத்துக்கு நற்பயன் விளைக்கும் ஒரு சிறிய பணியாக அமையும் என்று கருதினேன். அக்கருத்தின் விளைவே இந்நூலாக உருப்பெற்றது.

இந்நூலில் அமைந்துள்ள 'கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை' என்னும் பகுதி, தமிழ்ச் சுடர் மணிகள் என்னும் நூலில் வெளிவந்துள்ள கட்டுரை யாகும்; ஏனையவை அவ்வந் நூல்களுக்கு அவர் வழங்கியுள்ள முன்னுரைகளாகும். இவைகளில் தே.வி.யின் கீர்த்தனங்கள் என்னும் பகுதியில் இசை குறித்துக் கவிமணியின் கருத்தை அறிதற்குத் துணையாகத் தமிழிசை என்னும் கட்டுரையும், கவிமணியின் உரைமணிகள் என்னும் பகுதியில் கவிஞர் பெருமகனின் குறிக்கோள்களையும், சாசனங்களைக் குறித்து அவர் கொண்டுள்ள கருத்துக்களையும் அவர்தம் சாசனப் புலமைச் சிறப்பையும் அறிவதற்குத் துணையாக 'எனது லட்சியம்' 'சாசன ஆராய்ச்சி' என்னும் கவிமணியினுடைய கட்டுரைகளும் இணைக்கப் பெற்றுள்ளன.

பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை அவர்களின் இவ்வெழுத்தோவியங்களைத் தொகுத்து இங்ஙனம் ஒரு நூலாக வெளியிடுவதற்குப் பேராசிரியர் அவர்களின் அருமைத் திருமகனார் V. சரவணப்பெருமாள் பி. ஏ. பி. இ. அவர்கள் இசைவு வழங்கியுள்ளனர், கவிமணியவர்களுடைய கட்டுரைகளை இணைத்துக் கொள்வதற்குத் திரு. கே. குமாரசுவாமிப் பிள்ளையவர்களின் வாழ்க்கைத் துணைவியாராகிய திருமதி வி. விரலட்சுமியம்மாள் அவர்கள் உரிமை நல்கியுள்ளனர். இவ்விருவர்க்கும் எனது உளங்கனிந்த நன்றி உரியதாகும். இந்நூலை வெளிக்கொணரும் முயற்சியில் கவிமணியின் பேரர் கவிஞர் குற்றாலம் அவர்களும் எனக்கு உதவினர். அன்னார்க்கும் என் இதய நன்றி உரித்தாகும்.

தொகுப்பாசிரியன்

உள்ளுறை

1. கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

1947-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15-ம் தேதியில் நிகழ்ந்த தேச விடுதலையாகிய அற்புத விளைவுக்கு இந்நூற்ருண்டின் தொடக்கத்திலே விதை விதைக்கப்பட்டது என்று சொல்லலாம். சரித்திர காலத்தில் இன்று வரையும் பிரிட்டிஷார் ஏகாதிபத்தியத்தைப்போல அத்தனை வலிமையும் பெருமையு முடையது வேருென்று தோன்றிய தில்லை. அதன் ஆட்சியில் நமது இந்தியா கீழடங்கி நின்றது. ஸாம்ராஜ்ய நன்மையையும் தங்கள் சுய நன்மையையுமே மிகவும் கருத்துடன் பேணி, நமது இந்தியாவைப் பிரிட்டிஷார் அடக்கி யாண்டு வந்தார்கள் இதில் சிறிதும் வியப்பிற்கு இடமில்லை. லங்காஷயர் முதலிய பிரதேசங் களிலுள்ள மில் துணி வியாபாரிகளின் நன்மையைக் கருதி நமது இந்தியர்களுக்குப் பல கெடுதல்களைச் செய்யத் துணிந்தனர். தம் தேசத்திலுள்ள கப்பல் வியாபாரிகளின் நன்மையைக் கருதி, நமது நாட்டில் கப்பல் முதலிய சாதனங்களை இயற்று வதற்கு இவர்கள் இடங் கொடுக்கவில்லை. ஆண்டு தோறும் நமது தேசத்திலிருந்து கோடிக்கணக்கான ரூபாய்களைத் தங்கள் நாட்டிற்குக் கொண்டு செல் வதில் மிகுதியும் ஊக்க முடையவர்களா யிருந்தார் கள். இந்தியர்களுடைய வருமானம் மிகக் குறைந் தது. பட்டினியும் பஞ்சமும் தலைவிரித்தாடத்

தொடங்கியது. என்றாலும், பிரிட்டிஷ் அரசாங்கத்தாருக்குப் பிரதிகூலமான கருத்துக்களை எவரேனும் வெளியிட்டால் அவர்களுக்கு வாய்ப்பூட்டு இடப்பட்டது. அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டார்கள். எங்கேனும் பகிரங்கமாக இச் செயல்களைக் கண்டித்தால், நம்மவர்களுக்குக் கிடைத்த வெகுமானம் குண்டுகள்தான். இவ்வாறாக அடக்குமுறை பலமாகவும் உறுதியுடனும் கையாளப்பட்டது.

ஆனால், இக் கொடுங்கோன்மையின் விளைவாக நாட்டிற்குச் சுதந்திரம் வேண்டும் என்ற உணர்ச்சி நமது இந்திய மக்களிடையே தீவிரமாய்ப் பரவத் தொடங்கி விட்டது. எத்தனை கடினமான அடக்குமுறையைக் கையாண்ட போதிலும் இந்தச் சுதந்திர உணர்ச்சியை ஆங்கில அரசினரால் தடுக்க முடியவில்லை. நமது பாரத தேசமெங்கும் இவ்வுணர்ச்சி பெருக்கெடுத்துப் பரந்தது. இவ்வுணர்ச்சியை ஒருவாறாக நெறிப்படுத்தி நாட்டிற்கு நன்மை புரிய வேண்டும் என்ற கருத்துடன் உழைத்து வந்தவர்கள் காங்கிரஸ் கட்சியினர். இவர்களும் மிதவாதிகள் என்றும் தீவிரவாதிகள் என்றும் இரண்டு வகையாகப் பிரிந்தனர். மிதவாதிகள் அன்னிய அரசாங்கத்தோடு ஒத்துழைத்து, சட்டத்தின் அமுல்களுக்கு உட்பட்டு, நமக்கு வேண்டும் காரியங்களைச் சாதித்துக் கொள்ளவேண்டும் என்று கருத்துக் கொண்டிருந்தார்கள். தீவிரவாதிகள் அன்னிய அரசாங்கத்தோடு எவ்விதத் தொடர்பும் வைத்துக்கொள்ளக் கூடாது என்றும், நமது நாடு

முற்றும் விடுதலை அடைவதே முக்கிய நோக்கம் என்றும், அதற்காகச் சட்டங்களை மீறிய வழிகளை யும் கைப்பற்றலாம் என்றும் கருத்துக் கொண்டிருந்தார்கள். தீவிரவாதிகளின் கட்சியைச் சார்ந்தவர் கவி பாரதியார்.

பாரதியாரின் பாடல்களிலே தீவிர தேசபக்தி எங்கும் நிரம்பிப் பரிமளிக்கிறது. அடக்குமுறைகள் இவரையும் வருத்தின. ஆனல், இம் முறைகளினுல் இவரது தேச பக்தியானது மேன்மேலும் வளர்ந்ததே யன்றிக் குறைவு படவில்லை. சுதந்திரம் என்ற பயிரைக் கண்ணீர்விட்டு வளர்த்ததாகப் பாரதியார் கூறுகிருர். தெய்வத்தைப் பற்றிப் பாடிய போதிலும், பழைய பாரதக் கதைகளை எடுத்துக் கவிதை புனைந்த போதிலும், வேறு எதை எடுத்துப் பாரதியார் பாடல் இயற்றிய போதிலும், அவற்றில் எல்லாம் தேசபக்தி என்னும் கனல் ஜொலித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே நாட்டுப் பாட்டு முதலியவற்றில் மட்டும்தான் இவரது சுதந்திர உணர்ச்சியும் தேச பக்தியும் விளங்குகின்றன என்று நினைத்தல் தவறு. இவர் எழுதியுள்ள ஒவ்வொரு சொல்லும், ஒவ்வொரு தொடரும், ஒவ்வொரு செய்யுளும், ஒவ்வொரு செய்யுள் தொகுதியும், ஒவ்வொரு நூலும் தேசபக்தியை உயிர்த்துக் கொண்டிருக்கின்றன. சுருங்கக் கூறின், இவரது பாடல்களுக்கு உயிர் நாடியாய் இருப்பது தேச பக்தியேயாம். இவர் தமிழுக்கும் தேசத்திற்கும் செய்துள்ள தொண்டின் பெருமையை முன்னர் விளக்கினேம்.

தேசபக்தியை வளர்த்துவந்த அரசியற்கிளர்ச்சி சுதேச ராஜ்யங்களில் பெரும்பாலும் அக்காலத்து இல்லை. அங்குள்ள மன்னர்கள் பரம்பரையாக நீண்ட காலம் ஆட்சி புரிந்தவர்களாதலின் அவர்களுடைய குடி ஜனங்கள் அவர்கள்மீது தான் பெரும் பக்தி கொண்டிருந்தார்கள். தற்காலத்திற் போல ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு இச் சுதேச ராஜ்யங்களில் காங்கிரஸ் முயற்சிகள் தோன்றுவதற்கும் இடமில்லாதிருந்தது. எவ்விதமான அரசியற் கிளர்ச்சிகளுமின்றி அமைதியாய் நெறிப்பட்டு இவ் அரசாட்சிகள் நடைபெற்று வந்தன. ஆனால் ஆங்கில ஆட்சி இந்த ஸமஸ்தானங்களில் முற்றிலும் இல்லை என்று சொல்ல முடியாது. சுதேச மன்னர்கள் ஆங்கில அரசாட்சிக்குக் கீழடங்கி ஆட்சி புரிந்து வந்தவர்களே. ஒவ்வொரு சுதேச ராஜ்யத்திலும் ஆங்கிலப் பிரதிநிதிகள் வசித்து வந்தனர். இப்பிரதிநிதிகளின் மூலமாய் அரசியல் விஷயங்கள் நன்றாகக் கண்காணிக்கப்பட்டு வந்தன. இவர்களை அறியாது அரசியற் கிளர்ச்சி தோன்ற முடியாது. சுதேச மன்னர்கள் ஆங்கில அதிகாரத்திற்கு மிகவும் அஞ்சியவர்களுமாவர். எனவே, ஆங்கில அதிகாரிகளின் கருத்தை நன்றாகத் தெரிந்து கொண்டு இவர்கள் தங்கள் நாட்டில் உண்டாகும் சிறு குழப்பங்களை உடனுடன் அடக்கி வந்தனர். ஒரு சில சமயங்களில் ஆங்கிலேயரால் நேரே ஆளப்பட்ட இந்தியப் பகுதியினின்றும் தீவிர வாதிகள் சிலர் சுதேச ஸமஸ்தானங்களில் அடைக்கலம் புகுந்ததுண்டு. ஆனால் இவ்வாறு அடைக்கலம் புகுந்த

வர்களை மிக நன்ருகக் காவல்செய்து, அவர்களால் யாதொரு அரசியற்குழப்பமும் உண்டாகாதபடி சுதேச மன்னர்கள் கவனித்துக் கொண்டனர். அடைக்கலம் புகுவதும் எளிதான காரியமாய் இருக்கவில்லை.

இத்தகைய சூழ்நிலையில் தோன்றியவர் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை. இவருடைய கவிகள் பெரும் பாலானவற்றில் தேசபக்தியின் இனிய நன்மணம் கமழ்ந்து வீசவில்லை. இதற்கு மாருக, எப்பொழு தும் நிலைபேருயுள்ளதும், நமது மக்களால் பெரிதும் போற்றப்படுவதுமாகிய இந்தியப் பண்பாட்டின் பெருநலமே (Cultural interest) இவைகளில் நிரம்பித் ததும்புகிறது. பண்பாட்டின் உணர்ச்சியொன்றே கவிமணியின் பாடலுக்கு உயிர் நாடியாக உள்ளது. இவ்வாறு கூறிய அளவில் தேசபக்திக் குரிய விஷயங்களைப் பற்றி இவர் பாடவே இல்லை என்பது எனது கருத்தல்ல. இவரும் கதரைப்பற்றிப் பாடியிருக்கிருர்; தேசியக் கொடி யைப் பற்றிப் பாடியிருக்கிருர். இவைகளெல்லாம் இவரது வாழ்வின் பிற்காலத்தில், தமிழ் நாட்டின ரோடு நெருங்கிய கூட்டுறவின் பயனுக, பிற ருடைய வேண்டுகோளால் பாடப்பட்டவை. தேச பக்தி இவரது பாடல்களை இயக்கி வந்தது என்று கருதுவது பொருத்தமன்று.

கவிமணியின் வாழ்க்கையே கல்வியையும் நமது பண்பாட்டையும் முக்கியமாகக் கொண்டு தொடங்கியதாகும். இவர் சுசீந்திரத்தை அடுத்

துள்ள தேரூரில் 1876-ல் பிறந்தவர். இளமையிலேயே தாய் மொழியான தமிழின் மீது அளவற்ற பற்றுக் கொண்டவர். அக்கால முதற் கொண்டே தமிழ்க் கவிகள் இயற்றுவதில் பெரு நோக்கு உடையவரா யிருந்தார். தமிழ் நூல்களை முறையாகக் கற்க வேண்டும் என்ற பேரவா இவரது மனத்தில் தோன்றியது. இது இவரது ஊரின் பக்கத்திலுள்ள வாணன் திட்டு மடத்தில் வாழ்ந்த ஸ்ரீசாந்தலிங்கத் தம்பிரானல் ஒருவாறு நிறைவேறியது. தமிழிலக்கண இலக்கியங்களை ஐந்தாறு வருஷ காலம் இவர் பாடங்கேட்டனர். இங்ஙனமாகத் தமிழையும் பின்னர் மலையாள மொழியையும் கற்றுக் கொண்டார். கோட்டாற்றிலுள்ள அரசாங்க ஆங்கிலக் கலாசாலையில் மெட்றிக்குலேஷன் பரீட்சையில் தேர்ச்சி பெற்ருர். எப். ஏ. வகுப்பிலும் சிலகாலம் வாசித்தார். பல இடையூறுகளால் ஆங்கிலக் கல்வியை நிறுத்தி விடவேண்டியதாயிற்று. இங்ஙனம் கலாசாலைக் கல்வியை நிறுத்திய போதிலும், ஆங்கில நூல்களையும் ஆங்கிலச் செய்யுட்களையும் எப்பொழுதும் இவர் படித்து வந்தனர். கல்வித்துறை வாழ்க்கையே தமக்குரியது என்று இவர் மேற்கொண்டனர். கோட்டாற்றில் மத்திய தரப் பாடசாலையின் உதவி ஆசிரியராகவும், பின்னர், நாகர்கோவில் போதனுமுறைப் பாடசாலையிலும், திருவனந்தைப் பெண்கள் போதனுமுறைப் பாடசாலையிலும் உதவி யாசிரியராகவும் இவர் அமர்ந்தார். விஞ்ஞானப் பகுதியில் தக்க அறிவு பெற்றிருந்தமையால், அப்பொருள்

பற்றியே போதனுமுறைப் பாடசாலைகளில் ஆசிரியராக விளங்கினர். ஆனல், இலக்கியக் கல்வியை இவர் ஒருபொழுதும் மறந்தவரல்லர். மேலும் மேலும் கற்பதும், தமிழ் நூல்களை ஆராய்ச்சி செய்வதும், செய்யுட்கள் புதியனவாக இயற்றுதலும் இவருடைய தினசரி வாழ்க்கையில் நடைபெற்று வந்தன. கலாசாலையில் இவரது கவித்வம் வெளியாவதற்குரிய சந்தர்ப்பங்களும் அடிக்கடி நேர்ந்தன. இவர் இயற்றிய கவிகள் தலைமை ஆசிரியை முதலிய கல்வித்துறை அதிகாரிகளாலும், பல அறிஞர்களாலும், தமிழ் விற்பன்னர்களாலும் பெரிதும் பாராட்டப்பெற்று வந்தன. இவரை அறிந்தோரெல்லாம் இவரிடம் பெருமதிப்புக் கொண்டிருந்தனர். இவருடைய கல்வியையும் கற்பிக்கும் ஆற்றலையும் கவித்துவத்தையும் நேர்மையையும் இனிய குணங்கள் பிறவற்றையும் திருவிதாங்கூர்ப் பெருமக்கள் பலரும் உணர்ந்து இவரைப் போற்றி வரலாயினர். தாம் உதவியாசிரியராயிருந்த பெண்கள் போதனுமுறைக் கலாசாலையில் தமிழாசிரியர் வேண்டுவதாயிருந்தது. அதற்கு வேறு பலரும் பெருமுயற்சி எடுத்துக் கொண்ட போதிலும், இவரே தக்கவர் எனக் கருதி இவரை அப்பதவியில் அமர்த்திஞர்கள். தமது உயிராசைக்குரிய தமிழையே தாம் கற்பிக்கும் படியாக நேர்ந்தது பற்றிக் கவிமணி தாமும் பெரிதும் மகிழ்ச்சி கொண்டனர்.

தமிழ்க் கல்வியும் ஆங்கிலக் கல்வியும் இவரது பண்பாட்டுணர்ச்சியை மிகவும் வளர்த்தன. ஆனல்,

இவ்விருவகைக் கல்வியோடு இவர் அமைந்து விட வில்லை; நமது நாட்டுப் புராதனச் சரித்திரத்தை அறிந்து கொள்ள வேண்டுமென்ற அவா இவருக்கு இயற்கையாய் உண்டாயிற்று. ஆகவே, அவ் அறிவையும் இவர் அரிதில் முயன்று பெற்றுக் கொண்டார். புராதனச் சரித்திர உணர்ச்சிக்குச் சிலாசாசனப் பரிசோதனை அவசியம் என்பதை இவர் எளிதில் கண்டு கொண்டார். பேராசிரியர் சுந்தரம்பிள்ளை யவர்களுக்குச் சிலாசாசன இலாகா வில் உதவி புரிந்துவந்த பண்டித கணேசபிள்ளையின் கூட்டுறவு நமது கவிமணி இத்துறையில் தக்க பாண்டித்தியம் அடைவதற்குப் பெரிதும் உதவிற்று என்று கூறலாம். இப்பாண்டித்தியமும் இவ ருடைய பண்பாட்டுணர்ச்சியை மேலும் மேலும் வளர்த்து வந்தது.

விஞ்ஞான நூற் பாடத்தைப் பெண்கள் போதனு முறைக் கல்லூரியில் இவர் கற்பித்து வந்தார் என்று முன்னர்க் குறிப்பிட்டேன். பாடம் கற்பிக்கும் அளவில் மாத்திரம் அந்நூலின் அறிவை இவர் பெற்று அமைந்தனர் என்று எண்ணுவது தவறு. தாவர நூல் முதலியவற்றில் நல்ல பயிற்சி பெற்றிருந்தார். இப்பயிற்சியினால் எவ்விஷயத்தையும் விஞ்ஞான முறையில் நோக்குதல் வேண்டும் என்ற மனப்பான்மையும் இவரிடத்தே விளைந்தது. இந்த விஞ்ஞான மனப் பான்மையும் இவருடைய பண்பாட்டுணர்ச்சிக்கு உரமளித்தது. நமது பண்டைத் தமிழ் நூல்களி லுள்ள தாவரங்கள் முதலியனபற்றிய குறிப்புக்களை

எல்லாம் தொகுத்து, படம் முதலிய உபகரணங்களுடன் ஒரு நூல் வெளியிட வேண்டுமென்று இவர் என்னிடமும் பலமுறை கூறியுள்ளார். இதுவும் இவருடைய மனப்பான்மையை நமக்கு நன்ருகத் தெரிவிக்கின்றது.

இளமைப் பருவந் தொட்டே இவர் மிக்க தெய்வபக்தியுடையவரா யிருந்தனர். திருநெல்வேலியில் வாழ்ந்து வந்த உமையொருபாக தேசிகர் என்பவரிடம் இவர் சிவ தீக்ஷையும் பெற்றனர். தமது ஊரில் கோயில் கொண்டிருந்த அழகம்மையின் மீதும், அடுத்துள்ள சுசீந்திரத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள தாணுமாலயப் பெருமாள்மீதும் பல தோத்திரங்களையும் துதிப் பாடல்களையும் இவர் இயற்றியுள்ளார். இவ்வாருகப் பல நெறிகளிலும் விளங்கிவந்த இவருடைய சமயப் பற்றும் இவரது பண்பாட்டுணர்ச்சியை மிகமிக ஆழ்ந்ததாகச் செய்தது.

இங்ஙனமாகப் பலவழிகளினுலும் உரம் பெற்றுப் பண்பாட்டுணர்ச்சி இவர் உள்ளத்திலே செழித்து வளர்ந்தது. இதனுல் ஒரு முக்கியமான விளைவு ஒன்றும் உண்டாயிற்று. நமது மூதாதையர்களின் பண்டைய லட்சியங்கள் இவர் மனத்தைக் கவர்ந்தன. அவற்றின் பெருமையை எண்ணி எண்ணி இவர் மனம் கனிந்தனர். உயர்ந்த லட்சியங்களெல்லாம் திரண்டு ஓர் உருப் பெற்று விளங்குவதுபோல் தோன்றிய புத்த பிரான் சரித்திரத்தில் இவர் பெரிதும் ஈடுபட்டார். ஆங்கி

லத்தில் எட்வின் ஆர்நால்ட் என்பவர் எழுதிய ஆசிய ஜோதி (Light of Asia) என்ற நூலைப் பல முறையும் கற்று அந்நூலின் அழகையும் புத்த பிரானது குணாதிசயங்களையும் நன்கு அனுபவித்தனர். இவ் அனுபவத்தின் பயனாகத் தோன்றியனவே 'புத்தர் அவதாரம்', 'புத்தரும் ஏழைச் சிறுவனும்', 'கருணைக் கடல்,' 'புத்தரும் மகனை இழந்த தாயும்,' 'காதல் பிறந்த கதை' முதலியன. இவை 'ஆசிய ஜோதி' என்ற ஒரு நூலில் தொகுத்து வெளியிடப் பட்டுள்ளன. இப் பாடல்களில் சில பகுதிகள் தமிழிலக்கியத்தில் ஈடும் எடுப்புமின்றித் தலைசிறந்து விளங்குகின்றன.

உண்மையான பண்பாடு கால, தேச நியதிகளுக்குள் அடங்குவதன்று. பிற தேசங்களிலும் பிற மதங்களிலுமுள்ள பெரியோர்களையும் பாராட்டிப் போற்றும் இயல்பு வாய்ந்தது. கவிமணியின் பண்பாட்டுணர்ச்சியும் இத்தகையதே. இயேசு கிறிஸ்துவைக் குறித்து 'ரக்ஷகர்' என்ற தலைப்பில் இவர் பாடிய செய்யுட்கள் மேற்கூறிய உண்மைக்குத் தக்க சான்றாகும். மிகப்பரந்து செல்லும் இப் பண்பாட்டுணர்ச்சி காரணமாக, நமது தமிழ்நாட்டுப் பெரியோர்களை இவர் மறந்தவரல்லர். வள்ளுவர், ஔவை, கம்பர், பாரதியார் : இவர்களைப்பற்றிக் கவிமணி இயற்றியுள்ள பாடல்கள் தமிழ் மக்கள் பண்பாட்டை இவர் எவ்வாறு அனுபவித்துள்ளார் என்பதை விளக்க வல்லன. வள்ளுவர் தந்த திருமறையை, 'தமிழ் மாதின் உயிர்நிலை' என்கிறார். சிலப்பதிகாரத்தைக் குறித்து,

தேனிலே ஊறிய செந்தமிழின் சுவை
தேரும் சிலப்பதிகாரம்

என்கிருர். இராமாயணத்தைக் குறித்து,

பாவின் சுவைக்கடல் உண்டெழுந்து கம்பன்
பாரில் பொழிந்த தீம் பாற்கடல்

என்கிருர். ஔவையைக் குறித்து,

ஔவைக் கிழவி நம்கிழவி
அமுதின் இனிய சொற்கிழவி
செவ்வை நெறிகள் பற்பலவும்
தெரியக் காட்டும் பழங்கிழவி

என்று கட்டுரைக்கின்ருர். பாரதியின் பாடல்களைக் குறித்து,

உள்ளம் தெளியுமொரு பாட்டிலேயடா—மிக்க
ஊக்கம் பிறக்கு மொரு பாட்டிலேயடா
கள்ளின் வெறிகொளுமோர் பாட்டிலேயடா—ஊற்ருய்க்
கண்ணீர் சொரிந்திடுமோர் பாட்டி லேயடா

என்று பாராட்டினர்.

இவைகளை நோக்கும்போது ஷேக்ஸ்பியர், மில்டன் முதலானேரது பெருமைகளை வால்ட் உவிட் மென் சிற்சில அடைமொழி கொடுத்துப் பாடியுள்ள பாடல்கள் நமக்கு நினைவுக்கு வருகின்றன. பண்பாட்டின்மீது தமக்குள்ள ஆர்வத்தைப் புத்தர் முதலிய மதாச்சாரியர்கள் மூலமாயும், வள்ளுவர் முதலிய இலக்கியப் பேராசிரியர்கள்

மூலமாயும் வெளியிட்டுள்ள கவிமணி பக்தியில் மேம்பட்டு விளங்கியவர்களையும் உளங்கனிந்து போற்றியுள்ளார். 'அன்பின் வெற்றி' என்ற பகுதியில் வடநாட்டுப் பக்தசிரோமணியாகிய மீராபாயின் சரித்திரப் பகுதிகள் மிக்க கனிவுடன் இவரால் பாடப்பட்டுள்ளன.

கண்ணுமுனைக் காணுமல் கலக்கங் கொள்ளும்;
  கணமேனும் உள்ளத்தில் அமைதி இல்லை;
உண்ணுதற்கும் பசியில்லை; உறக்க மில்லை;
  ஓரிரா ஓர்யுகமாய்க் கழியு தையா!
கண்ணியெனை வாள்போல அறுக்கு மிந்த
  நலிவையெல்லாம் யாவரிடம் சொல்லி நிற்பேன்?
எண்ணி யெண்ணி நைந்துருகும் என்னை யாள
  எந்நாளிங் கெழுந்தருள்வாய்? எம்பிரானே!

என்று மீராபாய் புலம்புவது நம் உள்ளத்தை உருக்கி விடுகிறது.

சராசரங்கள் அனைத்திலும் இறைவன் தங்கியிருக்கிறான் என்பது இந்தியப் பண்பாட்டின் அடிநிலைக் கொள்கைகளுள் ஒன்று.

வானின் றிழிந்து வரம்பிகந்த
  மாபூதத்தின் வைப் பெங்கும்
ஊனும் உயிரும் உணர்வும்போல்
  உள்ளும் புறமும் உளன் என்ப

என்றார் கம்பர். இவ் அடிநிலைக் கொள்கைக்கு ஏற்கக் கவி மணியும் கிளி முதலிய பறவைகளைக் குறித்தும், ரோஜா முதலிய செடிகளைக் குறித்தும்,

குழந்தைகளைக் குறித்தும் அருமையாகப் பாடியிருக்கிருர். இவரது பண்பாட்டுணர்ச்சியின் பெருமை இவற்ருலும் நன்கு புலப்படுகிறது. கிளியைக் குறித்து,

செம்பவழ வாயைத் - திறந்து நீ
செப்பும் மொழி கேட்கில்
உம்பர் அமுத மெல்லாம் - செவியகத்து
ஓடி யொழுகு தடி.

கொம்பிற் கொலுவிருந்து - களித்து நீ
கூவுங் குரல் வருமேல்
பம்பி யெழுஞ் சோலை - எனக்குப்
பரம பத மடியோ!

என்று பாடியிருப்பது இயற்கையைக் கடந்தும் அதற்கு ஆதாரமாய் நின்றும் விளங்கும் தெய்விக சக்தியை இவர் அனுபவிக்கும் திறத்தை உணர்த்துகிறது. குழந்தையைக் குறித்து இவர் பாடியுள்ள பாடல்களும் இவ்வகை அனுபவத்தின் பெருமையையே நமக்குப் புலப்படுத்துகிறது.

பூவின் அழகுனது முகத்தில் - என்றும்
பொலிந்திடும் காரணம் என்? குழந்தாய்!
தேவரும் கண்டறியாக் காட்சி - யானும்
தெளிவுறக் கண்ட பலன், அம்மா!

ஆசைக் குழந்தாய்! இச்செவிகள் - உன்னை
அடைந்த வரலாறேது? உரையாய்!
ஈசனும் பேசிட வாய்திறந்தான் - கேட்க
இவையும் எழுந்தன, என் அம்மா!

9773

இன்பச் சிறு கரங்கள் இவைதாம் - உனக்கு
எவ்வா றமைந்தன ? என் குழந்தாய் !
அன்பு வளர்ந்திவ் வுருவாகி - என்னை
அண்டி அணைத்திருக்குது, அம்மா !

இவைகள் மேற்கூறியதற்குச் சான்ருகும்.

இந்தியப் பண்பாட்டின் அடிநிலைக் கொள்கைகளுள் மற்ருென்று நிலையாமையை வற்புறுத்துதலாகும். வள்ளுவரும்,

நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை.

(திருக்குறள், 331)

என்றனர். இளமை, யாக்கை, செல்வம் முதலியவற்றின் நிலையாமையை உணர்த்தி, நிலைத்த இன்பத்தைத் தருவதாகிய வீடுபேற்றை வற்புறுத்தி, அதற்கு உபாயமாய்த் துறவைக் கூறுதல் வள்ளுவர் முதலியோரது கருத்தாகும். வேறு சில ஆசிரியர்கள் யாக்கை நிலையாமை, இளமை நிலையாமை என்ற இரண்டினையும் கூறி, இல்லற இன்பத்தைக் காலந் தாழ்க்காது நுகரவேண்டுமென்று வற்புறுத்துவர். கலித்தொகை,

இளமையும் காமமும் நின்பாணி நில்லா

(பாலை, 11)

எனவும்,

இளமையும் காமமும் ஓராங்குப் பெற்ருர்

* * * *

ஓரோஒகை தம்முள் தழீஇ ஓரோஒகை
ஒன்றன்கூ றுடை உடுப்பவரே யாயினும்
ஒன்றினர் வாழ்க்கையே வாழ்க்கை அரிதரோ
சென்ற இளமை தரற்கு

(பாலை, 17)

எனவும் கூறுகின்றது: இவ் இரண்டாவது வகை ஆசிரியர்களின் கருத்தைப் பெரும்பாலும் உட்கொண்டதே உமர்க்கய்யாம் பாடல். இதற்கு,

பலநூல் கற்ற பண்டிதர்கள்
பலரும் சபைகள் பலகூடிக்
கலகம் வாதம் செய்திடுக
கண்டங் கிழிய முழங்கிடுக;
மலரும் மலர்கள் வாடலுமிவ்
வாழ்வு நிலையா தோடலுமே
உலகம் கண்ட உண்மைகளாம்
உண்டோ மற்றென் றுரைத்திடவே?

வெய்யிற் கேற்ற நிழலுண்டு;
வீசுந் தென்றற் காற்றுண்டு;
கையிற் கம்பன் கவியுண்டு;
கலசம் நிறைய மதுவுண்டு;
தெய்வ கீதம் பலவுண்டு;
தெரிந்து பாட நீயுண்டு;
வையந் தருமிவ் வன மன்றி
வாழும் சொர்க்கம் வேறுண்டோ?

என்ற செய்யுட்கள் சான்றாகும். நிலையாமையைக் கவிமணி முன் பாடல் முதலியவற்றில் விளக்கி

யிருப்பதுபோல் வேறு எங்கும் தமிழிலக்கியங்களில் காணமுடியாது. இப்பாடல்களும் இவர் இந்தியப் பண்பாட்டைத் தலை நோக்கமாகக் கொண்டுள்ளார் என்பதை விளக்குகின்றன.

இங்கே ஒரு கேள்வி இயல்பாக எழக்கூடும். உமர்க்கய்யாம் இயற்றிய ருபாய்யாத் பாடல்களை எட்வர்ட் பிட்ஜிரால்ட் செய்துள்ள மொழி பெயர்ப்பினைத் தமிழ் மொழியில் மொழிபெயர்த்துச் செய்த கவிதைகள் தானே இவைகள்? இவற்றில் இந்தியப் பண்பாடு விளங்குகிறது என்றல் எப்படிப் பொருந்தும்? இப்பாடற் கருத்துக்கள் கவிமணியின் கருத்துக்கள் என்று கூற முடியாதல்லவா? இவ்வாறு சிலர் கேட்கலாம். கவிமணி இயற்றியது பெயரளவில் மொழிபெயர்ப்பேயன்றி உண்மையில் அங்ஙனம் அமைந்தவை அல்ல. உதாரணமாக 'வெய்யிற்கேற்ற நிழலுண்டு' என்று மேலே காட்டியதனைக் கூறலாம். அச்செய்யுள் ஆங்கில மூலத்தின் நேரான மொழி பெயர்ப்பு அன்று. ஆனால் அதன் கருத்துத் தமிழ் மக்களுக்கு ஏற்ற முறையில் மாற்றப்பட்டுள்ளது. தமிழ்ச் செய்யுளுக்கு ஏற்ற படியாகவும் அக்கருத்தோடு ஒத்த பிற கருத்துக்களும் சேர்க்கப்பட்டுள்ளன. எனவே, இச்செய்யுள் ஆங்கில மூலத்தின் கருத்தினைப் பொதுவே எடுத்துக்கொண்டு தமிழ்ச் சூழலுக்கு ஏற்ற முறையில் தமிழ் மக்கள் அனுபவிக்கும் முறையில் வேண்டும் மாற்றங்கள் செய்து அழகுற அமைக்கப் பெற்றதாம். இங்ஙனமே பிட்ஜிரால்டும் தாம் எடுத்துக் கொண்ட பாரஸிகச் செய்யுளை ஆங்கில மக்கள்

அனுபவத்திற்குத் தக்கபடி வேறுபாடுகள் செய்து ஒரு நூதன சிருஷ்டியாக அமைத்திருக்கிறார். மொழி பெயர்க்க எடுத்துக் கொண்ட ஒவ்வொரு செய்யுளி லும் கவிமணியின் ஆன்மா பிரவேசித்து நின்று செய்யுட் கருத்தின் வடிவினைத் தானே மேற் கொண்டு புதிய சிருஷ்டியாகத் தோன்றியுள்ளது என்பதே உண்மை. உமர்க்கய்யாம் பாடல்களே யன்றி இவர் மொழி பெயர்த்துள்ள பிற செய்யுட் களும் இங்ஙனமே அமைந்தனவாகும். இச்செய்யுட் களில் மொழி பெயர்ப்பு என்ற உணர்ச்சியே உண் டாவதில்லை. நமது நாட்டிலே நமது தாய் மொழி விருட்சத்திலே இயற்கையாய்க் காய்த்து விளைந்து சுவைபடக் கனிந்த கனிகள் என்று சொல்லத் தக்கனவாகவே உள்ளன. ஆகவே பிட்ஜிரால்ட் செய்தது ஆங்கில மக்களுக்கு ஒரு நூதன சிருஷ் டியா யிருப்பது போலவே, கவிமணி அதனைத் தழுவி இயற்றியதும் ஒரு நூதன சிருஷ்டியேயாம். பிட்ஜிரால்டின் பாடல்களை ராஸற்றி (Rossetti) என்ற கவிஞரும் அவர் நண்பர்களும் மதிப்பரிய புதையலைக் கண்டெடுத்தது போல் கண்டெடுத்த னர். இவ் அரிய செய்யுள்-நூலைச் சுவையும் அழகும் பூரணமாய் நிரம்பியவற்றுள் ஒன்று என்று இலக்கிய மதிப்பாளர் கூறுவர். கவிமணியின் தழுவற்பாடல் களும் இவ்வாறே மதிப்பிடத் தக்கன.

உமர்க்கய்யாம் ஒரு சிறந்த கணித விற்பன்னர்; ஒரு சிறந்த கவிஞர். இவர் பாரஸிகத்தில் நைஷாப்பூர் என்ற இடத்தில் பிறந்தவர். ரூபாய் யாத் என்ற நூலில் இவர் வெளியிட்டுள்ள கருத்

துக்கள் கீழைத்தேசங்கள் அனைத்திற்கும் பொது வாக உள்ளனவேயாம். ஆனால், நமது இந்திய தேசத்தில் இக்கொள்கைகள் விசேஷமாக வற்புறுத் தப்பட்டன. வேதாந்த சூத்திரத்திற்குப் பாஷ்யம் எழுதிய ஸ்ரீமத் சங்கராச்சாரியரும் நிலையாமையை ஒரு புறம் உணர்த்தி, வியாவகாரிக தசையில் உலக வாழ்வை வற்புறுத்திக் கூறியுள்ளார். பண்டைத் தமிழ் இலக்கியங்களும் இவ்வாறே கருதுகின்றன என்பது கலித்தொகை பற்றி மேலே எழுதியவற்றால் விளங்கும். ஆகவே இந்தியப் பண்பாட்டின் அடி நிலைக் கொள்கைகளுள் ஒன்று இப்பாரஸிகக் கவியின் தமிழ்மொழி பெயர்ப்பிலே கவிமணியால் அமைக்கப்பட்டது என்பது தெளிவாம்.

இத்துணிபிற்கு வேறொரு சான்றும் உள்ளது. கவிமணியின் பாடல்களிலே மக்கட் பண்பு பேணும் (Humanism) தன்மை பல இடங்களில் காணப்படு கின்றது. சமய நூல்களும் சமயச் சார்பான நூல் களும் மறுமையில் வீட்டுலகு அடைவதற்கு உதவு பவை. கிரேக்க இலக்கியங்களோடொப்ப, மக்களது இகவாழ்விற்கு உதவி அவர்களுடைய நலத்தைப் பேணும் நூல்கள் நமது பண்டை இலக்கியங்களாம். இவற்றை நன்கு கற்பதனால் மக்கட் பண்பு சிறந்து விளங்கும் என்பது அறிஞர் கொள்கை. தமிழின் மறுமலர்ச்சியில் இக்கொள்கையும் ஓர் அம்சமாகும். எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, ஐம்பெருங் காப்பி யங்களுட் சில, பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் முதலியன அச்சில் வெளிவந்து சில்லாண்டுகளே

ஆயின. இவற்றுள் கலித்தொகை, சிலப்பதிகாரம், திருக்குறள் முதலிய சில பண்டைப் பெருநூல்களைக் குறித்துப் புகழ்ந்து பாடி அவற்றை நம்மக்கள் கற்றல் அவசியம் என்பதை வற்புறுத்தியுள்ளமை மேலே காட்டப்பட்டது. இலக்கியக் கல்வியாலன்றியே பிற உபாயங்களாலும் நம்மக்கள் இக வாழ்க்கையில் மேம்பட்டு விளங்க வேண்டும் என்று கருதி, வேறு பல பாடல்களும் கவிமணி பாடியுள்ளார். 'வையமும் வாழ்வும்' என்ற பகுதியிலுள்ள பாடல்கள் பலவும் இத்தகையனவே.

பறந்து பறந்தெங்கும் - திரியும்
பறவை வாழ்வினைப் போல்
சிறந்த வாழ்வேதும் - இந்தச்
செகத்தில் கண்ட துண்டோ ?

* * * *

ஆதலால் எந்நாளும் அழியாத பொருளாம்
ஆன்மாவை மேம்படுத்தி அறநெறியின் நின்று
தீதெலாம் அறஒதுக்கித் திருவருளும் பெற்று
சிவஞானச் செல்வரெனத் தினம்வாழு வோமே

என்ற பாடல்கள் மேற்கூறியதனை விளக்கும்.

இந்தியப் பண்பாட்டினையும் மக்கட் பண்பு மேம்பாட்டினையும் நோக்கமாகக் கொண்டுள்ள கவிமணி அவற்றிற்குப் பகையாய் நின்று இடையூறு விளைத்துவரும் சமுதாய ஒழுக்கங்களைப் பெரிதும் இகழ்ந்து வெறுப்பது முற்றும் பொருத்தமே. இவர் இயற்றிய 'நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம்' இதற்கொரு சிறந்த சான்று. இந்

நூல் சமுதாயச் சீர்திருத்தமாகிய நன்னோக்கத்தை மேற்கொண்டு நகைச்சுவைபடப் பிரகசன முறையில் அமைந்துள்ளது. தமிழிலே ஒரு நூதன இலக்கிய வகையை இது தொடங்கியுள்ளது என்று கூறலாம். இந்நூலுள் மருமக்கள் வழியைக் குறித்து.

தீரா வழக்கும் சென்மப் பகையும்
உற்ற ருக்குள் உண்டாக்கும் வழி;
அப்பனைப் பிள்ளை அண்ட வொட்டாவழி;
பிள்ளையை அப்பன் பேணவொட்டாவழி;
புருஷனை மனைவி போற்ற வொட்டாவழி;
மனைவியைப் புருஷன் மதிக்க வொட்டாவழி
அண்ணனைத் தம்பி அடுக்க வொட்டாவழி;
தம்பியை அண்ணன் தரிக்க வொட்டாவழி;

* * * *

குடியை முடிக்கும் கொடிய தீவழி;
அடிபிடி சண்டை அகலாப் பெருவழி;
மனிதரைப் பேயாய் மாற்றும் பாழ்வழி

* * * *

இருவழிகட்கும் இடைவழியாய் வரும்
வழியிது போலிவ் வையகத் தெங்கும்
உண்டோ அம்மா! உண்டோ அம்மா!

* * * *

அழுபவர் கண்ணீர் ஆருய்ப் போம்வழி
ஐயோ! இவ்வழி ஆகா தாகாது

என்று இவர் பாடியுள்ளது மேற்கூறியதனைத் தெளிவுறுத்தும்.

இங்ஙனமாக, நமது பண்பாட்டினையே உயிர் நாடியாகக் கொண்டுள்ளன கவிமணியின் பாடல்கள். இந்நெறியைப் பின்பற்றியே தமது வாழ்வின் பெரும் பகுதியிலும் பாடி வந்திருக்கிறார். இவர் முற்போக்கான கருத்துடையவர்; தூய உள்ளமும் சீரிய நோக்கமும் படைத்தவர்; நமது சமுதாயம் பலவகை இன்னல்களும் நீங்கி அதற்குரிய உயரிய நிலையை அடைய வேண்டும் என்ற ஆழ்ந்த உணர்ச்சியைக் கொண்டவர்; இது இவருடைய சம்பாஷணையிலும் எழுத்திலும் பிரதிபலிக்கிறது. இவர் தமிழிலக்கியங்களில் ஊறியவர்; தமிழ் மக்களுடைய சரிதத்தை நன்கு உணர்ந்தவர்; தமிழர்களுடைய உயர்ந்த லட்சியங்களிலும் ஒழுக்க நியதிகளிலும் ஈடுபட்டவர்; ஆங்கிலக் கவிஞர்களின் பாடல்களில் திளைத்தவர்; பிற சமுதாய சரித்திரங்களை ஊன்றி நோக்கி உணர்ந்தவர். ஆடம்பரம் சிறிதும் இல்லாதவர்; ஆதலால், பிரசங்க மேடைகளிலும் பிரசாரக் கூட்டங்களிலும் இவரைக் காண்பது அரிது. ஆனால், அமைதியோடும் உள்ளுணர்ச்சியோடும் தமிழ் மக்களது நன்மையையே இடைவிடாது சிந்தித்து உழைத்து வருபவர். இவருடைய உழைப்பில் சுயநலம் என்பது சிறிதும் இல்லை; தூய வாழ்க்கையுடையவர்; சந்தானம் அற்றவர்; எனவே, அதுபற்றிய பாசபந்தங்களும் அற்றவர்; ஆனால், குழந்தைகளிடத்தில் பேரன்பு பூண்டவர். இவர் எழுதியுள்ள குழந்தைப் பாடல்கள் இதற்குச் சான்று பகரும். 'மலரும் மாலையும்' என்ற கவிதைத் தொகுதியை,

செந்தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமியர்க்கு
இந்நூல் உரியதாய் என்றும் வாழ்கவே

என உரிமை செய்துள்ளார்.

கவிமணியின் பிற்கால வாழ்வில் தேசியப்பற்றும் இவர் மனத்தில் இடம்பெற்றது. இந்தியாமுழுவதும் பரந்து பெருக்கெடுத்துச்செல்லும் இப்பற்றுக்குஇவர் விலக்காய் ஒதுங்கி நிற்க முடியுமா? தேசியப் பற்றில் தம்மை இழந்து நின்ற அன்பர்கள் பலர் இவருடைய கவித்வ சக்தி அதற்கும் பயன்படவேண்டும் என்று வற்புறுத்தி வந்தனர். கவிமணியின் உள்ளமும் இப்பற்றில் ஈடுபடத் தொடங்கியது. 'தேசக் கொடி', 'காங்கிரஸ்', 'கதர்' ஒற்றுமையின் உயிர் நிலை', 'நாட்டுக்கே உழைப்போம்', முதலிய பாடல்கள் இத்தேசியப் பற்றின் விளைவுகளாகும் தேசிய முன்னேற்றத்திற்கு இடையூருய் அமைந்த 'தீண்டாமை' குறித்து உணர்ச்சி ததும்பப் பாடியுள்ளார். தொழிலின் பெருமையைக் கூறுமிடத்து,

வாழ வேண்டுமெனில்—தொழில்கள்
வளர வேண்டு மையா
ஏழை யென்றெருவன்—உலகில்
இருக்க லாகா தையா

என்றனர். பெண்களின் உரிமையைக் குறித்தும் பல அழகிய பாடல்கள் இவர்பாடியுள்ளார். அவர்களுக் குரிய பெருமைகளை,

அல்லும் பகலும் உழைப்பவ ரார்? – உள்ளத்து
அன்பு ததும்பி எழுபவ ரார்?
கல்லும் கனியக் கசிந்துருகித் – தெய்வ
கற்பனை வேண்டித் தொழுபவ ரார்?

உள்ளந் தளர்வுறும் நேரத்திலே - உயிர்
ஊட்டும் உரைகள் உரைப்பவ ரார்?
அள்ளி யெடுத்து மடியிருத்தி - மக்கள்
அன்பைப் பெருக்கி வளர்ப்பவ ரார்?

மண்ணக வாழ்வினை விட்டெழுந்தே - மனம்
மாசிலா மாணிக்க மாயொளிர்ந்து
விண்ணக வாழ்வை விரும்பிடவே - நிதம்
வேண்டிய போதனை செய்பவ ரார்?

அன்பினுக் காகவே வாழ்பவ ரார்? – அன்பில்
ஆவியும் போக்கத் துணிபவ ரார்?
இன்ப உரைகள் தருபவ ரார்? - வீட்டை
இன்னகை யாலொளி செய்பவ ரார்?

என்ற செய்யுட்கள் விளக்கமாக நயம்பெற எடுத்து மொழிகின்றன.

பண்பாட்டினை உணர்த்தும் கவிமணியின் அரிய செய்யுட்களில் தமிழ் மக்கள் பெரிதும் ஈடுபட்டனர். தமிழ் நாடெங்கும் இவர் புகழ் பரந்து கமழ்ந்தது. செட்டி நாட்டரசர் ஸர். அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் கவிமணியை வரவழைத்து அன்போடு உபசரணை செய்து பாராட்டியது மேலதற்கோர் அறிகுறியே யாகும். கவித்துவத்தைப் போலவே,

அருங்குணங்களாலும் இவர் சிறந்து விளங்குகிறார் என்பதைத் தமிழுலகம் உணர்ந்தது. இவரிடமிருந்து வாழ்த்துச் செய்யுட்கள் முதலிய பெறுதற்குப் பலரும் விரும்பினர். இதன் பயனாக, பல சமயோசிதச் செய்யுட்கள் வெளிவந்தன. பல சந்தர்ப்பங்களை முன்னிட்டும் அரிய செய்யுட்களை இயற்றித் தமிழ்மக்களை மகிழ்வித்துள்ளார். எட்டையபுரத்தில் பாரதி மண்டபம் திறக்கப்பட்டபொழுது இவர் பாடிய செய்யுட்கள் இங்கே குறிப்பிடத்தக்கன.

1943 ல் தமிழ் நாட்டில் பொங்கியெழுந்த தமிழிசை இயக்கத்தின் அலைகள் கவிமணியின் உள்ளத்திலும் மோதின. அக்காலந்தொட்டுப் பற்பல கீர்த்தனங்களும் இவர் பாடி வருகின்றனர். இவைகள் பெரும்பாலும் தெய்வம் பற்றியனவாக உள்ளன. முத்துத்தாண்டவர் பதங்கள் முதலியவற்றிலே நாம் காணும் நயமும் அபிநயத் தகுதியும் இவற்றிலும் காணப்படுகின்றன.

பல்லவி

சொன்ன தெல்லாம் மறந்தாரோ? - என்னைச்
சோதனை செய்யத் துணிந்தாரோ?

அநுபல்லவி

செந்நெற் கழனி சூழும் தில்லைப் பதியாரன்று
கன்னம் குழிய முத்தம் கனிந்து கனிந்தளித்துச்
(சொன்ன)

சரணம்

வருவார் வருவாரென்று நித்தம் - வரும்
வழிமேல் விழியாய் நின்றேன் தோழி
ஒருவாரம் ஒருமாதம் ஒருவருஷமும் போச்சே
ஒருத்தி கிறுக்கி என்றிவ் வூரும் சிரிக்கலாச்சே
(சொன்ன)

இது போன்று கவிதைச் சுவை அமைந்த கீர்த்தனங்களும் பல உள்ளன. பாரதி மண்டபம் நிறுவப் பெற்ற பொழுது பாடிய கீர்த்தனம் வருமாறு:

பல்லவி

மண்டபம் வாழ்கவே - பாரதி
மண்டபம் வாழ்கவே

அநுபல்லவி

நண்டமிழ் போல அவன்
தந்த கவிகள் போல
எண்டிசை யும்போற்றும்
இமய மலையே போல (மண்டபம்)

சரணம்

பாரத சக்திவளர் பீடமாய்
பைந்தமிழ்க் காலயமாய்
வீர சுதந்திரத்தின்
வெற்றி நிலைக்களமாய்
சூரிய சந்திரர் இத்
தொல்லுல குள்ளளவும் (மண்டபம்)

இதுபோன்று அழகுபெற வாய்ந்த கீர்த்தனங்களும் பல. தமிழ் நாட்டில் இசையும் அபிநயமும் தனிப் பட்ட சிறப்புடன் விளங்கி நமது பண்பாட்டின் மேன்மையை நமக்கு உணர்த்துகின்றன. கவிமணி யின் கீர்த்தனங்கள் இந் நெறியிலும் நமது பண் பாட்டைப் போற்றியிருப்பது கண்டு மகிழத்தக்கது.

இவர் பல கீர்த்தனங்களையும் பதங்களையும் படித்துள்ளார்; ஆனால் இசைப் பயிற்சி பெற்றுக் கொண்டதில்லை. இங்ஙனமாகவும், இவர் கீர்த் தனம் முதலியவற்றைப் பாடுதல் பொருத்தமாகுமா என்று சிலர் கேட்கலாம். சாகித்தியம் இயற்றுப வர்க்குச் சங்கீதப் பயிற்சி நிரம்பி யிருப்பது அருமை; இவ்வண்ணமே சங்கீதம் பயின்றவர்க ளுக்குச் சாகித்தியத்திற்கு வேண்டும் மொழிப் பயிற்சி பெரும்பாலும் இருக்க மாட்டாது. இப் பொழுது தமிழ் நாட்டில் வழங்கிவரும் பதங்களும் கீர்த்தனங்களும், மொழி பற்றிய அளவில், பிழை மயமாயிருப்பதன் காரணம் இதுவே. வடமொழியி லுள்ள பதங்களும் கீர்த்தனங்களும் இவ்வாறே பிழை பொதிந்துள்ளன என்று தெரிகிறேன். இக் குறை நீங்க வேண்டுமாயின் சாகித்தியத்தின் ஆசிரியரும் இசை அமைப்பவரும் வேறு வேருக இருக்கவேண்டும். நமது தமிழ்நாட்டில்பெரும்பாலும் பாட்டு இயற்றுபவர் வேறு; பண் அமைப்பவர் வேறு. இது தொன்று தொட்டுவரும் வழக்கம். உதா ரணமாக, பரிபாடலைக் கூறலாம். தேவாரப் பாடல் களுக்கு அவை தோன்றிச் சில நூற்ருண்டுகளுக்குப்

பின் பண் அமைக்கப்பட்டது என்பது பிரசித்தம். மேலை நாடுகளிலும் சாகித்தியம் இயற்றுவோரும் இசை யூட்டுவோரும் வேருகஇருப்பதுவே வழக்கம். இவ்வழக்கத்திற்கியையவும், தமிழின் நயம், கவித்துவத்தின் நயம்: இவற்றைப் பேணியும் கவிமணி இக்கீர்த்தனம் முதலியவற்றைப் பாடியுள்ளார். இசையூட்டுவோர் கீர்த்தனங்களைப் பலமுறைகற்று, அவற்றின் ரஸபாவங்களில் ஊறி, பின் தக்கதாய இசையை அமைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

கவிமணியின் தமிழைக் குறித்துச் சில வார்த்தைகள். இவருடைய தமிழ் என்றும் மனத்தில் போற்றி வைக்கத்தகும் பொற்களஞ்சியமாக உள்ளது. நல்ல தமிழ்; நமது மூதாதையரின் பண்பாட்டிலும் மரபிலும் ஊறித் தோய்ந்து இனிமை முற்றிய தமிழ்; உண்மை நிரம்பிய தமிழ்; கற்ருேர்க்கும் கல்லார்க்கும், நகரத்தினர்க்கும் நாட்டுப் புறத்தினருக்கும் ஒன்றுபோலவே இனிக்கும் தமிழ். இவ்வியல்புடைய தமிழ் இப்பொழுது நமது நாட்டில் அரிதாய்ப் போய்விட்டது. இழக்கமுடியாத இவ்வரிய செல்வத்தைப் பல ஆண்டுகளுக்குப்பின் மீண்டும் நமக்குப் போற்றி அளித்தவர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையே.

உண்மையான தமிழ் மரபு உணர்ச்சி வேண்டுமாயின் இவரது பாடல்களையே கற்கவேண்டும். மிகப் பூர்வகாலத்துள்ள இயற்கைத் தமிழின் இனிமை காண வேண்டுமாயின், இப்பாடல்களையே மீண்டும் மீண்டும் கற்கவேண்டும். அமர்ந்த இனிய

மனோரம்மியான தமிழ் மணம் வேண்டுமாயின், கவிமணியின் இப்பாடற் பகுதிகளிலே இனிது நுகரலாம். வருங்காலத்துக் குரிய தமிழ் வேண்டு மாயின், இவற்றையே பலமுறை கற்கவேண்டும்.

மேலே குறித்துள்ள பண்பாட்டுணர்ச்சிகளின் காரணமாகத் தோன்றிய கவிதைகளைக் குறித்து இனி நோக்குவோம். கவிதையின் இயல்பை வரை யறை செய்வதற்குச் சில நூற்றாண்டுகளாக நூற்றுக் கணக்கான இலக்கிய ஆராய்ச்சியாளர்கள் முயன்று வந்திருக்கிறார்கள். ஆனால், ஒருவரது முயற்சி யேனும் இன்று வரை முற்றும் திருப்திகரமாய் முடிந்துள்ளது என்று சொல்வதற்கு இல்லை. சிவ பெருமான் தன்மையைத் தான் கவிதையும் கொண் டிருக்கிறது. அவரது அடியையும் முடியையும் மாலும் அயனும் காணமுடியவில்லை என்பர். அது போலவே கவிதையின் இயல்பையும் ஆராய்ச்சி யாளர் கண்டுபிடிக்க முடியவில்லை. எனினும் இம் முயற்சிகள் பயனற்றன அல்ல.

கவிதையின் இயல்புகள் காலந்தோறும் இடந் தோறும் சூழ் நிலைகளுக்குத் தக்கபடி வேறுபடு கின்றன. அவற்றுள் ஒரு சில அம்சங்களையே ஒவ்வோர் ஆராய்ச்சியாளரும் அறிய முயல்வது. ஆனால், தாம் கூறுவதே எல்லா வகையாலும் முற்ற முடிந்த உண்மையெனத் தாமும் நம்பி வாசகர் களையும் மயங்கச் செய்து விடுகிறார்கள். இக்குறை யினால் இன்னோரது நூல்கள் பயனற்றுப் போய்விட வில்லை. கவிதை இயல்புகள் ஒரு சிலவற்றின்

முக்கியத்துவம் நன்ருக நம்மனத்தில் ஆழ்ந்து பதிந்து விடுவதற்கு இவ்வகை நூல்கள் உதவுகின்றன. அன்றியும் இந்நூல்களை நாம் கற்குந் தோறும் நமது அறிவு விசாலமடைகிறது. கவிதை அனுபவம் மேலும் மேலும் முதிர்வதற்கு இடமேற்படுகிறது.

ஆராய்ச்சியாளர்கள் எல்லோரும் உண்மைக் கவிதை பற்றிய ஒரு விஷயத்தில் ஒற்றுமை மனமுடையவராய் இருக்கிருர்கள். சிறந்த உண்மையான கவிதையைப் படித்த அளவிலே நம் மனத்திலே விவரிக்க முடியாத ஒரு இன்பம் உண்டாய் விடுகிறது. 'காதல் பிறந்த கதை', 'கருணைக் கடல்' முதலியன இத்தகுதி வாய்ந்த உண்மைக் கவிதைகளாம். இவை போன்ற கவிதைகளை ஒருமுறை கற்று இன்புறுவதோடு நமது மனம் முற்றும் திருப்தி அடைந்து விடுவதில்லை. மீண்டும் மீண்டும் இவைகளை நுகரவேண்டும் என்னும் அவா நம்மனத்தில் சுரக்கின்றது. நுகர நுகரத் தெவிட்டுவதில்லை, என்றும் மாருத இளமைத் தன்மையோடு நின்று நம்மனத்தை இப்பாடல்கள் கவர்கின்றன.

கவிமணியின் பாடல்களிற் சில சிறு குழந்தைகளின் சிவப்பூறிய மலர் வாயினின்றும் தேனிலும் இனியவாய் மதுரித்துச் சுரக்கின்றன; சில நமது பெண்களின் இனிய குரலுக்கு இனிமை அளித்து அவர்களை மாசற்ற இன்ப உலகில் செலுத்துகின்றன; சில இளைஞர்களின் உள்ளத்தைக் கவர்ந்து இடங்கொண்டு அதனை அன்புத் தேனூற மலர்விக்

கின்றன; சில அறிவில் முதிர்ந்து, தமிழில் முதிர்ந்து கவித்துவ உணர்சியிலும் முதிர்ந்து விளங்கும் நல்லறிஞர்களது ஆன்மாவைக் குழைவித்து, இனிமை கனிந்து ரஸம் ஊறிக் களிப்புறச் செய்கின்றன. பல பாடல்கள் பல தலைமுறைகளாகத் தமிழ் மக்களை இன்பூட்டி நிலவுமென்று உறுதி கூறலாம். 'கருணைக் கடல்' முதலிய சிலபாடல்கள் என்றும் வாடாமலர்களாய் நித்திய மணங்கமழ்ந்து தமிழன்னையின் திருவடிகளில் ஒளிரும் என்று கருதலாம்.

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை தற்காலத்து வாழும் கவிஞர்களில் தலைசிறந்தவர்.

2. மருமக்கள்வழி மான்மியம்

I

நாஞ்சில் நாடு இப்போது திருவிதாங்கூர் இராச்சியத்தின் தெற்குப் பகுதியாயுள்ளது. பெரும் புகழ் பெற்ற 'குமரி' இந்நாட்டினகத்தேதான் இருக்கிறது. இந்நாட்டினர் அனைவரும் தமிழார்வம் மிக்கவர்களாகவே உள்ளவர்கள். இன்றும் இந் நாட்டில் தமிழ்மொழியே வழங்கி வருகிறது. இன்றிருப்பது போலவே சுமார் 1800 ஆண்டுகட்கு முன்பும் தமிழ் கூறு நல்லுலகத்தின் பகுதியாகவே இந்நாடு விளங்கிற்று. தொல்காப்பியத்தின் பாயிரத்தில்,

> வடவேங்கடம் தென்குமரி
> ஆயிடைத்
> தமிழ் கூறு நல்உலகத்து

என வருவதைக் கொண்டு மேற்கூறியதன் உண்மை தெளியலாம். இப்பாயிரத்தில் வரும் அதங்கோட்டாசான் குமரிக்கருகிலுள்ள திருவிதாங்கோடு என்னும் ஊரினர் என்பதும் இங்கே மனங்கொள்ளத் தக்கது. பாண்டியனுக்குரியதாகக் 'குமரிச்சேர்ப்பன்' என்று ஒரு பெயர் திவாகரத்தில் காணப்படுகிறது. இப் பெயரால், இந்நாடு தொன்றுதொட்டுப் பாண்டியனுக்குரியதாயிருந்தமை புலனும். பல்யாக சாலை

முதுகுடுமிப் பெருவழுதியைக் குறித்த அச்சமும் புகழும் தெற்கின்கண் உள்ள கன்னிக்குத் தெற்கும் பரவுகவென அப்பாண்டியனைக் காரிகிழார் என்ற புலவர் பாடுகின்றார் (புறம் 6). பாண்டியனுக்கு உரியதாகவே குமரியை அடுத்துள்ள பஃறுளியாறுங் கூறப்பட்டுள்ளது (புறம் 9). தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைக் குறித்து,

தென்குமரி வட பெருங்கல்
குணகுட கடலா எல்லைத்
தொன்று மொழிந்து தொழில் கேட்ப (70–72)

என மதுரைக்காஞ்சி என்ற நூல் கூறுகிறது. இங்கே 'தொன்று மொழிந்து' என்பது 'மிகவும் பழங்காலந்தொட்டுத் தொடர்புடையரா யுள்ளமையைப் பாராட்டிச் சொல்லி' எனப் பொருள்படுதலாலே, பாண்டியர்களுக்கு அநாதியாகவே தென் குமரியைச் சார்ந்த நாடு உடைமையாயிருந்த தென்பது விளங்கும்.

பாண்டியர் பரம்பரைக் குரியதாயிருந்த இந் நாடு சங்ககாலத்தில்தானே சேரர்களால் பலமுறை அபகரிக்கப்பட்டதெனப் புறநானூற்றுலும் (17) பதிற்றுப் பத்தினுலும் அறிகிறோம். பிற்குறித்த நூலில்,

ஆரியர் துவன்றிய பேரிசை இமயந்
தென்னங் குமரியொடு ஆயிடை
மன்மீக் கூறுநர் மறந்தபக் கடந்தே (11)

எனவும்,

வடதிசை யெல்லை இமைய மாகத்
தென்னங் குமரியொடு ஆயிடை அரசர்
முரசுடைப் பெருஞ்சமந் ததைய ஆர்ப்பெழச்
சொல்பல நாட்டைத் தொல்கவின் அழித்த
போரடு தானைப் பொலந்தார்க் குட்டுவ (43)

எனவும் வரும் அடிகள் குமரியைச் சார்ந்த நாட்டைச் சேரர்கள் வென்று அடிப்படுத்தினர் என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன.

நாஞ்சில் என்ற பெயரும் சங்ககாலத்தில் வழங்கி வந்த தொன்றேயாம். புறநானூற்றிலே,

உயர் சிமைய உழாஅ நாஞ்சிற் பொருந (139)

என வருகின்றது. இங்கே 'உழாஅ நாஞ்சில்' என்பது 'பாயா வேங்கை', 'பறவாக் கொக்கு' என்பனபோல. உழுதல் செய்யாத நாஞ்சில் அஃதாவது, நாஞ்சில் என்னும் மலையெனப் பொருள்படுகின்றது. இது மலையேயாம் என்பது 'உயர் சிமைய' (உயர்ந்த சிகரத்தையுடைய) என்ற அடையால் உணரலாகும். இப் பழம் பெருநூலின் உரைகாரரும் 'நாஞ்சில் என்னும் பெயரையுடைய மலைக்கு வேந்தே' என்று இவ்வடிக்குப் பொருள் கூறினர். நாஞ்சில் மலையைத் தன்னகத்தே கொண்ட நாடு 'நாஞ்சில் நாடு' ஆகும். இந்நாட்டிலே வீரத்தாற் சிறந்து விளங்கிய வள்ளுவன் என்னும் பெயருடையான் ஒருவன் சங்ககாலத்தில் வாழ்ந்தனன். இவனைக் குறித்துப் புறநானூற்றில் ஐந்து செய்யுட்கள் (137, 138, 139, 140, 380) உள்ளன. இவற்

றுள் நான்கு செய்யுட்களில் இவன், 'பொருநன்' என்றே சிறப்பிக்கப்படுகிருன். இவன் பெருங் கொடை வள்ளலாகவும் விளங்கியவ னென்பது பாணுற்றுப் படையாகப் பாடப்பெற்ற 138-ம் செய்யுளால் தெளியலாம். இவன் ஒரு வேந்தனுக்குப் படைத் துணையாய் அமைந்தவனென்பது,

ஈதல் ஆனுன் வேந்தே வேந்தற்குச்
சாதல் அஞ்சாய் நீயே (139)

என இவனது வேந்தனையும் இவனையுங் குறித்து வரும் அடிகளால் அறியலாகும். இவ்வேந்தன் சேரன் என உரைகாரர் கூறுவர். ஆனுல் 380-ம் புறப்பாட்டு இவனைத் 'தென்னவர் வயமறவன்' என விசேடிக்கின்றது. 'தென்னவர்' என்பது பாண்டியரையே சிறப்பாக உணர்த்துமாதலால், பாண்டியனே இவனது வேந்தனெனத் துணிதல் வேண்டும். 'சாதல் அஞ்சாய்' என்ற தொடரை நோக்கும் போது, பிற்காலத்து அமைக்கப்பெற்ற 'சாவேறு' என்னும் வீரர் தொகுதியினரைப்போல் இவ்வள்ளு வன் சிறந்து மேம்பட்டவனெனக் கருதுதல் தக்க தாகலாம்.

சங்ககாலத்துக்குப் பின் சுமார் 250 ஆண்டு களாக (கி. பி. 650 வரை) நாஞ்சிஞட்டுப் பகுதி சேரர்களது ஆட்சிக்குப்பட்டிருந்ததென ஊகித்தற் கிடமுண்டு. ஏனெனின், திருஞானசம்பந்த சுவாமி களது காலத்தவரான நெடுமாறர் சேர அரசனேடு கோட்டாற்றிலும் விழிஞத்திலும் போர் செய்தன

ரெனப் பாண்டிக்கோவை அறிவிக்கின்றது. கோட்டாறு மதில் முதலியவற்ருல் நன்கு காவல் செய்யப்பட்ட ஒரு நகரமாக முற்காலத்தில் இருந்தது. அங்கே ஒரு பெரும் போர் நிகழ்ந்தது. அதனருகில் விழிஞத்தில் கடலிடையே போரொன்றும் நிகழ்ந்தது. 'விண்டார்பட விழிஞக் கடற் கோடியுள்' என்று கூறப்படுகின்றது (*இறை. உரை. செய். 30). இப்போரில் சேரனைக் காட்டகத்து வெருட்டியோட்டி (செய். 37) அவனது தென்னுட்டை நெடுமாறர் கைக்கொண்டார். (செய். 239). இங்ஙனம் கொண்ட நாடு எவ்வளவு காலம் வரையில் மீண்டும் பாண்டியர் ஆட்சிக்கு உட்பட்டிருந்த தென அறியக்கூடவில்லை. ஆனல் நாஞ்சினுட்டுக்கு இயற்கை அரணுக அமைந்த மலைத் தொடராலும் பிற இடையூறுகளாலும் பாண்டியர்களுக்குத் தாம் கைப்பற்றிய நாட்டைக் காப்பாற்றுதல் அரிதாயிருந்திருத்தல் வேண்டும். ஆகவே, அவர்களிடமிருந்து சேர அரசர்கள் தாமதமின்றி நாஞ்சினுட்டை மீண்டும் பெற்றனரென்றுதான் ஊகித்தல் தகும். 10-ம் நூற்ருண்டிலிருந்து 13-ம் நூற்ருண்டு இறுதியாகச் சோழ அரசர்கள் தென்னுட்டரசர்களில் தலைமை பூண்டனர். அக்காலத்துச் சேர வமிசத்தினரிடமிருந்து சோழரிடம் நாஞ்சினுடு கைம்மாறியது. முதற் பராந்தகன், கேரளாந்தகன் என்னும் விருதுடைய முதல் ராஜராஜன்: இவர்களுடைய சாசனங்கள் நாஞ்சினுட்டில் பல இடங்களிலும் காணப்படுகின்றன. வீர சோழியம்

---

* இங்கே காட்டுவது பவானந்தர் கழகப் பதிப்பு.

இயற்றுவித்த வீரராஜேந்திர சோழன் (கி. பி 1062) கோளனை வென்றதாக ஒரு சாசனங் கூறுகின்றது. முதற் குலோத்துங்கன் (கி. பி. 1070-1118)

> 'கன்னியுங் கைக்கொண்டு புனிதந் தென்னாட்டு
> எல்லை காட்டிக் குடமலைநாட் டுள்ள
> சாவேறு எல்லாந் தனிவிசும்பு ஏற...
> நறுமலர் குலையக் கோட்டாறு உட்பட
> நெறிதொறும் நிலைகளிட்டு அருளி'னன்

எனப் பிறிதொரு சாசனம் தெரிவிக்கின்றது. இரண்டாங் குலோத்துங்கன் காலத்தும், மூன்றும் ராஜராஜன் காலத்தும், சோழரது ஏகாதிபத்தியத்துக்கு இந்நாடு உட்பட்டிருந்ததென்றும் சாசனங்கள் உணர்த்துகின்றன. இங்ஙனம் உட்பட்டிருந்தமையால் கோட்டாற்றிற்கு 'மும்முடிச் சோழபுரம்' என்றும் பின்னர் 'சோழ கேரளபுரம்' என்றும் புதிய பெயர்கள் உண்டாயின. கன்னியாகுமரியில் தேவியைக் குறிக்க நேரிடும் சாசனங்களில் 'ராஜராஜப் பாண்டிநாட்டு உத்தம சோழ வளநாட்டுப் புறத்தாய நாட்டுக் குமரிக் கன்னியா பகவதியார்' என வருகின்றது. நாஞ்சினாடு உத்தம சோழ வளநாட்டின் பிரிவாகவே ஒரு சாசனத்தில் (T. A. S. I, 163) கூறப்பட்டிருக்கிறது. சாசனங்களிற் காணும் நாட்டுப் பெயர்களுள் இந்நாஞ்சினாடு என்ற பெயரொழிய அதனோடியைந்த ஏனைப் பெயர்களெல்லாம் இப்பொழுது மறைந்துவிட்டன.

சோழ வம்சம் வலி குன்றியொழியவே, சேர அரசர்கள் மீண்டும் நாஞ்சினாட்டுப் பிரதேசத்தைக்

கைப்பற்றியாளத் தொடங்கினர். இங்ஙனம் ஆளத் தொடங்கியது, கி. பி. 15-ம் நூற்ருண்டின் முதற் பகுதியாயிருக்கலாமெனத் தோன்றுகிறது. சேர அரசர்கள் தங்கள் உரிமையை நாட்டியபோதிலும், பாண்டிய நாடு முதலியவற்றை ஆண்டு வந்த விஜய நகரப் பேரரசர்களின் பிரதிநிதிகளாலும் மதுரைப் பிரதேசத்தையாண்ட நாயக்க அரசர்களாலும் அடிக்கடி அல்லற்பட்டனர். படையெடுப்புக்கள் நிகழ்ந்த வண்ணமாயிருந்தன. நாஞ்சிநுட்டுக்கும் திருநெல்வேலிக்கும் இடைப்பட்ட பிரதேசம் அடிக்கடி கைம்மாறி வந்தது. இப்பிரதேசத்தைத் 'திருவடி தேசம்' என்று சாசனங்கள் குறிப்பதி லிருந்து, இது நீண்ட காலமாகச் சேர அரசர்கள் கைவசமிருந்ததெனக் கருதவேண்டியதாயிருக் கிறது. ஆனுல் விஜயநகரப் பிரதிநிதிகளுள் விட்டல ராயர் முதலியோரும் நாயக்கர் சேனுதிபதியான ராமப்பய்யன் முதலியோரும் திருவடி தேசத்தின் உட்பகுதிக்கே படையெடுத்துச் சென்று தங்கள் அரசரின் பெருமையை நிலைநாட்டினர். நாயக்கர் படை கொல்லம் 810 முதல் (கி. பி. 1635) நாஞ்சி நுட்டை மிகவும் துன்புறுத்தியது என்றும், இது போன்ற காரணங்களால், கொல்லம் 849 முதல் 869 வரை, நிலவரி முதலியன நீக்கப்பட்டன என்றும் முதலியார் ஓலைச் சாசனமொன்று தெரிவிக் கின்றது. கி. பி. 1700-க்குப் பின்தான் நாஞ்சிநுட் டில் சிறிதளவு சமாதானம் ஏற்பட்டதென்று சொல்லலாம். ஆனுல் உள்நாட்டுக் கலகங்களும் திப்பு சுல்தானது படையெடுப்பால் வந்த விபத்துக்

களும் நாஞ்சினுட்டினருக்குப் பெருந்துன்பம் விளேத்தன. இதுவும் நீங்கி, கடந்த நூறு ஆண்டுகளாகத் தான் நாடு அமைதி பெற்றிருக்கிறது.

II

மேலே விவரித்த சரித்திரத்தால் நாஞ்சினுட்டினரின் நிலே மிகவும் வருந்தத் தக்கதாயிருந்தமை எளிதின் அறியத்தகும். அவர்களிற் பல குடும்பத்தினர் பல நூற்ருண்டுகட்கு முன்னே அங்கே குடியேறியவர்கள்; ஒரு சில குடும்பத்தினர் சோழர் படையெடுப்போடு வந்தவர்களா யிருக்கலாம்; இன்னும் ஒரு சில குடும்பங்கள் அதற்கு முன்பு அங்கு வந்துசேர்ந்தனவாகக்கூட இருக்கலாம்; சில பூர்வ குடிகளும் இருக்கலாம்; ஆனுல் பெரும்பாலோர் பாண்டிய நாடு சோணுடுகளிலிருந்து சென்றவர்களேயாவர். நாஞ்சினுட்டினர் பொதுப்பட இங்ஙனமிருப்ப, அந்நாட்டு வேளாளர் அனேவரும் வெளி நாடுகளிலிருந்து பல நூற்ருண்டுகட்கு முன்பு அங்கே குடியேறிப் படைத் தலேமை பூண்டும் படைவீரராயமைந்தும் நாட்டின் ஆட்சி முறையில் அதிகாரம் வகித்தும் வந்தவர்களே. இவர்கள் நாஞ்சினுட்டில் பெருநிலக்கிழமை பூண்டும் இருந்தனர். பாண்டி முதலிய பிரதேசங்களிலிருந்து வரும் படைகளேத் தடுத்தும், நாட்டின் ஆட்சியில் அதிகாரம் தாங்கி அரசியல் செவ்வையாக நடைபெறுவதற்கு உதவி புரிந்தும், உழவு, வாணிபம் முதலிய தொழில்களே மேற்கொண்டு நாட்டின் நலத்தைப் பேணியும் பெருந்தொண்டு புரிந்து

வந்தனர். சேர அரசர்களுக்கு இன்றியமையாத் பெருங்குடிகளாயமைந்தனர். அரசியல் நடைபெறுவதற்கு வேண்டும் பொருள் வருவாய் பெரும்பாலும் இந்நாஞ்சினுட்டினரிட மிருந்தே பெறக்கூடியதாயிருந்தது, சுருங்கக் கூறின் சேர ராஜ்யத்தின் உயிர் நிலையாயிருந்து, அரசு செழிக்கும்படி செய்தது நாஞ்சினுடாகும்.

ஆனுல், நாஞ்சினுட்டினர்—முக்கியமாக நாஞ்சினுட்டு வேளாளர்—எப்பொழுதும் தங்கள் தாயகமாகிய சோழ பாண்டிய தேசங்களையே நோக்கிக் கொண்டிருந்தனர். அவர்களுடைய வழக்கவொழுக்கங்களெல்லாம் பாண்டி நாட்டிலுள்ள வேளாளர்களுடைய வழக்க வொழுக்கங்கள். அவர்களுடைய குடும்பத் தெய்வங்கள் பாண்டி நாடு முதலிய இடங்களில் இருந்தன. அவர்களுடைய கொள்வினை கொடுப்பு வினையெல்லாம் பாண்டி முதலிய நாட்டினரோடு நிகழ்ந்தன. அவர்கள் தாய்மொழி தமிழ்; அவர்கள் போற்றி வந்த இலக்கியங்கள் தமிழிலக்கியங்கள்; அவர்களுடைய ஆசா பாசமனைத்தும் அப்பாண்டி முதலிய நாடுகளோடு பின்னிக்கிடந்தன. இந்த நிலையில் அவர்களைத் தமது நாட்டு நிலக் குடிகளாகச் செய்துவிட வேண்டுமென்று ஒரு சேர அரசர் எண்ணியது முற்றும் இயல்பேயன்றோ?

இதற்கேற்ப, கர்ணபரம்பரைச் செய்தியொன்று நாஞ்சினுட்டுவேளாளரிடை வழங்குகிறது. அவர்கள் தங்களுடைய பூர்விக நாட்டிற்குப் போய்விடாதபடி

ஒரு சேர அரசன் மருமக்கள்-தாயச் சட்டத்தை அவர்கள் மேற்கொள்ளும்படி செய்தனனென்பது தான் இக்கர்ண பரம்பரை. இந்தச் செய்தி உண்மையாயின், இது அரியதோர் அரசியற் சூழ்ச்சியாகும். வேறொரு செய்தியும் வழங்குகின்றது. பாண்டியனொருவனுக்கும்சேரனொருவனுக்கும்இந்நாஞ்சினாட்டின் உரிமையைப்பற்றி விவாதம் நிகழ்ந்தது.

வஞ்சி நாடதனில் நன்செய் நாடு எனச்
செந்தமிழ் வழங்குந் தேயமொன்றுஉளது; அதன்
அந்தம்இல் பெருவளம் அறிவார் யாரே?
மருதமும் நெய்தலும் மயங்கி அங்கெங்கும்
புரையறு செல்வம் நிலைபெற வளரும் (II, i, 75–79)

* * * *

இப்பெருந் தேயத்து எங்கும் இராப்பகல்
தப்பினும் மாரி தன் கடன் தவறா
கோண்மூ என்னுங் கொள்கலங் கொண்ட
அமிழ்தினை அவ்வயிற் கவிழ்த்தபின் செல்வழி
வடியும் நீரேநம் மிடிதீர் சாரல் (II, i, 101–105)

* * * *

நாவியால் தம்முடல் நீவிடிற் சிரிக்குஞ்
சிறுமியர் என்னஅச் செழுநில நங்கை
உழுபடைக் கொழுமுனை தொடுமுனங் கூசி
உடல்குழைந்து எங்கும் உலப்பறு செல்வப்
பயிர்மயிர் சிலிர்த்துப் பல்வளம் நருவள் (II, ii, 140–144)

* * * *

எங்கட்கு அங்நாடு உரித்தாம்; அங்குப்
பரவு பாடையும் விரவும் ஆசாரமும்
நோக்கில் வேறொரு சாக்கியம் வேண்டா (II, iii, 77–79)

என்று மனோன்மணீயம் கூறுமாறு பாண்டியன் தன் கட்சியை எடுத்துரைத்தனன். மேலும் 'பாண்டியன் அணை' என்பதும், நாஞ்சினாட்டினர் மக்கள் தாயிகளாயிருத்தலும் அந்நாடு தனக்குரியதேயென்பதை வலியுறுத்துகின்றன என்றனன். பாண்டியன் ஒருவனது நட்பின் ஞாபகார்த்தமாகச் சேர அரசனொருவனாற் பாண்டியன் அணை கட்டப் பெற்றதென்றும் நாஞ்சினாட்டினர் மருமக்கள்–தாயிகளே என்றும் வஞ்சியர் பூபதி வாதித்தனன். முடிவில் நாஞ்சினாட்டினர் மக்கள் தாயிகளா அல்லது மருமக்கள்–தாயிகளா என்பதைப் பொறுத்ததாயிற்று இவ்வுரிமை விவாதம். இதனை அந்நாட்டினரே தீர்க்க வேண்டியதாயிற்று. அவர்கள் எக்காரணத்தாலோ சேரர் குடிகளாய் வாழ்தலை விரும்பினர். இவ் விருப்பத்திற்கிணங்க, தாங்கள் மருமக்கள்–தாயிகளே என்றும் அத் தாய முறையைத் தங்கள் முன்னோர்கள் மேற்கொண்டு விட்டார்களென்றும் சான்றுகூறி விவாதத்தை முடித்தனர். இது நிகழ்ந்தது கொல்லம் 292-ம் ஆண்டில்* (அதாவது கி. பி. 1116) என்று ஸ்ரீபத்மநாப சுவாமி கோயிலிலுள்ள ஓர் ஓலைப்பத்திரம் தெரிவிக்கிறதெனத் திரு

---

* கலைமகள் 1, 585 பார்க்க. இங்குக் குறிப்பிட்ட காலம் சோழரது ஆதிக்ய காலம்; ஆதலால் இக்காலக் குறிப்பு ஐயப்பாட்டிற்கிடமுயுள்ளது.

விதாங்கூர்த் தேசச் சரித்திரம் (Travancore State Manual) கூறுகிறது.

இங்கே கூறிய இருசெய்திகளாலும் அநாதியாக மக்கள்—தாய முறையைக் கொண்ட நாஞ்சிநாட்டு வேளாளர் அரசியற் காரணங்கள்பற்றி மருமக்கள்-தாயமுறையைக் கைப்பற்றின ரென்பது உறுதியாகின்றது. பிற்கூறிய தாய முறையின் முக்கியாம்சங்கள் மிகவும் விசித்திரமானவை. ஒரு காரணவனது பூர்விகச் சொத்து அவனது சகோதரியின் குழந்தைகளுக்குத் தாயமுறைப்படி இறங்கும். அவனுடைய குழந்தைகளுக்கு 'உகந்துடைமை' என்னப்படும் ஒரு சிற்றுரிமையைத் தவிர வேறு யாதொரு பாத்தியதையும் இல்லை. சகோதரியின் குழந்தைகளுக்கும் பூர்விகச் சொத்தைப் பாகப் பிரிவினை கேட்க உரிமையில்லை. இந்நிலையில்தன்குழந்தைகள் ஒரு பக்கமும் தன் சகோதரிகளின் குழந்தைகள் ஒரு பக்கமுமாகக் காரணவனை அரித்துத் தின்பது தான் நாஞ்சிநாட்டுக் குடும்பத்தின் சாதாரண கதியாய் விட்டது. இயற்கையான அன்பு தன் குழந்தைகள்மீது செல்ல, செயற்கையான சட்டம் அவ் அன்பிற்கு இடங்கொடாதபடி, தன் சகோதரிகளின் குழந்தைகளுக்கு அவகாசிகள் நிலையிற் குடும்பச் சொத்தைக் கொடுக்கும்படி செய்தது. சகோதரிகளின் குழந்தைகளுக்குச் 'சேஷகாரர்' என்று பெயர். இவர்களின் இதம்போல் காரணவன் நடக்கத் தவறினால், அவனைக் 'குடும்பதோஷி' என்று கூறிக் காரணவ ஸ்தானத்திலிருந்து நீக்க

வேண்டும் வழி தேடுவார்கள். இதனுல் எப்போதும் கோர்ட் விவகாரம்தான். குடும்பச் சொத்தை அபி விருத்தி செய்ய வேண்டுமென்று காரணவன் நினைப்பதற்கு இடமே இல்லாமற் போய்விட்டது. குடும்பச் சொத்தும் பாழாகும் நிலையில் வந்துவிட்டது. நாஞ்சினுட்டிலுள்ள பெருங் குடும்பங்களிற் பெரும்பாலன இவ்வாருக அல்லற்பட்டுத் தவித்துக் கொண்டிருந்தன.

நாஞ்சினுட்டுப் பெண்களின் துன்பம் சொல்லி அளவிட முடியாது. பல தாரங்களை ஒருவன் மணந்து கொள்ளலாம். இங்ஙனம் பலருள் ஒருத்தியாய் வாழ்வது நாஞ்சினுட்டில் சர்வ சாதாரணமாய்ப் போயிற்று. கணவன் இறந்த பிற்பாடு, மறுமணம் செய்துகொள்ளும் உரிமை விதவைக்கு இருந்தது. இவ்வுரிமையால் பெண் மக்களின் அல்லற்பாடு மிகுந்ததேயன்றிக் குறைவுபடவில்லை. தான் மணந்த மனைவியை ஆதரித்துக் காப்பாற்ற வேண்டுமென்ற பொறுப்பைக்கணவன்அவ்வளவாக மேற்கொள்ளவில்லை. சேஷகாரர்களுக்குக் காரணவனுடைய மனைவி மக்களைக் கவனிக்கவேண்டும் பொறுப்புச் சிறிதும் இல்லை. இவ்வாருன பல குறைகளினுல் பெண்களின் நிலைமை பெரிதும் பரிதபிக்கத்தகுந்ததாயிருந்தது.

இந்நிலைமைகளையெல்லாம் நோக்கி, தங்களுக்குரிய அவகாசக் கிரமம் பற்றிய சட்டத்தை மாற்றியமைக்க வேண்டுமென்ற கருத்து நாஞ்சினுட்டில் முற்போக்கில் அவாவுள்ள மக்கள் மனத்தில் தோன்

றிற்று. இக்கருத்து 30 ஆண்டுகட்கு முன்னர் மிகவும் பிரசார மெய்தியது. முற்போக்கில் ஈடுபடாத ஒரு சிலர் இதனை ரகசியமாக எதிர்க்கத் தலைப்பட்டனர். நாஞ்சினாடு இருபிளவு பட்டது. ஆனால் முற்போக்காளரே முடிவில் வென்றனர்.

ஸ்ரீ சி. தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் முற்போக்காளரில் முதன்மை பெற்றவர். 'மலபார் குவார்ட்டர்லி ரிவியூ' என்ற பத்திரிகையில் இவர்கள் நாஞ்சினாட்டு வேளாளரைக் குறித்து எழுதிய ஆங்கிலக் கட்டுரை அதுகாறும் உறங்கிக் கிடந்த வேளாளரின் கண்களைத் திறந்து விழிக்கச் செய்தது. பிள்ளையவர்களுடைய தூய உள்ளமும் சீரிய நோக்கும் மனத்தைக் கவர்ந்தன. நாஞ்சினாட்டு வேளாள சமுதாயம் பலவகை இன்னல்களும் நீங்கி அதற்குரிய உயரிய நிலையை அடைய வேண்டுமென்ற ஆழ்ந்த உணர்ச்சி அவர்களுடைய சம்பாஷணைகளிலும் எழுத்திலும் பிரதிபலிக்கத் தொடங்கியது. அவர்கள் தமிழ் இலக்கியங்களில் ஊறியவர்கள்; தமிழ் மக்களுடைய சரிதத்தை நன்குணர்ந்தவர்கள்; தமிழர்களுடைய உயர்ந்த லட்சியங்களிலும் ஒழுக்க நியதிகளிலும் ஈடுபட்டவர்கள்; ஆங்கிலக் கவிஞர்களின் அறிவுரைகளில் திளைத்தவர்கள்; பிற சமுதாய சரித்திரங்களை ஊன்றி நோக்கி யுணர்ந்தவர்கள்; நாஞ்சினாட்டு இளைஞர்களுக்கு ஒரு லட்சிய புருஷராக உள்ளவர்கள்; ஆடம்பரம் சிறிதும் இல்லாதவர்கள்; ஆதலால் பிரசங்க மேடைகளிலோ பிரசாரக் கூட்டங்களிலோ அவர்களைக் காணுதல்

அரிது. ஆனால் அமைதியோடும் உள்ளுணர்ச்சியோடும் தங்கள் சமுதாய நன்மையின் பொருட்டு இடைவிடாது உழைத்து வந்தார்கள். அவர்கள் உழைப்பில் சுயநலமென்பது சிறிதும் இருப்பதற்கிடமே இல்லை. தூய வாழ்க்கையுடையவர்கள்; சந்தானம் அற்றவர்கள்; எனவே அதுபற்றிய பாசபந்தங்களும் அற்றவர்கள். இல்லறத்தேயிருந்தும் துறவியே.

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது (45)

என்ற வள்ளுவர் குறளுக்கு லட்சியமாயுள்ளவர்கள். எப்பொழுதும் கல்வியிலும் ஆராய்ச்சியிலும் கவித்வ நிவேதனத்திலும் வாழ்ந்து வருபவர்கள். தாம் ஆற்றவேண்டும் அரிய முதற்கடமையாகும் என்று நினைத்தே தமது சமுதாயச் சீர்திருத்தத்திலும் சட்டச் சீர்திருத்தத்திலும் பிள்ளையவர்கள் முனைந்தார்கள்.

இச்சந்தர்ப்பத்தில் நான் திருவனந்தபுரத்தில் பிள்ளையவர்கள் அருகில் வசித்துவந்தேன். ஆதலால் இங்கே எழுதுவனவெல்லாம் எனக்கு நேரில் தெரிந்தவையே. சட்டத்தைச் சீர்திருத்தும் விஷயமாகப் பல நண்பர்களும் பிள்ளையவர்களைக் கண்டு கலந்துகொண்டு சென்றார்கள். ஸ்ரீ மூலம் பிரஜாஸபையின் அங்கத்தினர் பலர் பிள்ளையவர்கள் கூடவே தங்கியிருந்து சட்ட விஷயமாக விவாதித்துப் பரிசிலனை செய்து வந்தார்கள். தமது சமுதாயத்தினர்கள்

சுயநலத்தின் காரணமாகச்சீர்திருத்தத்திற்கு இணங்காமற் போய்விடுவார்களோ என்ற கவலை பிள்ளையவர்களுக்கு இருந்தது. இக்கவலை மனத்திற் பட்டவுடன் 'நாஞ்சினாட்டு வேளாளருக்கு ஒரு கோட்டை வினாக்கள்' முதலிய பல துண்டுப் பத்திரங்களை வெளியிட்டார்கள். சமுதாயத்தின் பரிதாபகரமான நிலையைச் சித்திரித்துக் காட்டினால் தம்மவர்கள் உண்மை யுணர்ந்து சீர்திருத்த விஷயத்தில் ஒருமுகமாய் உழைப்பார்கள் என்று பிள்ளையவர்கள் கருதினார்கள். இதுதான் நாஞ்சினாட்டு மருமக்கள் வழி மான்மியத்தின் உற்பத்தியாகும்.

III

பிள்ளையவர்கள் வரைந்த சமுதாய சித்திரம் ஒரு நூதன இலக்கிய வகையை நமது தமிழ்மக்களுக்குக் கொடுத்தது. இவ் இலக்கிய வகையில் நகைப்பும் இகழ்ச்சியும் சோகமும் ஒன்றாகக் கலந்து வரும். பெரியதோர் பயனும் விளைவதாகும்.

மக்களுக்கு நகைப்பு-உணர்ச்சியும் இகழ்ந்துரையாடலும் இயல்பாகவுள்ளவையே. ஏதாவதொரு வகையிற் பொருத்தமற்ற மொழி அல்லது செயல் நிகழ்ந்தவிடத்து நகை யுண்டாகும். இலக்கண நூலார் நகைச்சுவை இன்னின்ன காரணங்களாற் பிறக்குமென்று அறுதியிட்டுரைப்பர். அக்காரணங்களை இங்கே ஆராயவேண்டும் அவசியம் இல்லை. ஐந்து வயசுப் பையனொருவன் மிகப் பெரியதொரு தலைப்பாகை கட்டிக்கொண்டு வயது முதிர்ந்தவன் போல் நடிப்பானானால், பார்ப்பவர்களுக்கு உடனே

நகைப்பு வந்துவிடும். இப்படியே மிக்க ஆடம்பர மாகச் சட்டை முதலியன அணிந்து செல்பவன் அடிசறுக்கிக் கீழே விழுவானுனல் உடனே நகைப்பு உண்டாய்விடும். பேச்சிலும் இப்படி நகையுண்டா வதற்குரிய சந்தர்ப்பங்களை எளிதில் பாவித்துக் கொள்ளலாம். ஆடுசாபட்டி அஷ்டாவதானம் அம் மையப்ப பிள்ளை தம் வீட்டில் திருடர்கள் புகுந்து களவாடிக் கொண்டிருக்கும்போது அவர்களைப் பார்த்து 'நீவிர் பிழைத்தீர்; இனிப்பிழையீர்' என்று கூறுதலும், இதற்குப் பதிலாகத் திருடர்கள் அவரை அடிக்கச் செல்லுவதும் நகையுணர்ச்சியைத் தோற்றுவிக்காதபடி இருக்க முடியுமா? இவ்வுணர்ச் சியை எழுப்பக்கூடிய நூல்கள் தமிழில் பல இருக் கின்றன. பம்மல் சம்பந்த முதலியாரவர்கள் இயற் றிய 'சபாபதி' என்னும் நாடகம் நகைச்சுவையிலே தோய்ந்திருக்கிறது. வில்லியப்ப பிள்ளையின் பஞ்ச லட்சணத் திருமுக விலாசம் நகைச்சுவையின் பொக் கிஷமாகவுள்ளது. வீரமா முனிவரின் பரமார்த்த குரு கதையில் நகைச்சுவை ததும்புகிறது. கம்ப ராமாயணம் முதலிய காவியங்களிலும் அங்கங்கே நகைச்சுவை குமிழியிட்டொழுகுகிறது. சங்கச் செய் யுட்களிலும் ஏகதேசமாய் இந்த நகைச்சுவை தலைக் காட்டி இன்பமூட்டுகிறது. உதாரணமாக,

> திருந்திழாய் கேளாய் நம் ஊர்க்கெல்லாம் சாலப்
> பெருநகை அல்கல் நிகழ்ந்தது

என்ற கலித்தொகையைக் (65) காண்க. பத்திரிகை யுலகிற்கூட நகைச்சுவை புகுந்துவிட்டது. இக்

காலத்தே தமிழ்நாட்டில் நகைச்சுவை மலிந்த பத்திரிகைகளே இருபாலராலும் போற்றப்படுகின்றன. ஹாஸ்யத்தையே பெரும்பான்மை மக்கள் பெரிதும் விரும்புகிறவர்கள் என்பதை யுணர்ந்து சினிமாப்படக் கர்த்தர்களும் இந்தச் சுவையுடைய கதைகளையே படம்பிடிக்கின்றனர். ஆனால் இங்கே கூறிய நகைச்சுவைப் பகுதி யெல்லாவற்றிலும், ஆழ்ந்த உணர்ச்சி யில்லை; ஆழ்ந்த பொருளில்லை; நிலைத்த பயனில்லை. கணநேர மகிழ்ச்சியையே நமக்குத் தந்து அதனோடு ஒழிகிறது.

இகழ்ச்சிச் செயலும் இவ்வாறுதான். விருப்பு வெறுப்பு மக்களியற்கையில் ஒன்றிக்கிடப்பவையே. வெறுப்பின் உருவவேறுபாடே இகழ்ச்சி யென்பது. நமது தினசரி வாழ்க்கையில் இவ் இகழ்ச்சி அடிக்கடி புலப்படுவதொன்றே. இலக்கியங்களிலும் இது மிகுதியாகக் காணப்படுகிறது. தமக்குப் பொருள் கொடாத ஒருவரைக் குறித்து ஒரு புலவர்,

பாரி ஓரி நள்ளி எழினி
ஆஅய் பேகன் பெருந்தோள் மலையன் என்று
எழுவருள் ஒருவனும் அல்லை, அதனால்
நின்னை நோவது எவனே!
அட்டார்க்கு உதவாக் கட்டி போல
நீயும் உளையே நின்அன் னோர்க்கே;
யானும் உளனே தீர்பா லோர்க்கே;
குருகினும் வெளியோய் நோத்துப்
பருகுபால் அன்னஎன் சொல்உகுந் தேனே!

(தொல் செய்யுளியல், 125, உரை)

என்று பாடுகிறார். வசைக்கூத்து என்ற நூலொன்றும் முற்காலத்து இருந்ததாகத் தெரிகிறது. கம்பராமாயணத்தில் பல இடங்களிலும் இவ் இகழ்ச்சியுரை மிக்க திறம்படக் கையாளப்படுகிறது. உதாரணமாக, இராவணனை நோக்கி அனுமன்,

அஞ்சலை யரக்க பார்விட்டு அந்தரம் அடைந்தா னன்றே
வெஞ்சின வாலி மீளான் வாலும்போய் விளிந்த தன்றே
அஞ்சன மேனியான்தன் அடுகணை யொன்றால் மாழ்கித்
துஞ்சினன்; எங்கள் வேந்தன் சூரியன் தோன்றல்
(என்றான்.

(கம்ப, சுந்தர, பிணிவீட்டு. 84)

இகழ்ந்து பாடுதலையே தமது தொழிலாகக் கொண்டு, அவ்வகைப் பாடலில் சிறந்து விளங்கியவர் காளமேகம் என்று கூறுவர்.

கந்துகடல் சூழ்நாகைக் காத்தான்தன் சத்திரத்தில்
அந்தமிக்கும் போதில் அரிசிவரும் —குத்தி
உலையிலிட ஊரடங்கும் ஓரகப்பை யன்னம்
இலையிலிட வெள்ளி எழும்.

என்பது அவர் பாடல்களில் ஒன்று.

மேற்காட்டியன போன்ற இகழ்ச்சியுரைகளெல்லாம் யாரேனும் ஒருவரைக் குறித்துத் தோன்றியவை. கணநேரந் தோன்றும் மனவேறுபாட்டுக்கு ஒரு போக்கிடமா யமைந்தவை; பொருள் அற்றவை; நன்மைஅற்றவை; வசையென்றஅளவில் நல்லுணர்வுடையோரால் கொள்ளத் தகாதவை.

இகழ்ச்சியுரை வசையாக மாத்திரம் அமையாத படி குற்றத்தைக் கண்டித்து நீக்குதலையே உண்மை யான நோக்கமாகக் கொண்டதாயின் அப்போது அவ் இகழ்ச்சி ஒருபடி உயர்ந்து விடுகிறது. புராதன லத்தீன் ஆசிரியர்களுள் லூஸில்லஸ் என்பவர்தாம் இந்நோக்கத்தை முதன்முதற் கையாண்டவர் எனக் கூறுகிருர்கள். இகழ்ச்சிக் கண்டனம் ஒருவரைக் குறித்துத் தோன்ருது ஓரினத்தவரைக் குறித்து எழுமாயின், அதனுல் விளையும் நன்மை மிகப் பலவா தற்கு இடமுண்டு. இனம்பற்றியெழும் இகழ்ச்சி யுரையின் தோற்றுவாய் 'ஹோமர்' என்ற கிரேக்க மகாகவியின் சிருஷ்டிகளில் காணப்படுகிற தென்பர். கம்ப-ராமாயணத்தில் அது வெளிப்படும் திறம் கவனிக்கத்தக்கது. இராவணன் முதலிய அரக்கர்களால் அடிமைப்படுத்தப்பட்டவர்கள் இந் திரன் முதலிய தேவர்கள். இத்தேவர்களின் ஏழைமை நிலை பல இடங்களிலும் வெளிப்படுகிறது. இலங்கையைச் சூழ்ந்திருந்த பொழிலுக்கு இவர்கள் காவற்காரரா யிருந்தனர். அப்பொழில் அழிந்த தைப் பற்றியும் பஞ்ச சேனுதிபதிகள், அக்ஷய குமாரன் முதலானவர்களின் வதத்தைப் பற்றியும் இராவணனுக்கு அறிவிக்கும் பொறுப்பு இவ் ஏழைத் தேவர்களுக்கு ஏற்பட்டது. இராவணன் சமூகத் திற்கு அவர்கள் உள்ளம் பறைகொட்ட நடுநடுங்கி வருதலும், அவனிடம் சொல்லுவதற்கு அஞ்சித் தடுமாறும் நிலைமையும், நகைச்சுவைபட, இகழ்ச்சிக் குறிப்புத் தோன்ற, வருணிக்கப்படுகின்றன. அடிமை வாழ்வின்மீது ஏற்படும் அருவருப்பு தேவ

ஜாதியாரின்மீது ஏற்றி யுணர்த்தப்படுகிறது. இதனால் விளையும் சுவையும் பயனும் பெரிதும் போற்றத்தக்கவை.

இராமாயணத்தில் வருவது பழங்காலச் சரித்திரத்தில் ஓர் ஆழ்ந்த உண்மை. ஓர் ஆசிரியன் தன் காலத்து வாழ்ந்த சில இனத்தாரைப் பரிகசித்து இகழ்வதுதான் மிகுதியாகக் காணப்படுகிறது. இவ்வாறு இகழப்படுதற்குப் பெரும்பாலும் பெண்ணினத்தார்களும் துறவு வேடம் பூண்டவர்களுமே தக்கவர்கள் ஆவார்களென்று ஆசிரியர்கள் கருதினார்கள்.

பெண்களுடைய நடையுடை பாவனைகளையும் அவர்களுடைய சாகசத்தினையும் அறிவு நுட்பத்தினையும் 'அளக்கவொண்ணு வஞ்சத்'தினையும் பற்றிப் பல நூல்கள் ஆங்கிலத்தில் முற்காலத்தில் வெளியிடப்பட்டுள்ளன. உதாரணமாக, தாமஸ் டெக்கர் என்னும் கவிஞர் எழுதிய 'பிரமசாரியின் விருந்து' (Bachelor's Banquet) என்ற நூலைக் கூறலாம். நமது நாட்டில் பெண்களைப் பழித்துரைத்தலே பிற்காலத்தில் — ஜைன பௌத்த மதங்கள் ஓங்கி நின்ற காலத்தில் — பெரு வழக்காக ஏற்பட்டுவிட்டது.

புதுப்புனலும் பூங்குழையார் நட்பும் இரண்டும்
விதுப்பற நாடின்வேறு அல்ல—புதுப்புனலும்
மாரி அறவே அறுமே அவரன்பும்
வாரி அறவே அறும் (370)

என்ற நாலடிச் செய்யுளும்,

உண்டியுட் காப்புஉண்டு உறுபொருட் காப்புஉண்டு
கண்ட விழுப்பொருள் கல்விக்குக் காப்புஉண்டு
பெண்டிரைக் காப்பது இலமென்று ஞாலத்துக்
கண்டு மொழிந்தனர் கற்றறிந் தோரே

என்ற வளையாபதிச் செய்யுளும் தக்க உதாரணங்களாம். இங்ஙனமே ஒரு பௌத்த பிக்ஷுவையும் ஒரு காபாலிகனையும் 'மத்த விலாஸ ப்ரஹஸநம்' என்ற வடமொழி நாடகம் பரிகசிக்கிறது. வள்ளுவரும்,

தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான் (1073)

எனவும்,

வஞ்ச மனத்தான் படிற்று ஒழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும் (271)

எனவும் கயவர்களையும் கூடாவொழுக்கமுடைய துறவிகளையும் குறித்துக் கூறுகிறார்.

இங்ஙனம் பெண்டிர், பொய்த் துறவிகள் முதலாகிய இனத்தினர்களை இகழ்ந்துரைப்பதிலே அவர்கள் திருந்தவேண்டுமென்ற நோக்கமும் ஏற்பட்டு விட்டதாயின், அவ் இகழ்ந்துரை நம்மைச் சூழ்ந்துள்ள தீங்குகள் அறியாமை முதலியவற்றை நீக்குவதற்கு ஏற்ற நற்கருவியாகி விடுகிறது. இகழ்ச்சியினாலே உண்டாகக் கூடும் மனக் கசப்பு, அவ் இகழ்ச்சியோடு உடனொன்றி வரும் நகைச் சுவையினால் மாறிவிடுகிறது. நன்மை பெருகுதற்குத்

தக்க வாய்ப்பு ஏற்படுகிறது. கோபத்தினல் கொறுகொறுக்கும் ஒருவன் முகத்திற்கெதிரே கண்ணுடியைக் காட்டுவதுபோன்ற பயன் விளைகிறது. ஆகவே நகைப்பு, இகழ்ச்சி, நன்னேக்கம் ஆகிய மூன்றும் இயைந்து வரும் சரள காவியமொன்றே தமது கருத்திற்கு ஒத்ததெனப் பிள்ளையவர்கள் துணிந்தார்கள். இச் செய்யுள் வகையை ஆங்கிலத்தில் 'ஸட்டயர்' (Satire) என்று கூறுவார்கள். தொல்காப்பியர் 'அங்கதம்' வசையொடும் நகையொடும் கூடியது என்று கூறி அது 'செம்பொருள் அங்கதம்', 'பழி கரப்பு-அங்கதம்' என இருவகைப்படும் என்றனர் (செய். 129, 124). ஒருகால் இது 'பழிகரப்பு-அங்கதம்' என்றதில் அடங்கலாம். ஆனல் இதைப் பிரகசனம் என்று சொல்வது மிகப் பொருத்தமாகும்.

பிரகசனத்தின் இயல்பை நாம் நன்குணர்தல் வேண்டும். மக்களில் ஒரு பகுதியார் தாம் கையாண்டு வரும் ஒழுக்கங்களும் பழக்க வழக்கங்களும் நல்லவையென்று கொண்டு, அவைபற்றித் தமக்குள் தாமே திருப்தியடைந்திருப்பர். அவ்வாறு திருப்தியாயிருத்தல் தவறென்றும் அவ்வொழுக்க முதலியன திருந்துதல் அவசியமென்றுங் காட்டி நல்வழிப்படுத்துதலே பிரகசனத்தின் நோக்கமாகும். உண்மையைச் சிறிது மிகைப்படுத்திக் கூறுதல் இவ்வகை நூல்கள் மேற்கொள்ளும் பொது முறையாகும்.

இப் பிரகசனம் இருவகை நெறியிலே செல்லலாம். ஒன்று பண்பட்ட அமைதிநெறி; நல்லியற்கையினின்றும் தவருத நெறி. இந் நெறியிலே பிரகசனத்தின் அடிப்படையில் நீதி உள்ளடங்கிக் கிடக்கும். ஆசிரியன் தான் பரிகசிக்கும் சமுதாயத்தின் ஓர் அங்கம் என்பதை மறந்துவிடுவதில்லை. தான் சமுதாயத்தினரைப் புண்படுத்த வேண்டுமென நினைப்பதேயில்லை. பரிகாசமும் மிகவும் நயமாகவும் சரளமாகவும் இருக்கும். லத்தீன் ஆசிரியர்களுள் ஹாரெஸ் (Horace) என்பவர் இந்நெறியில் பிரகசனங்கள் எழுதியமையால் இதனை ஹோரேஷியன் (Horatian) நெறியென்று மேலைநாட்டறிஞர்கள் கூறுவார்கள். இந்நெறியைச் சாந்தநெறி என்று சொல்லலாம். பிறிதொரு நெறி உக்ரநெறியென்று சொல்லலாம். தீமைகளையும் குற்றங்களையும் கண்டவுடன் ஆசிரியனது உள்ளங் கொதித்துப் பொங்குகிறது; எரிமலையினின்று பொங்கி வழியும் நெருப்பாறுபோலக் கண்டனச் சொற்கள் பரந்து பாய்கின்றன. இந்நெறியில் அருவருப்பு எளிதில் உண்டாகும்படியாய் உண்மை சிறிது மிகுத்துக் கூறப்படுவதாகும். லத்தீன் ஆசிரியருள் ஜூவெனல் (Juvenal) என்பவர் இந்நெறியைக் கையாண்டமையால் இதனை ஜூவெனலியன் (Juvenalian) நெறியென்று கூறுவார்கள்.

பிள்ளையவர்களோடு பழகியவர்கள் மேற்சுட்டிய இரண்டு நெறிகளுள் சாந்த நெறியை அவர்கள் கேற்கொள்ளலாம் என்று நினைப்பார்கள்.

ஆனல் அந்நெறி அவர்கள் நோக்கத்தை நிறை வேற்ற வல்லதல்ல. அவர்கள் கூறுமாறு:

காரணத் தீனம் கூடிய தீனம்
நண்டுரந்தில் மருந்து கருந்நாய்ங்
கொடுந்தா லன்றிக் குணம் ஆகாது

(நாகாஸ்தி. 79—81)

ஆதலால் உக்ரநெறியே கைக்கொள்ளத் தக்க தாயிற்று. இந்நெறி தம் இயல்பிற்கு முற்றும் மாரு யுள்ளது; இதற்கு ஏற்றதொரு கதாபாத்திரத்தைச் சிருஷ்டித்துக் கதையும் ஒன்று அமைப்பது இன்றி யமையாததாய் முடிந்தது.

கதையைச் சொல்லுவது சூத பௌராணிகரா? அல்ல. அவருக்கு நாஞ்சிஞட்டுக் குடும்பத்தினரின் துன்பத்தை அளவிட முடியுமா? அத்துன்பத்தின் காரணத்தை அடியோடு ஒழிக்க வேண்டுமென்று அவரது உள்ளங் கொதித்தெழுமா? இரண்டும் முடி யாத காரியம். அக்குடும்பத்திற் பிறந்த ஒருத்திக் குத்தான் இரண்டும் இயலும்; வாய்பேசாது மௌனமாயிருந்து துக்கங்களையெல்லாம் அடக்கி யடக்கி வைப்பாள்; முடிவில் அத்துக்கங்கள் நெடுங் காலமாக அடக்கப்பட்டிருந்த காரணத்தினலே, குமுறிக் கொந்தளித்து அதிவேகத்துடன் வெளிப் புறப்படும். அந்நிலையில் வருஞ் சொற்கள் உண்மை யொடு பட்டனவாகும்; கேட்டோர் இதயத்தைத் தகர்க்கத் தக்கனவாகும். இக்காரணங்களினுல் நாஞ்சிஞட்டுக் குடும்பத்திலுள்ள பெண்ணொருத்தி

யின் வாய்ப் பிறப்பாகவே கதையைப் பிள்ளையவர்கள் அமைத்துள்ளார்கள். தன் சுய சரிதையையே அவளும் கூறுகின்ருள். இச் சுயசரிதையின் மூலமாக எத்தனையோ காட்சிகள் சித்திரிக்கப்படுகின்றன.

உலகமே துக்கமயமாய்த் தோன்றுகிறது. எல்லா வகை இடையூறுகளையும் நீக்கவல்ல விநாயகக் கடவுளும் இடையூற்ருல் நெஞ்சு கலங்கி வருந்தி நிற்பவர்போலத் தோன்றுகிருர். அவரும் மருமக்கள் வழியைச் சார்ந்தவராயிருக்க வேண்டும்; அதனுல் தான் துன்புறுகிருரெனச் சுயசரிதை கூறும் கதாநாயகி நினைக்கிருள். இக்கடவுளின் அருகே நிற்கும் ஒரு சிலரிடத்தும் துக்கம் தோன்றுகிறது; ஆனுல் மனத்தில் இரக்கமில்லை; ஏழைப் பெண் புலம்புவதில் ஒரு மாத்திரை அதிகமென்று துக்கிக்கிருர்கள். இவர்கள் இலக்கண வித்துவான்கள்; தாடிபற்றியெரியும்போது சுருட்டுப் பற்றவைக்க நெருப்புக் கேட்கிற இனத்தைச் சார்ந்தவர்கள். இவர்களைத் தனது சோகங்கலந்த சிரிப்பினுல் ஒதுக்கிவிட்டுத் தனது கதையைத் தொடங்குகிருள். துன்பத்திற்கும் வறுமைக்கும் தாயகமாயுள்ள ஒரு குடும்பத்தில் தோன்றிருள்; அநாதை. பஞ்சகலியாணிப் பிள்ளைக்கு ஐந்தாவது மனைவியாய் இவள் வாழ்க்கைப் பட்டாள்; புகுத்தகத்தில் செல்வமிருந்தது; ஆனுல் துன்பத்துக்கும் குறைவில்லை. அங்கே அவளுக்குக் கிடைத்தது புழுக்கை யுத்தியோகந்தான்; சக்களத்திகளின் தலையணை மந்திரோபதேசமெல்லாம் இவள்

தலையில்தான் விடிந்தது. மாமியின் கொடுங்கோலரசு; இவ்வரசி தாடகைப் பிராட்டியாரின் அவதாரம்; இவள் திருவிளையாடலெல்லாம் பத்துப் பரஞ்சோதிகள் பாடினாலும் முடிவடையாது.

இந்த ஆட்சியில் புது மருமகள்
கஞ்சியோ கூழோ காடி நீரோ
கும்பியாரக் குடித்ததேயில்லை.

ஒருநாள் தன் மகன் கேலியாகப் பேசத் தொடங்கியது அவனுக்கே கெடுவினையாக முடிந்தது. இதனால் விளைந்த துன்பம்; இதுபோன்ற துன்பங்களிடையில் நகைப்பு—நிகழ்ச்சிகள்; தனது கணவன் மனைவியர் ஐவரோடும் குமரித் தீர்த்தம் ஆடியது (இது தேவர்களுக்கும் ஆனந்தமளிக்கும் திருக்காட்சி); கணவன் தீர்த்த மாடியதன் பயனாக மீளாவுலகம் புகுந்து மீண்டு வந்தது; தான் அடைந்த தாங்கவொண்ணாத் துன்பம்; பின்னர், கணவனது எச்சிற்சோற்றுக்குச் சக்களத்திகள் செய்த சச்சரவு; இவையெல்லாம் மழையிருளும் மின்னலும் போல மாறிமாறிக் காட்சியளிக்கின்றன. காரணவனாகிய தன் கணவனை மருமகனான அவகாசி பழித்துரைக்கிறான். இங்கே,

ஆரைக் கேட்டுநீர் ஐந்து கலியாணம்
அடுக்கடுக் காகச் செய்தீர் ஐயா?
பட்டப் பெயரும் பஞ்ச கலியாணிப்
பிள்ளை யென்றுநீர் பெற்று விட்டீரே.

என்று மருமகன் கூறுவது நகைச்சுவையின் பேரெல்லையைத் தொட்டுவிடுகிறது. மருமகனுக்கு விடையாகக் காரணவன் தனது ஸ்தானத்தின் கௌரவமும் குடும்பத்தின் பெருமையுந் தோன்றச் சொல்லும் சொற்கள் மிகவும் சுவை பொருந்தியவை. ஆலடிமாடன் கொடை, அதில் காரணவன் 'கணிசமாக' அலங்கார உடைதரித்து ஆடுதல், இழவு 'அடியந்திரம்',கோயில்களில் குடும்ப கௌரவத்திற்காக ஏற்படுத்தும் கட்டளைகள், சானல் வாச்சர் (Channel Watcher) சந்தனத் தேவருக்கு 'அட்ரஸ்' கொடுத்தல், மருமகன் ஏழு வருஷமாய் இங்கிலிஷ் படித்து ஏ. பி. ஸி. டி எழுதத் தெரியாமலிருத்தல், மருமகன் ராஜா திருவிளையாடல்கள் இவைகளெல்லாம் நினைக்குந்தோறும் நம்மை விலாவொடியச் சிரிக்கச் செய்கின்றன. மருமகனது தந்தை வீரபத்திரபிள்ளை வந்து அவன்மகனுக்காகச் சண்டையிட்டு

வைய வைய வைரக்கல்லும்
திட்டத் திட்டத் திண்டுக்கல்லும்

ஆகத் தன் கணவர் இருந்த காட்சி பார்ப்போருக்கு நகைக்கிடமாகவும் அவளுக்கு ஆற்றொணுத் துயரத் துக்கிடமாகவும் உள்ளது. பின் குடும்பச் சண்டை முற்றிக் கோர்ட்டுச் சண்டையாக மாறிவிடுகிறது. முதலில் இருந்த விருப்புக்கள் வரவரக் குறைகின்றன; குடும்பச் சொத்துக் கரைந்துபோய் விடுகிறது; காரணவருக்குத் தேகவலிமை குன்றிவிடுகிறது; கவலையும் நோயும் பிடிக்கின்றன. முடிவில்,

படிப் படியாய் இப்படிஅவர் பாடு
குறைந்து குறைந்து கொண்டே வந்தது;
அண்டை வீடாகி, அறைப்புரை யாகி,
படிப்புரை யாகிப் பாயிலும் ஆனர்.
எழுந்து நடக்க இயலா தானர்
நடந்தவர் கீழே கிடந்தார், அம்மா!

நோயும் பாயுமாய்க் கிடந்த இக்காரணவருக்கு இரண்டு மனைவியர்களே கடைசிக் காலத்தில் உதவியாளர்கள். கடைசிக் காலமும் அமைதியாய்க் கழிந்த பாடில்லை. அவரது தங்கையும் மருமகனும் இருக்கிற பொருள்களைக் காவல் செய்து வைப்பதற்கு வந்து சேர்ந்தார்கள். மருமகனிடத்தில் நல்ல வார்த்தை சொல்லித் தன் மனைவி மக்களைக் காப்பாற்றும்படி சொல்லுகிருர். தங்கை இதைக் கண்டு மிகவும் கோபித்து வைப்புத் திட்டங்களெல்லாம் பூட்டி முத்திரையிடச் செய்கிருள். கதையைச் சொல்லிவரும் ஐந்தாம் மனைவி,

கணவர்க்கு அந்திய காலம் தண்ணீர்
குடிக்கும் பாத்திரம் குடுக்கை ஆனதும்
பரந்த சட்டி படிக்கம் ஆனதும்
பாலும் அன்னப் பாலே ஆனதும்

எண்ணி யெண்ணி நெஞ்சம் குமுறுகிருள். எல்லாவற்றிற்கும் மேலாகத் தன் கணவனது அந்திய நிலையில் அவரது ஆத்ம சாந்திக்குத் திருவாசகம் படிக்கத் தன் மகனைச் சொன்னபோது அவன் தன்னுல் முடியாதென்று தமிழை இகழ்ந்து சொன்னது இப்

பெண்மணியின் நெஞ்சைப் பிளந்துவிட்டது. கண வர் முடிவு வந்தது;

ஏங்கி அழுத எங்களை நோக்கினர்;
வாடி அழுத மக்களை நோக்கினர்;
கடவுளை எண்ணிக் கையை எடுத்தனர்;
கண்ணை மூடினர், கயிலைபோய்ச் சேர்ந்தனர்.

கதாநாயகியின் துக்கம் நிரம்பிவிட்டது. அவள் கண் களிலும் இதயத்திலும் உதிரங் கொட்டுகிறது; அவள் வயிறு எரிகிறது. அனற்பிழம்பு பெருக்கெடுத்தோடு வதுபோல அவள் சொற்கள் புறப்படுகின்றன; மரு மக்கள் வழி,

மனிதரைப் பேயாய் மாற்றும் பாழ்வழி;

* * *

நடைப்பிணம் ஆயிரம் நடக்கும் வனவழி;
வெவ்வழி, சற்றும் வெளிச்ச மிலாவழி;
இருள்வழி, செல்பவர் இடறும் கல்வழி;

* * *

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வமென்று
அவ்வை சொல்மொழி அறியா மடவழி.
ஐயோ, இவ்வழி ஆகாது, ஆகாது;
ஆடுகள் மாடுகட்டு ஆகும் இவ்வழி
மனிதர் செல்லும் வழியாயிடுமோ?

* * *

கற்றவர் உளரோ! கற்றவர் உளரோ!
பெற்ற மக்களைப் பேணி வளர்த்திடாக்
கற்றவர் உளரோ! கற்றவர் உளரோ!

அறிஞரும் உளரோ! அறிஞரும் உளரோ!
வறுமைக்கு இரையாய் மக்களை விட்டிடும்
அறிஞரும் உளரோ! அறிஞரும் உளரோ!

நீதியும் உளதோ! நீதியும் உளதோ!
மாதர் கண்ணீர் மாறு நிலத்தில்
நீதியும் உளதோ! நீதியும் உளதோ!

தெய்வமும் உளதோ! தெய்வமும் உளதோ!
பொய்வழிப் பொருளைப் போக்கும்இந் நிலத்தில்
தெய்வமும் உளதோ! தெய்வமும் உளதோ!

என்று கதறி ஓலமிடுகிருள் நமது கதாநாயகி.

IV

இப்புதிய கண்ணகியின் ஓலம் வீணுகிப் போய் விடுமா? நாஞ்சிநாட்டுப் பெருமக்கள் காதைத் துளைத்துவிட்டது. அவர்கள் இதயக்கோட்டையை தாக்கித் தகர்த்துவிட்டது. அவர்கள் குடும்பம் மேன்மை யடைவதற்குரிய சீர்திருத்த மசோதா கொல்லம் ஆண்டு 1101-ல் (1926) சட்ட சபையில் நிறைவேறி 1102-ல் அமுலுக்கு வந்தது. இம் மான்மியமே சீர்திருத்தத்திற்குக் காரணமாயிருந்தது.

இம்மான்மியம் திருவனந்தபுரத்திலிருந்து முன் பிரசுரிக்கப்பட்டு வந்த 'தமிழன்' என்ற பத்திரிகையில் 1917-ம் வருஷம் மார்ச்சு மாதம் தொடங்கிப் பகுதிபகுதியாக வெளிவந்துகொண்டிருந்தது. 1918 பெப்ருவரியோடு முற்றுப்பெற்றது. அக்காலத்தில் அப்பத்திரிகையின் ஆசிரியராயிருந்தவர்கள் பண்

டித எஸ். முத்துசாமிப் பிள்ளையவர்களும் திருவனந்தபுரம் மஹாராஜா கல்லூரி மலையாளப் பேராசிரியர் சி. என். ஏ. அனந்தராமைய சாஸ்திரிகளும் ஆவார்கள்.

பத்திரிகையில் ஆசிரியர் பெயரோடு மான்மியம் வெளிவரவில்லை. பழைய ஏட்டுச் சுவடியில் இருந்த நூலை அச்சிற் பதிப்பிக்கிற பாவனையிலே வெளியாகிக்கொண்டிருந்தது. ஆசிரியர் பெயர் காணப்பெருவிட்டாலும், பழைய நூல் என்ற தோற்றத்தோடு பிரசுரமாகிய போதிலும், இத் தோற்றத்தை உறுதிப் படுத்துவதற்கு நூலிற் சிற்சில வரிகளும் சொற்களும் பொடிந்து போயின என்று குறிப்பிட்டிருந்த போதிலும், எழுதியவர்கள் இன்னார் தாமென்பது பலருக்குந் தெரிந்த இரகசியமாகத்தான் இருந்தது. ஒவ்வொரு பகுதியும் வெளிவர வெளிவர, தமிழ்மக்கள் அதனை ஆவலாய் வாங்கிப் படித்து வந்தார்கள். இலக்கியச் சுவையிலே ஈடுபட்ட ஸ்ரீ கே. ஜி. சேஷையர் முதலானவர்கள் இந் நூலின் பெருமையைப் பலரும் அறியச் செய்து வந்தார்கள். நாஞ்சினாட்டு வேளாள இளைஞர்கள் இதனை வாசித்து உள்ளங் கொதித்தார்கள்;அவர்களில் முதியோர்கள் இதனை வாசித்த அளவில் இதிலே பொதிந்து கிடக்கும் உண்மையையும் சீர்திருத்தத்தின் அவசியத்தையும் உணர்ந்தார்கள். அந்நாட்டு ஆண்களும் பெண்களும் நூலிலுள்ள நகைச்சுவையில் ஈடுபட்டு உளத்தாற் சிரித்து மகிழ்ந்தார்கள். தமிழிலே ஒரு நூதன இலக்கியம் தோன்றி விட்டது.

மான்யியம் ஒரு சமுதாயத்தில் சீர்திருத்தத்தை விளைத்தது. அப்படியே தமிழ் நடையிலும் கவிஞர் சமுதாயத்திலும் சீர்திருத்தத்தை இது விளைவிக்க வல்லது என்பதைத் தமிழ் அறிஞர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

---

3. உமார் கய்யாம்

உமார் கய்யாம் பாரஸிக தேசத்தில் தோன்றிய பெருங் கவிஞர். இக் கவிஞரின் புகழ் நமது தமிழ் நாட்டிலும் பரவி வருகிறது. இவரது பாரஸிகப் பாடலைக் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை மொழி பெயர்த்தது நமது பாக்கியம் என்றே கூறவேண்டும். தமிழ் நாட்டில் அவர் பெயர் என்றும் மங்காது ஒளி விட்டுத் திகழும்படி செய்துவிட்டார் நமது கவிமணி. ஆங்கில உலகில் ப்விட்ஜிரால்ட் என்ன மதிப்பைப் பெற்றுள்ளாரோ அம்மதிப்பு நம் கவிமணி அவர் களுக்கும் உரியது. இவர் மூலமாய் நமது நாட்டில் உமார் கய்யாம் ஓர் அற்புமான மறுபிறவியை எடுத்துள்ளார்.

இரான் தேசத்துக் கவிஞர்களுள் உமார் ஒரு சிறந்த கவிஞர் என்றுகூடச் சொல்ல முடியாது. தம் காலத்தே இவர் பீஜகணிதத்தில் ஒரு சிறந்தமேதாவி யாகவும், ஜோதிஷத்தில் ஒரு நிபுணராகவும் புகழ் பெற்றிருந்தார். இவர் அராபி மொழியில் இயற்றிய பீஜ கணிதம், மிகப் பலவாய்ப் பிரதிகள் செய்யப் பட்டு, பலராலும் கற்கப்பட்டு வந்தது. இவர் இயற்றி யுள்ள முகம்மதியப் பஞ்சாங்கம் கணிதத்தில் இவருக் கிருந்த பெருந்திறமையைக் காட்டவல்லதென்பர். இவரது ஆழ்ந்த கல்வியறிவு முதலியவற்றையெல் லாம் தற்கால மக்கள் மறந்துவிட்டார்கள். மறவாது போற்றுவது எவற்றை என்றால், வாழ்க்கையைக்

குறித்தும், அது பயனின்றி வறிதாயுள்ள தன்மையைக் குறித்தும் இவர் சிந்தித்து எழுதியுள்ள பாடல்களைத்தான். இவற்றிலே லட்சக்கணக்கான மக்களுடைய உள்ளத்தில் தோன்றும் சந்தாப உணர்ச்சி பிரதிபலிக்கிறது.

இக் கவிஞரது உண்மைப் பெயர் கியாதுடீன் அபுல்பாத் உமார். கி. பி. 11–ஆம் நூற்றுண்டின் தொடக்கத்தில் நிஷபூர் என்ற நகரத்தில் இவர் பிறந்தனர். இவர் தமது பெயரோடு கய்யாம் என்பதையும் தாமே சேர்த்துக் கொண்டார். ‘கய்யாம்’ என்பதற்குக் ‘கூடாரம் செய்பவன்’ என்று பொருள். இத்தொழில் இவரது தந்தைக்கு இருந்தது போலும். இவர் பள்ளிக்கூடத்தில் வாசித்துக் கொண்டிருக்கும் பொழுது, இவரது பள்ளித் தோழர்களாய் இருவர் இருந்தனர். இவர்கள் தமக்குள் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டனர். தம்முள் யாரேனும் ஒருவர் உன்னத பதவியை அடைந்து செல்வர்களாய் விடுவார்களாறுல் அவர் மற்றை இருவருக்கும் உதவி செய்து. அவர்களைப் பதவியில் உயர்த்த வேண்டும் என்பது தான் அந்த ஒப்பந்தம். வியக்கத்தக்க முறையில் இந்த ஒப்பந்தம் நிறைவேறியது. ஒருவர் ஒரு மாகாணத்தை ஆளும் பதவியைப் பெற்றனர். உடனே இவர் அரண்மனை ஸர்வாதிகாரப் பதவியைத் தம் தோழர்களுள் ஒருவருக்குக் கொடுத்தனர். உமாருக்கு அவரது கணிதப் பயிற்சி இடையீடின்றி நடைபெறவேண்டும் என்று கருதி, ஆண்டுதோறும் ஒரு பெருந்தொகையைக் கொடுத்துக் கவலையின்றி வாழச் செய்தனர்.

இவ்வாருகப் பணக்கவலை யாதொன்றும் இல்லாதபடி உமார் கய்யாம் தம்முடைய நீண்ட ஆயுளை, கணிதம் முதலிய சாஸ்திரப் பயிற்சியில் செலவிட்டு வந்தனர். இடையிடையே மக்களுடைய இம்மை, மறுமை முதலிய பொருள்கள் பற்றியும் ஆழ்ந்து சிந்தித்து அற்புதமான செய்யுட்கள் பல இயற்றினர். இச் செய்யுட்களுக்கு 'ருபாயத்' என்று பெயர். 'ருபாயத்' என்ருல் நான்கடிச் செய்யுள் என்று பொருள்; தமிழிலுள்ள நாலடியார் என்ற நூற் பெயரை இதனேடு ஒப்பிடலாம்.

இவர் சிந்தித்துக் கண்ட முடிபு இன்ப உணர்ச்சியை விளைவிக்கத் தக்கதன்று. இவர் பாடல்களிலே வாழ்வு முடிந்ததன் பின் மறுமையைக் குறித்து யாதும் உறுதியாகக் கூற முடியாது என்ற கொள்கை தொனித்துக்கொண்டே யிருக்கிறது. இவ்வுலகத்தில் உண்பதும், குடிப்பதும், சுகித்து வாழ்வதும்தான் கைகண்ட பலனே என்று இவர் ஐயுறவு கொண்டனர். ஒரு சோக உணர்ச்சிதான் இவரது பாடல்களின் அடிநாதமாய் அமைந்துள்ளது.

இச் சோக உணர்ச்சியை இவரது அரிய கவிதை வாசிப்போர் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் புகுத்தி, நிலைபெறச் செய்யவல்லது. எனினும் ஒருசார் அறிஞர்கள், இச் சோக உணர்ச்சியில் ஈடுபடாது ஒன்றிலும் நம்பிக்கையற்றவன் இகழ்ந்து நகையாடும் அடங்காச் சிரிப்பொலியையும், மது, மங்கையரின்பம், மதுரமான பாட்டின்பம் இவற்றை

வற்புறுத்தும் உபதேச ஒலியையும் இவர் பாடல்களில் கண்டனர். ஆனல் ஆன்மாக்கள் துடி துடித்து வருந்தும் துன்ப நிலே இந்தப் பாரஸிகக் கவிதைகளிலே அங்கங்கே காணப்படுதல் உண்மை.

வந்த வந்த மனிதரெல்லாம்
வனேவும் நெளிவும் கண்டுஎன்னேச்
சந்த மில்லாப் பானேயெனத்
தள்ளி வைத்துச் சென்றனரால்;
அந்த நாள்அக் குயவன் கை
ஆட்டத் தாலே நேர்ந்தபிழைக்கு
இந்த நாளில் ஏழை எனே
ஏனே குறைகள் கூறுவரே!

வழியிற் குண்டு குழிவெட்டி
வலேயுங் கட்டி மதுவுண்டு,
விழவோர் விதியும் அந்நாளே
விதித்து வைத்துஎன் கேடெல்லாம்
அழியாப் பாவம் அதனலே
ஆன விளேவென்று அறைவாயோ?
தெளியாது உலகில் என்றென்றும்
திகைத்து மறுகி நின்றேனே!

நன்மையும், தீமையும் ஒருங்கு வாழும் இடமாக நம்மைப் படைத்துவிட்டு, நாம் செய்யும் தீமைகளுக்கு நம்மை இறைவன் தண்டிப்பது நீதியாகுமா என்று கவிஞர் கேட்கிருர்.

யாது சொன்னாய்? இன்னமுதம்
ஏந்தி உண்ட கலமதனை
மோதி உடைக்கும் அறிவில்லா
மூடன் எங்கும் உண்டுகொலோ?
ஓதற் கரிய பேரருளால்
உவந்து கண்ட உருவமதைத்
தீதென் றெண்ணிச் சினம்பெருகிச்
சிதைக்கத் தெய்வம் துணிந்திடுமோ?

வாழ்வின் ரகஸியங்களையெல்லாம் உமார் ஆழ்ந்து நெடுங்காலம் சிந்தித்துள்ளார். இன்ப துன்பங்களைக் குறித்து அவர் கூறுவதைக் கேளுங்கள்:

ஊனு ருடலம் இதுவீழின்
உண்டாம் வாழ்வின் நிலையறிய
ஆனு ஆசை மிகவேஎன்
ஆன்மா வினையான் வேண்டிநின்றேன்:
நானு உலகம் நெடுநாளா
நாடி யலைந்து வந்ததுதான்
'யானே சொர்க்கம் நரகமெலாம்'
என்றே கூறி நின்றதுவே.

துன்பம் வருதல் ஒருதலை என்பதும், அதனைத் தடுத்தல் இயலாது என்பதும் பின்வரும் செய்யுள் காட்டுகிறது.

எழுதிச் செல்லும் விதியின்கை
எழுதி எழுதி மேற்செல்லும்;

தொழுது கெஞ்சி நின்றாலும்
சூழ்ச்சி பலவும் செய்தாலும்
வழுவிப் பின்னால் நீங்கியொரு
வார்த்தை யேனும் மாற்றிடுமோ?
அழுத கண்ணீ ராறெல்லாம்
அதிலோர் எழுத்தை அழித்திடுமோ?

ஆனால், மரணத்தின் ரகஸியத்தையும் அதற்குப் பின் நிகழ்வதையும் குறித்து யாதும் தெரிய முடியாது என்கின்றனர் கவிஞர்.

மண்ணை வலமாய்ச் சுற்றிவந்தேன்;
வானும் அளந்து கணக்கிட்டேன்;
நண்ணும் வழியில் பலசிக்கல்
நாடி நன்கு விளக்கிவந்தேன்;
எண்ணும் மனிதர் தமையடையும்
இறப்பும் ஊழும் இவையென்று
திண்ண மாகச் சொல்ல ஏதும்
தெரியாது இங்கே திகைத்தேனே!

திட்டிக் கதவு தெரிந்ததடா!
திறவு கோலும் இல்லையடா!
கட்டித் திரையும் கண்டதடா!
கண்ணும் மயங்கி நின்றதடா!
ஒட்டிச் சிறிது நீநான்என்று
உரைத்த உரையும் கேட்டதடா!
நட்ட காலம் பின்னையடா!
நான்நீ யற்றுப் போச்சுதடா!

இவ்வாறு தெரியாததைத் தெரிந்தது போலப் பாசாங்கு பண்ணுவது உமாருக்கு வெறுப்பையே விளைத்தது. அறியாமையினூடே படாடோபமான வார்த்தைகளைப் பேசி நாம் நடிக்கிறோம். விஞ்ஞானம், தத்துவம் முதலியன எல்லாம் மறுமை பற்றிய அளவில் பயனற்றனவே.

அன்றென் இளமைப் பருவத்தில்
அறிவிற் சிறந்த புலவரையும்
நன்று சீலமுடைய பெரு
ஞானிகளையும் அடிபணிந்து
நின்று கேட்ட வாதங்கள்
நினைப்பின் அரிய ஆயிடினும்
சென்ற வாயில் வழியேதான்
திரும்பி அந்தோ வந்தேனே!

ஞானிகளாவது பிற பேரறிஞர்களாவது இதற்கு ஒரு முடிவு சொல்ல முடியுமா? முடியாது. அவர்களை இயற்கை இகழ்ந்து சிரிக்கிறது.

கொற்ற மன்னர் முடிசூடிக்
கொலுவில் அமர்ந்த திருக்கோயில்
முற்றுங் கூகை ஆந்தையொடு
முதுபேய் வாழும் காடாமே!
வெற்றி வில்லை ஏந்திமுனம்
வேட்டை செய்த வேடன் கை
பற்றி நரிகள் இழுப்பதையும்
பாரில் கண்ணால் பார்ப்போமே!

ஆனால், மனிதன் செய்யக் கூடியது ஒன்று உண்டு. மரணத் தறுவாயிலே, மனத் திட்பத்தோடு, யாராலும் துணிய முடியாத அந்த மறுமையில் யாதுதான் உள்ளதென அறிய, அவன் தைரியத்தோடு செல்லக்கூடும். இவ்வாறு செல்வது அவனிடத்துள்ள தெய்வத் தன்மையை வெளிக் காட்டுகிறது.

ஆனால், இந்த மண்ணுலகத்திலே எல்லாவற்றையும் இழந்து விட்டோம் என்ற உணர்ச்சி ஏன் நமக்கு உண்டாக வேண்டும்? மண்ணுலகத்திற்கு அப்பால் ஏன் அத்தனை ரகஸியம் சூழ்ந்து கொண்டிருக்க வேண்டும்? எல்லாம் வல்ல இறைவன், அவரது கருத்தை நமக்கு உணர்த்தி, நம்மையும் தமது ரகஸியத்திற் பங்குகொள்ளச் செய்திருக்கக் கூடாதா? நாம் இந்த உலகத்தில் பிறக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டோமா? இதைவிட்டு நீங்க வேண்டும் என்று சொன்னோமா? இல்லை. நம்மை எங்கிருந்தோ இவ்வுலகில் தள்ளி, இங்கும் அங்குமாக அலைத்து இழுத்துச் சிறிதும் ஈவு இரக்கமின்றி நம்மை வெளியே ஏன் எறிந்துவிட வேண்டும்? இதை நினைத்த உடனே நமது உள்ளத்தில் துக்கம் பிறிட்டெழுகிறது.

என்னைக் கேளாது எங்கிருந்தோ
இங்கே தூக்கி எறிந்திட்டான்;
என்னைக் கேளாது இன்னுமவன்
எங்கே தூக்கி எறிவானோ?

என்ன செய்வேன் ? இக்கொடுமை
ஏழை உள்ளம் மறந்தொழிய
வன்னக் கிளியே ஒருகிண்ணம்
மதுவை ஊற்றித் தருவாயே.

எல்லாம் இங்கோர் சூதாட்டம் ;
இரவும் பகலும் மாருட்டம் ;
வல்லான் விதியே ஆடுமகன் ;
வலியில் மனிதர் கருவிகளாம் ;
சொல்லா தெங்கும் இழுத்திடுவான்,
ஜோடி சேர்ப்பான், வெட்டிடுவான்,
செல்லா தாக்கி ஒவ்வொன்ருய்த்
திரும்ப அறையில் இட்டிடுவான்.

இறைவன் தலையிடாதபடி நம்மையே இச் சூதாட்டத்தைத் தீர்த்துக் கொள்ளும்படி விட்டிருப் பானுனல், திருப்திகரமான ஒரு முடிவைத் தேடி யிருப்போமல்லவா ?

அன்பே யானும் நீயும் இசைந்து
அயலில் எவரும் அறியாமல்
வன்பே உருவாம் விதியினையும்
வளைத்துள் ளாக்கி முயல்வோமேல்,
துன்பே தொடரும் இவ்வுலகைத்
துண்டு துண்டாய் உடைத்துப்பின்
இன்பே பெருகி வளர்ந்திடுமோர்
இடமாய்ச் செய்ய இயலாதோ ?

இந்நிலையில் மனிதன் என்னதான் செய்யக் கூடும் ? மதுபானம் செய்து, அறிவை மயக்கி

அதில் மூழ்கிக் கிடப்பதுதான் அவன் செய்யக் கூடியது. உறுதியாக ஒன்றுதான் உள்ளது. அது யாது என்ருல், நிகழும் நிமிஷம்தான். வாழ்வு சிறிது காலம்தான்; முடிவு நெருங்கி வருகிறது. அந்தக் காலத்தை வீண் போக்காது இன்ப நுகர்ச்சியில் கழித்தல் வேண்டும். புகழ் வேண்டாம்; செல்வம் வேண்டாம்; அதிகாரம் வேண்டாம். இந்திரிய சுகங்களை, இப்பொழுதே சக்தி இருக்கும்வரை, கைப்பற்ற வேண்டும். இந்த உபதேசத்தில் வாழ்விற் காணும் தோல்வியும் துன்பமும் இவற்றை மூழ்கடிப்பதற்கு வேண்டும் எக்களிப்பும் தெளிவுறுத்தப்படுகின்றன.

ஒழிந்த பாழில் ஒரு கணமாம்;
    உயிர்வாழ் உலகில் ஒரு கணமாம்;
வழிந்து விண்ணின் மீன்க ளெல்லாம்;
    மங்கி மங்கி மறைந்தனவே
அழிந்த பாழின் உதயங் கண்டு
    அறியச் செல்வோர் அணைவருமே
எழுந்து நின்ருர்; கண்டிலையோ?
    எழுவாய்! எழுவாய்! எழுவாயே!

வாராய் நண்பா, வருத்தமெனும்
    வாடைக் காலப் போர்வையினை
நேரா வருமிவ் வசந்தமெனும்
    நெருப்பில் வீசி எறிவாயே!
தேரா வாழ்வின் பறவைஇனும்
    செல்லும் தூரம் சிறிதேயாம்,
பாராய்! பாராய்! பறவை அதோ
    பறக்கச் சிறகும் விரித்ததடா!

மதுவில் மகிழ்ந்த மக்களுக்கு இறுதிக்காலம் வரும் பொழுது அவர்கள் சூனியத்தைச் சந்திப்பதற்குச் செல்லலாம்; இங்கே வாழ்ந்து தயங்கிக்கொண்டிருப்பவர்கள் மதுக் கிண்ணத்தில் ஒன்றுமில்லாது உறிஞ்சிக் குடிக்கும் வரையில் உயிர் தாங்கட்டும். வாழ்வின் ரஸத்தை முழுவதும் நுகர்ந்து அதைச் சக்கையாகச் செய்துவிடட்டும்.

வாழ்வு பற்றிய இக் கொள்கை நம் மனத்தைக் கவர்கிறது. ஆனால், இது வெகு அபாயகரமாகவும் உள்ளது. உய்யும் நெறி காணாது தவிக்கின்ற ஒரு மனப்பான்மையிலிருந்து இக் கொள்கை பிறந்துள்ளது. இக்கொள்கையைப் பின்பற்றினால், உலக மக்கள் மிருகப் பிராயமாய் முடிந்து விடுவார்கள். நாகரிகமும் மக்களுடைய இன்பமும், தனக்குரிய பொறுப்பை உணராதிருக்கும் ஒருவனது மன நிலையை அடிப்படையாகக் கொண்டு, பிறப்பன அல்ல.

என்றாலும், உமார் கய்யாம் சிலசில உண்மைகளின் அடி நிலத்தைத் தொட்டுவிடுகிறார். இவ்வுலகத்திலே நம்மை மயக்கி ஈடுபடும்படியாகச் செய்கின்ற அற்பப் பொருள்களுக்கு நாம் முயன்று வருவதைக் கண்டு உமார் நகையாடுகிறார். உலகத்திலுள்ள சமயங்கள் ஒவ்வொன்றிலும் இவ் வுண்மை வெளியிடப்பட்டுள்ளது. ஆனால், ‘மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருக்கும் பொழுது இறைவனை நினைக்க மறந்து விடாதே’ என்று இச் சமயங்கள் வற்புறுத்துகின்றன.

வாழ்க்கைத் தத்துவத்தைக் குறித்து, உமார் கய்யாம் கொண்டுள்ள கொள்கை எவ்வாருயினும், அவரது கலேயுணர்ச்சி அதியற்புதமாக உள்ளதென் பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்! விஷயங் களேச் சுருக்கிக் கூறும்பொழுது உண்மையில் ஒளி பரவும்படி செய்யும் ஆற்றல், உண்மையைக் காணும் உள்ளுணர்ச்சி, பல்வேறு சிந்தனைகளே மனத்திலே குறிப்பாய்த் தோற்றுவிக்கும் பாவனு சக்தி, உலகப் பொதுமையாயுள்ள உணர்ச்சிகளும் கருத்துக்களும், தம் கருத்துக்களே எதிரேற்றுக் கொள்ளும்படியாகச் செய்யும் ஆற்றல்; இவைகள் எல்லாம் உமாரின் கவித்வப் பெருமையை நன்ருக உணர்த்துகின்றன. கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளேயின் அழகிய கவிதையிலும் அப்பெருமை நன்ருகப் புலப்படுகிறது.

4. தே. வி. யின் கீர்த்தனங்கள்

தற்காலத்துள்ள கவிஞர்கள் அனைவரிலும் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை தலைசிறந்தவர் என்று முன்பு ஒருமுறை நான் எழுதினேன். இது உபசாரமல்ல, உண்மையே என்பது நாட்கள் செல்லச் செல்லத் தெள்ளத் தெளிவாகி வருகிறது.

கவிமணியின் கவிதைகள் தமிழர் பண்பாட்டிலும் மரபிலும் பிறந்தவை; உள்ளத்தே அமுதூறித் தித்திப்பவை. சுவைத்துச் சுவைத்துச் சொல்லுந் தோறும் இனிமை கனிந்து சுரப்பவை. பார்ப்பதற்கு இனிதாய், மோப்பதற்கு நறியதாய், வாயிலிட்டுச் சுவைக்குந்தோறும் ரஸங்கனிந்து ஊறுவதாய், உள்ளுந்தோறும் அமுதெனத் தித்தித்து அவாவை மேன்மேலும் பொங்கியெழச் செய்வதாயுள்ள இன்னறுங் கனியை ஒத்திருப்பவை கவிமணியின் கவிதைகள். இக் கவிதைகள் திடீரெனக் காய்ப்பதுமில்லை; திடீரெனக் கனிவதுமில்லை. ஆன்மபரிபக்குவ காலத்திலேதான் காய்த்து முதிர்ந்து இவை கனியவல்லவை. கவிமணியை நேரிற்காணும் பேறு பெற்றோர், அவரது ஆன்ம பரிபக்குவ நிலையை உணர்வார்கள். அத்தகைய நிலையிலிருந்துதான் 'மலரும் மாலையும்' 'ஆசிய ஜோதி' முதலிய கவிதைத் தொகுதிகள் தோன்ற வல்லன என எளிதில் தெரிந்து கொள்வார்கள்.

இந்த ஆன்ம நிலையின் ஒரு முகப்பினையே 'மலரும் மாலையும்' என்ற தொகுதியில்* காண்கிறோம். இகமும் பரமும் இதில் கலந்து கூட்டுறவு கொண்டு இனிமையாய் விளங்குகின்றன. புத்த பிரானைப் பற்றிய பாடல்கள் இக வாழ்வின் சிகரமாய் மேம்பட்டு நிற்கின்றன. இக வாழ்வை மகிழ்ச்சி நிரம்பச் செய்யவல்ல நாட்டுப் பாடல்கள், இயற்கை பற்றிய பாடல்கள் முதலியன இவ் வாழ்வின் பலதிறப்பட்ட அம்சங்களையும் நம் மனத்தில் ஆழ்ந்து வேரூன்றச் செய்துவிடுகின்றன. சிறுவர் சிறுமியரைப் பற்றிய பாடல்கள் அவர்களிடத்தே சிறந்து விளங்கும் தெய்விகத் தன்மையை நமக்கு விளங்க வைக்கின்றன. அவர்களைத் 'தெய்வமொடு ஜீவன் வசிக்கும் திருக்கோயில்கள்' என்று கூறலாம். இக்கவிதைத் தொகுதிகளில் நேரே தெய்வம் பற்றிய பாடல்களும் சில உள்ளன. இவையும் இக வாழ்வு நிரம்புவதற்கு இன்றியமையாது வேண்டப்படும் தெய்வ உணர்ச்சியை நமக்கு ஊட்டுகின்றன. மீராபாயின் சரிதப் பாடல்கள் இகமும் பரமும் போராடி, முடிவில் பரவாழ்க்கை வெற்றி கொண்டதை இருவகை வாழ்விற்கும் பொதுவாகிய அன்பின் மூலமாய்ப் புலப்படுத்துகின்றன.

---

* முதற்பதிப்பில் ஆசிய ஜோதியும், உமார்கய்யாம் பாடல்களும் 'மலரும் மாலையும்' என்ற தொகுதியில் ஒருசேர வெளியிடப்பட்டன. பிற்பதிப்புக்களில் அவை இரண்டும் தனித்தனி நூல்களாக வெளிவந்துள்ளன.

இந்நிலையினின்றும் விளைந்து இதனினும் சிறந்து காணும் நிலையொன்றைக் கவிமணியின் ஆன்மா எய்தியுள்ளது. இப்பிற்பட்ட கனிவுதான் கவிமணியின் கீர்த்தனங்களிலே காணப்படுவது. சாதாரணச் செய்யுட்களுக்குரிய இலக்கணத் தளைகளைக் கீர்த்தனங்கள் தகர்த் தெறிந்து விடுவது போல், கவிமணியின் ஆன்மாவும் இகவாழ்வு பற்றிய தளைகளையெல்லாம் முற்றத் தகர்த் தெறிந்து விட்டது. ஐதிக நாட்டமே இந்நிலையில் இல்லை. பரம்பொருள் பற்றிய நாட்டமே இதில் ஒளிவிட்டுத் திகழ்வது. நன்கு முதிர்ந்து பழுத்த நறுங்கனியின் தன்மையை ஒத்துள்ளது கவிமணியின் ஆன்மா. 'தாமரையிலையில் தண்ணீர்போல' என்று ஆன்ம ஞானிகள் கூறுவது கவிமணியின் ஆன்ம-பரிபக்குவ நிலையை நன்கு உணர்த்துகிறது.

இப்பரிபக்குவ நிலையில் உலகனைத்தையும் அருளாணை செலுத்திப் பரிபாலித்து வரும் மூல பரம்பொருளின் மீதுள்ள பக்தியே எங்கும் காணப் படுகிறது. இப்பரம் பொருளின், பேதங்களாகவே நமது சமயத் தெய்வங்களும் பிறசமயத் தெய்வங் களும் கொள்ளப்படுகின்றன. கம்பரும்,

நல்லிடைப் பிறந்து போந்து
　　　நடலிடைக் கலந்த நீந்தும்
எல்லையில் மறைக ளாலும்
　　　இயம்பரும் பொருளீ தென்னத்

தொல்லையின் ஒன்றே யாகித்
துறைதொறும் பரந்த சூழ்ச்சிப்
பல்பெருஞ் சமயம் சொல்லும்
பொருளும்போல் பரந்ததன்றே.

(பால, ஆற்றுப், 91)

என்று மூல பரம்பொருளின் தன்மையையும் சமயங்களின் தன்மையையும் விளக்கியுள்ளார். இத்தெய்வங்கள் நாம ரூபாதிகளால் வேறுபடுகின்றனவே யன்றி உண்மைத் தத்துவத்தில் வேறுபடுவன அல்ல என்பதை இம் மகாகவியே பிறிதோரிடத்துக் கூறுகின்றனர்;

பேரை ஒரு பொருட்கே பல்வகையாற் பேர்ந்தென்றும்
நாரை நிலையை தமியை பிறரில்லை;
யாரைப் படைக்கின்றது? யாரை அளிக்கின்றது?
யாரைத் துடைக்கின்றது? ஐயா! அறியோமால்!

(யுத்த. இரணிய. 159)

இங்குக் கூறிய பொதுநோக்குடனே கவிமணி பற்பல தெய்வங்களைப்பற்றியும் கீர்த்தனங்களைப் பாடியுள்ளார் என்பது நன்ருக மனங்கொள்ளத் தக்கது. சமய விகற்பங்களை மனத்துட் கொண்டு அவற்றை ஆதரிக்கும் முறையில் சிவன், திருமால், முருகன் முதலிய தெய்வங்களைக் குறித்துக் கீர்த்தனங்கள் இயற்றப்பட்டன என்று கருதுதல் தவருகும். தெய்வங்களைச் சமநிலையில் வைத்து அவற்றைக் குறித்துப் பாடியுள்ளார் என்பதும் பொருத்தமன்று. சமநிலை என்ற கருத்தே ஆசிரியரது

உள்ளத்தில் நிலவாதது. நாமரூபங்களையெல்லாம் கடந்து நிற்கும் பரம்பொருளை இவற்றைக் கற்பித் தன்றிப் பிறவாறு பாடுதல் இயலாது.

ஒருநாமம் ஓர்உருவம் ஒன்றுமில் லாற்குஆயிரம்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ?

(திருவாச. தெள்ளே. 1)

என்று மாணிக்கவாசகர் கூறியது போலவே நமது கவிமணியும்,

ஒருநாமம் ஓருருவம்
ஒன்றுமில்லாற் காயிரம்—

(திருநாமம் பாடி வாழ்த்துவோம்)

என்று பாடியுள்ளமை இங்கு அறியத்தக்கது. திருநாவுக்கரசர்,

மைப்படிந்த கண்ணாளும் தானும் கச்சி
மயானத்தான் வார்சடையான் என்னி னல்லால்,
ஒப்புடைய னல்லன்; ஒருவ னல்லன்;
ஓரூர னல்லன்; ஓருவம னில்லி;
அப்படியும் அந்நிற முமவ் வண்ணமும்
அவனருளே கண்ணாகக் காணின் அல்லால்,
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண் ணத்தன்
இவனிறைவன் என்றெழுதிக் காட்டொ ணாதே.

(தேவாரம் VI, 97, 10)

என்று கூறுகின்றார்.

கவிமணி இப் பரிபக்குவ நிலையை அடைவதற்கு ஒரு வியாஜமாயிருந்தது தமிழிசை இயக்கம். ஆனல் அவரது கீர்த்தனங்கள் அனைத்தும் இவ் வியக்கத்தின் காரணமாகவே தோன்றின எனல் பொருத்தமில்லை. தொடக்கத்தில் சிறிதளவு இவ் வியக்கம் இவரை ஊக்கி யிருத்தல் வேண்டும். ஆனல், இசையினுல் மனம் கனிவு பட்ட பொழுது இவ்வியக்கத்தைப்பற்றிய நினைவு அறவே ஒழிந்து விட்டது. இசைப் பொருளிலேயே மனம் ஆழ்ந்து ஈடுபட்டு நின்று அதன் மயமாகக் கவிமணி பரிணமித்து விட்டனர் என்றே கூறுதல் வேண்டும். எனவே, வடமொழிக் கீர்த்தனங்கள், தெலுங்குக் கீர்த்தனங்கள் முதலியவற்றை முற்றும் ஒழித்துத் தமிழ்க் கீர்த்தனங்களின் சார்பாகவே முற்றும் நின்று, இசை விவகாரப் பூசலில் இவர் கலந்து கொண்டார் என்று கருதுவது பெரியதொரு தவருகும்.

கவிமணி இயற்றியுள்ள கீர்த்தனங்களின் இயல்பை நோக்கினுல், பூசற் கருத்து முதலியவற்றிற்குச் சிறிதும் இடமில்லை யென்பது விளங்கும்.

மக்கள் இயல்பையும் உலக இயல்பையும் பரிசிலனை செய்த ஒரு ஞானிக்கு மனிதனது அற்பத் தன்மையும் அவனது அறிவு ஆற்றல்களின் சிறுமையும் எளிதில் புலப்படும்.

உன்னுலே என்ன ஆகும்?—ஏழை மனிதா!
உன்னுலே என்ன ஆகும்?

என்ற கீர்த்தனம் இக் கருத்தினையே உட்கொண்டது. இக் கருத்தினால் நிறைந்த உள்ளத்தின் இயல்பை அறிந்து கொள்ளுதல் இன்றியமையாதது. இவ்வுள்ளம் பாதை அறியாதபடி பரிதவித்து உழலும். எங்கு நோக்கினும் அச்சமே இதனை வருத்தும். இவ்வுள்ளத்திலே களைகள் ஆகிய குற்றங்கள் நிரம்பி உண்மைக் கதிர் செழித்தோங்குவதற்குத் தடையாய் நிற்கும். வீண் முயற்சிகளில் மூண்டு நின்று அவதியுறும். உண்மையான நெறிகளிற் செல்லாது தடுமாறும்.

மக்களது உள்ளத்தியல்பு இவ்வாருக, இறைவன் இயல்பு மாருகவுள்ளது. ஈடும் எடுப்புமிலா ஏக பரம்பொருளாகிய அவன் நமக்கு மிகச் சேய்த்தாயிருக்கின்ருன். எனினும், அப்பனும் அம்மையும் போல் அவன் அணியனுயும் இருக்கின்ருன். அவனைத் தேடித் திரிந்தால் காண இடங்கொடான். ஊனக் கண்ணுல் நோக்கினுல் சோதி சொரூபனுகிய அவனுடைய பேரொளியும், எங்கும் உலவி வரும் அவனது காட்சியழகும் காண முடியாதவையாயுள்ளன; இரண்டல்ல, ஆயிரம் கண்கள் இருந்தாலும் அவை போதா; மனக்கண்ணினுல் மாத்திரமே அவன் அறிதற்குரியவன். அவனது தன்மை இயற்கைத் தோற்றங்களில் வெளிப்படுகின்றது. சரத் காலமும் அவனது அற்புதக் காட்சியையே நமக்கு வெளிப்படுத்துகிறது. அக்காலத்தில் நமது உள்ளத்தில் ஊக்கத்தை நிரப்பிக் களிப்பைப் பெருகச் செய்து, விளையாட்டுக்களில் பற்று விளைத்து, இன்னிசைகளில் இன்புறச்

செய்து மகிழ்விக்கும் இயல்புடையவன். மனத்தை வசீகரிக்கும் இனிய கதைகளுக்கு அவன் நாயகனக விளங்கும் இயல்புடையவன்.

அவன் அருள்மயமாக உள்ளவன். எனினும், பாத்திரங்களின் இயல்பறிந்து, பக்குவமறிந்து, சமயமறிந்து இரக்கங் காட்டி அருள்புரிவான். அவன் சிற்சில காலங்களில் சித்திரத்திலும் சிற்பத்திலும் காணக் கூடாத பேரழகுடைய மோகினியாகி நமக்குக் காட்சியளித்து வசீகரிக்கும் தன்மை வாய்ந்தவன்.

இங்ஙனமாயிருந்தும் இறைவனது அருள்-தன்மை ஒன்றே நமது வியப்புணர்ச்சியை முற்றும் கவர்ந்து விடுகிறது. இவ்வருளைப் பெறுதற்கு உரிய அறிவுரைகள் உள்ளத்திற்கு இன்றியமையாதவை. எப்பொழுதும் அவனுடைய குணவிசேஷங்களை நினைந்து நினைந்து அவனை நினைவிலிருத்த வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகின்றது. வீண் முயற்சிகளில் மனத்தை அலையவிடாது அவனை வந்தனை செய்வதிலும் வாழ்த் தெடுப்பதிலும் நமது காலம் செலவிடப்படுதல்வேண்டும். அவனது சாந்நித்யம் விளங்குவதாகக் கருதப்படும் தில்லை முதலிய புண்ணிய ஸ்தலங்களில் சென்ருல் நமது மனமும் தூயநிலையை அடையும். அவ்வாறு செல்ல வேண்டும் என ஓர் உபதேசம் அளிக்கப்படுகின்றது. உள்ளத்தை நோக்கி, அவனைச் சென்றடைய வழியில்லை என்று வாடி வருந்த வேண்டாம். உயிரினங்களை யெல்லாம் காத்தற்குக் கங்கணம் பூண்டுள்

ளான் அந்தக் கருணாகரன். தான் நஞ்சினை உண்டுங் கூடப் பிறருக்கு அருள் புரியும் பேரருளாளன். இவன் உனக்கு அருள் செய்யாதிருக்க மாட்டான். நீ செய்ய வேண்டுவதெல்லாம் அவன் புகழைப் பாடிப் பணிவதொன்றே. அவனுடைய திவ்ய சரித்திரங்களிலே எத்தனையோ அருட் செயல்கள் புலப்படுகின்றன. அவற்றைப்பற்றி நெஞ்சமே நீ நித்தமும் பாடிப் பரவுதல் வேண்டும்.

மலைவு என்பது உன்னிடம் இருக்கக் கூடாது. அதற்கு ஒரு காரணமும் இல்லை. அலையாழி புரளாமலும் அண்டங்கள் சிதறாமலும் அவன் நிலையாய் நிறுத்துகின்றவன். உன்னைக் கைதூக்கி ஆள்வதற்குச் சிறிதும் பிற்படமாட்டான். நீ அச்சங் கொள்ளவும் வேண்டுவதில்லை; யமன் வரினும் அச்சம் கொள்ளவேண்டாம். உன் கையிலே யமனையும் வெற்றிகொள்ளத்தக்க ஆயுதம் இருக்கிறது. இறைவனது சின்னங்களை அணிந்து அவனது திருநாமங்களைக் குறிக்கும் மந்திரத்தை ஓதுவாயானால் எதற்கும் நீ அஞ்சுதல் வேண்டாம்.

அச்ச மில்லைநெஞ் சேஅரன் நாமங்கள்
நிச்ச லுந்நினை யாய்வினை போயறு

(தேவா. V. 60, 2)

என்று அப்பர் கூறவில்லையா?

என்ன செய்வேன் என்று நீ தளரவும் வேண்டாம். கடந்த நாட்களெல்லாம் வறிதே போக்கி விட்டதாகக் கருதி நீ கலங்குதலும் வேண்டாம். அவன் உனக்கு அருள்புரிதல் உறுதி.

இவ்வாறெல்லாம் நெஞ்சிற்கு அறிவுரை கூறி, அவன்மீது வைக்கும் பக்தியொன்றே ஆன்ம ஈடேற்றத்திற்குரிய வழியென்று பல இடங்களிலும் கவிமணி வற்புறுத்துகிறார். இப் பக்தியினால் ஆசிரியரை முற்றும் கவளீகரிக்கின்ற பேரவா ஒன்று, 'கண்டு தொழ வேண்டும்', 'வேறெதும் வேண்டேனே' என்ற இரண்டு கீர்த்தனங்களிலும் வெளியாகின்றது. நந்தனாரது உள்ளப் பாங்கே இங்கும் நமக்குப் புலனாகின்றது. பக்தி பரவசத்தில் இறைவனது அருளைப் பலவாறாக இவர் வேண்டுகின்றார். இவ் அருளே அடைக்கலம்; அன்றி வேறு புகலில்லை என்பது ஒரு சில கீர்த்தனங்களில் உணர்த்தப்படுகிறது. இவ் அருளைப் பெற்றுவிட்டால் எதற்கும் தயங்கவேண்டுவதில்லை என்றமனத்திட்பம் ஒரு கீர்த்தனத்தில் உணர்த்தப்படுகிறது. இறைவனை முற்றும் நம்பி, அவன் மீது பாரத்தை வைத்தல்தான் இவ் அருளைப் பெறுதற்குரிய மார்க்கம் என்பதும் நமக்கு உபதேசிக்கப்படுகிறது. இவ்வாறு அருளைப் பெற்ற பின் நமது மனம் இறுமாப்பெய்துகின்றது; விதியையும் வெல்ல முடியும் என்று துணிந்து அறைகூவுகின்றது. ஊரூராய்ச் சுற்றுதல் வேண்டும் என்று பறை கொட்டுகின்றது.

நம்பும் அடியார்கெட்
நாளும் அருள்வானைச்
(சிந்தனை செய்வோமே)

என்று நாடறிய விளம்பரம் செய்கின்றது. பக்தியைத் துணைக்கொண்டு, அருள் இரந்து,

இறைவன்பால் மனம் விரைவுபட்டு விரும்பிச் செல்வதைக் கீர்த்தனங்கள் பலவற்றிலும் காணலாம்.

இங்ஙனமாகப் பக்தி நெறியில் நிற்பவன் தன்னை நாயகியாகவும் இறைவனை நாயகனாகவும் பாவித்துக் காதல் நெறியில் வழிபட்டுச் செல்வது எல்லாச் சமயங்களிலும் காணப்படுவதொன்றே.

இந்நெறி இறைவனுக்கும் உயிர்களுக்கும் இருக்கும் அன்னியோன்யத் தொடர்பினை இனிதாய் அழகுபெற விளக்குவது; உள்ளஞ்சென்று பற்றுவதற்கு எளிதாயுள்ளது.

தமிழ் நாட்டில் இந்நெறி பெருகி விளங்குவதற்குத்தக்க வாய்ப்பும் இருந்தது. தேவாரத் திருப்பதிகங்களில் பல இடங்களிலும் இந்நெறியைக் காணலாம். சங்ககாலந்தொட்டு காதல்-துறைப் பாடல்களை இயற்றி அவற்றைப் பயின்றுவந்த தமிழ் மக்கள் அவற்றின் இன் சுவையில் ஈடுபட்டு ஆழ்ந்து விடுவது முழுவதும் இயல்பேயாகும். பின்னர், 9, 10-ம் நூற்றுண்டளவில் கோவை முதலிய பிரபந்தங்களில் இவ் அகத்துறைப் பாடல்கள் பல்வேறு துறைகளாகப் பாகுபடுத்து இயற்றப் பெற்று வந்துள்ளன. மாணிக்கவாசக சுவாமிகளது திருக்கோவை இதற்கொரு சான்று. ஆனல், இவ் வகைப் பிரபந்தங்களில் இறைவனேடு பக்தனுக்கு இருக்கும் தொடர்பு மிக அணியதாய்க் காணப் படுவதில்லை. உதாரணமாக,

காகத் திருகண்ணிற் கொன்றே மணிகலந் தாங்கிருவர்
ஆகத்து ளோருயிர் கண்டனம் யாமின்றி யாவையுமாம்
ஏகத் தொருவ னிரும்பொழி லம்பல வன்மலையில்
தோகைக்குந் தோன்றற்கு மொன்றாய் வருமின்பத்
துன்பங்களே

என்ற திருக்கோவைச் செய்யுளைக் (71) கூறலாம். இதனினும் அணித்தாயுள்ளது தலைவனையும் தலைவியையும் படர்க்கையில் வைத்துக் காதற்குறிப்புத் தோன்றப் பேசுதலாகும். உதாரணமாக,

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்,
மூர்த்தி யவனிருக்கும் வண்ணம் கேட்டாள்;
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்,
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்;
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்;
அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தை;
தன்னை மறந்தாள்; தன்நாமம் கெட்டாள்;
தலைப்பட்டாள் நங்கை தலைவன்தாளே.

(தேவாரம், VI, 25, 7)

இதனினும் மிகமிக அணித்தாயுள்ளது காதலி தானே நேர்படக் காதலனைக் குறித்துப் பாடுதலாகும்.

சிறையாரும் மடக்கிளியே, இங்கேவா தேனொடுபால்
முறையாலே உணத்தருவன்; மொய்பவளத்
தொடுதரளம்

துறையாரும் கடற்றோணி புரத்தீசன் துளங்குமிளம்
பிறையாளன் திருநாமம் எனக்கொருகால் பேசாயே

(தேவாரம், 1, 60, 10)

என்ற சம்பந்தர் திருப்பாட்டும்,

கருப்பூரம் நாறுமோ? கமலப்பூ நாறுமோ?
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ?
மருப்பொசித்த மாதவன்றன் வாய்ச்சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல் ஆழி வெண்சங்கே!

(நாச்சியார், 7, 1)

என வரும் ஆண்டாள் பாசுரமும் தக்க உதாரணங்களாம்.

இம் மூன்ருவது நிலையினின்றே தே. வி. யின் கீர்த்தனங்களில் பல இறைவன்மீது அவர் காதல் கூர்ந்த செய்தியைப் புலப்படுத்துகின்றன. 'தேடித் தவிக்குதடி' என்ற கீர்த்தனம் அவரது ஆராத ஆன்ம தாகத்தை உணர்த்துகின்றது. தமது துன்பத்தைத் தணிப்பதற்குக் காதலன் இன்னும் வரவில்லையே என்றும் காதல் நோயால் தாம் படும் வருத்தத்தைக் காதலன் அறியவில்லையா என்றும் கேட்டுத் தமது ஏக்கறவை இரண்டு கீர்த்தனங்களில் தே. வி. புலப்படுத்துகின்றனர். இவற்றுள், 'இன்னும் வந்தாரில்லையே' என்பதில் இறைவனுடைய குணம், செயல் முதலியவற்றில் ஈடுபட்டு அனுபவித்து நிற்கின்ருர்; தமது ஆராமையால் காதலன் செயல்களில் சிறிது நகைச் சுவையும் காணுகின்ருர்.

செந்தமிழ்ப் பண்ணிலே
சிக்கிக் கிடக்கின்ருரோ?
வந்தியின் பிட்டுக்கு
வழக்காடி நிற்கின்ருரோ?
சுந்தரன் வேண்டிடத்
தூது நடக்கின்ருரோ?
எந்தத் திசையேகி
என்னசெய் கின்ருரோ?

என்ற சரணப் பகுதியால் இது விளங்கும். காதலே மட்டும் புடுப்படுத்துவதைக் காட்டிலும் காதல னுடைய குணம், செயல் முதலியவற்றை விவரித் துக் கூறி, அவற்றை அனுபவித்துத் தனது பிரே மாதிசயத்தைக் காதலி புலப்படுத்துவது மிகமிகச் சிறந்த நிலையாகும். இந்நிலையைப் பெரியாழ்வார், ஆண்டாள் முதலியோர்களது திருப்பாசுரங்களில் மிகுதியும் காணலாம்.

கற்றினம் மேய்க்கிலும் மேய்க்கப் பெற்ருன்;
காடுவாழ் சாதியும் ஆகப் பெற்ருன்;
பற்றி உரலிடை யாப்பு முண்டான்;
பாவிகாள், உங்களுக் கேச்சுக் கொலோ?
கற்றன பேசி வசையு ணாதே
காலிகள் உய்ய மழை தடுத்துக்
கொற்றக் குடையாக ஏந்தி நின்ற
கோவர்த் தனத்தென்னை யுய்த்திடுமின்.

(நாச்சியார். 12. 8)

காதலர்கள் பிரிந்து நிற்கும் நிலையிலே ஓர் இரவு ஓர் ஊழியாகத் தோன்றும் என்பதனை மிக அழகாக,

> இருளும் நீங்கிடாதோ?—சூரியனும்
> எழுந்து வந்திடானோ?

என்ற கீர்த்தனம் புலப்படுத்துகின்றது. தனது ஆராமையைத் தோழியிடம் கூறித் தான் தீயில் விழுந்த புழுவாய்த் துடிக்கின்ற நிலைமையையும், தான் தூதாக விடுத்த கிளி மீண்டு வாராமையையும் சொல்லிப் புலம்புகின்றமை ஒரு கீர்த்தனத்தில் நயம் பெற உணர்த்தப்படுகின்றன. வேறொரு கீர்த்தனம் தனக்கும் தனது நாயகனுக்கும் நிகழ்ந்த அன்னியோன்யமான அன்புரையாடல்களைக் குறிப்பிட்டு, அவர் பிரியா விடைபெற்றுச் செல்லுகின்ற பொழுது, இன்னகாலத்தில் மீள்வேன் என்று கூறியிருந்தும், அங்ஙனம் அவர் வாராமை குறித்துப் புலம்புகின்றது. இவ்வாறு வாராமையால், வருந்தியிருக்கும் தலைவி நல்ல சகுனம் நோக்கித் தலைவனிடம் தூது போகும்படி தோழியை வேண்டுகிறது ஒரு கீர்த்தனம். காதலியின் அன்னை அவள் காதலால் பைத்தியங் கொண்டவள்போல் இருப்பதை உணர்ந்து, காதலனது ஏழைமைத் தன்மையையும், பயங்கரக் கோலத்தையும், இவற்றோடு அவன் பித்தனாயிருக்கின்ற நிலைமையையும், எடுத்துக் கூறி, அவள் மனத்தைத் திருப்ப முயல்கிறது வேறொரு கீர்த்தனம். தலைவன் வருகின்றான்; அவன் ஊதும் குழலோசை கேட்கிறது; அவ் இன்னோசை

யானது தலைவியைப்பற்றி இழுத்துச் செல்கின்றது. இந்நிலையை ஒரு கீர்த்தனம் புலப்படுத்துகிறது. இக் குழலோசையைக் குறித்து,

சிறுவி ரல்கள் தடவிப் பரிமாற,
செங்கண் கோடச் செய்ய வாய் கொப் பளிப்ப,
குறுவெயர்ப் புருவம்கூ டலிப்பக்
கோவிந் தன் குழல்கொ டூதினபோது,
பறவையின் கணங்கள் கூடு துறந்து
வந்து சூழ்ந்து படு காடு கிடப்பக்
கறவை யின் கணங்கள் கால்பரப் பிட்டுக்
கவிழ்ந் திறங்கிச் செவி யாட்ட கில் லாவே

என்ற பெரியாழ்வார் பாசுரம் இங்கே அறிதற் குரியது. இவ்வாறுள்ள பக்திப் பெருக்காலும் ஆராக் காதலாலும் இப்பூலோகமே சுவர்க்கமாக ஆகிவிடு கிறது. தனக்கு அருள் புரிந்த காதலன் வசிக்கு மிடம் காதலிக்குச் சுவர்க்கமே யல்லவா?

கண்ணாரக் கண்டுமகிழ் ஸ்வர்க்கம்
கனக சபையல்லவோ?

என்பது இக் கீர்த்தனம்.

இந்தச் சுவர்க்கத்தில் வீற்றிருக்கும் பிரஜைகள் யாவர்? அங்கே, வீற்றிருக்கும் பிரஜைகள் ஆதிப் பொதுமறையை இயற்றியருளிய திருவள்ளுவர்; சைவப் பயிர் வளர்த்த ஆறுமுகநாவலர்; ஆலய வாசலை அனைவர்க்கும் திறந்த மூலமன்னர் மருகர் சித்திரை மன்னர்; பற்பல கலைகளும் பல்கி வளர்ந்துவரச் செய்த அண்ணாமலை அரசர்;

ஏதும் கதியிலாத
எளியரைக் காப்பதற்கு
ஜாதி சமயக் கொடும்
சண்டை ஒழிப்பதற்குத்
தீதிலா அறப்போரில்
ஜயக்கொடி நாட்டுதற்குப்
போதிமா தவனெனப்
புவியில் அவதரித்த

புண்ணிய மூர்த்தியாகிய காந்திமகான்.

சுவர்க்கத்திலே சுதந்திரம் நிலவுகிறது. சுதந்திரக்கொடி வானுறவோங்கி நிதமும் பறந்து விளங்குகிறது. இந்தச் சுவர்க்கத்திலே ஓர் அழகிய மண்டபம் விளங்குகின்றது. அதுதான் பாரதி மண்டபம். அது பாரத சக்தி வளர்கின்ற பீடம்; பைந்தமிழ்க்கு ஆலயம்; வீர சுதந்திரத்தின் வெற்றி நிலைக்களம். இவற்றையெல்லாம் அழகிய கீர்த்தனங்களில் பாடுதற்கு ஆசிரியர் இன்னிசை வரம் வேண்டுதல் இயல்புதானே!

சுவர்க்கத்திலும் கவலைகளுண்டு; பிணி உண்டு; பிழைகள் உண்டு; முடிக்க வேண்டும் குறைகளுண்டு. கவலைகளைப் போக்கி, பிணியை நீக்கி, குறையை முடித்து, பிழைகளைப் பொறுத்து மன்னித்து ஆட்கொள்ளுதல் வேண்டும் என்று தே. வி. உள்ளம் உருகிப் பாடுகின்றார். எத்தனையேனும் பிறப்பெடுக்கத் தயங்கமாட்டேன், இறைவனை வணங்குவதற்குரிய நிலை வாய்க்குமாயின் என்று கூறிய கவிஞர் அறுதியாகப் பிறப்பறுத்தலையே

நோக்கமாகக் கூறுகின்றார். தனது குறைகளை உணர்ந்து தன்னை மன்னித்து, இறைவன் ஆட்சிகொள்ளுதலே கவிமணியின் பிரார்த்தனைகளிற் சிகரமாயமைந்துள்ளது என்று கூறி நாம் அமையலாம்.

மன்னித் தருள்வா யம்மா!—என் பிழையெல்லாம்
மன்னித் தருள்வா யம்மா!

தாய்தான் மன்னிக்கும் இயல்புடையவள். அவள்தான் தன் குற்றங்களைக் குற்றமாகக் கொள்ளாது மன்னிக்கும் இயல்புடையவள். அவள்தான் தன் குற்றங்களைக் குற்றங்களாகக் கொள்ளாது பரிந்து பேசுபவள். மன்னிக்க வேண்டும் என்ற இப்பிரார்த்தனையில் கவிமணி உலகனைத்தையும் ஈன்ற அன்புடைத் தாயைக் குறித்துள்ளது மிகவும் பொருத்தமாயுள்ளது. இசையினிமையில் உளம் கரைந்து உருகிப் பாடிய கவிமணி சித்தம் அமைதி பெற்று நமது தேசத்தை வாழ்த்துகின்றனர். இவ் வாழ்த்துப்பா கீர்த்தன வடிவிலில்லாமல், விருத்த வடிவாகவே தனியாய் நின்று, முற்கூறிய சித்த அமைதியைத் தனிப்படப் புலப்படுத்துகின்றது.

இனி, கீர்த்தனங்கள் தமிழ் மொழியில் தோன்றிய வரலாற்றினையும், அவற்றின் இயல்புகளையும் ஒரு சிறிது நோக்குவோம். இசையைப் பற்றியும் நாடகத்தைப் பற்றியும் நமது தொன்னூல்களில் பல குறிப்புக்கள் காணப்படுகின்றன. ஆனால், அவற்றில் கீர்த்தனங்களைப் பற்றிய குறிப்பு எதுவும்

இருந்தது என்பதற்குச் சான்று இல்லை. பண்ணைப் பற்றிய செய்திகள் சிலப்பதிகாரத்தாலும்,பரிபாடல் என்ற இலக்கியத்தாலும் ஒரு சிறிது விளங்கலாம். அவ்வகைப் பாக்களை நோக்கினும் கீர்த்தனங்கள் இருப்பதற்கு இடமில்லை என்பது புலப்படுகின்றது. முதன் முதலாக, குறவஞ்சி, பள்ளு முதலிய பிரபந் தங்களில்தான் கீர்த்தன முறையில் அமைந்த பாடல்கள் காணப்படுகின்றன. இவ்விரண்டனுள் ளும் முற்பட்டது பள்ளு என்ற பிரபந்த வகையா கும். இதனை 'உழத்திப்பாட்டு' என்றும் கூறுவர். உழத்திப்பாட்டு முதன் முதல் கி. பி. 13-ம் நூற் ருண்டில் தோன்றிய வச்சணந்தி வெண்பாப் பாட்டி யலில் காணப்படவில்லை. இதற்குப் பிற்பட்டு சுமார் 14-ம் நூற்ருண்டளவில் தோன்றிய பன்னிரு பாட்டி யலில் இவ் உழத்திப்பாட்டு காணப்படுகிறது. இவ்வகையைச் சார்ந்த பிரபந்தங்கள் முக்கூடற் பள்ளு, குருகூர்ப் பள்ளு முதலியன. இவை 16, 17-ம் நூற்ருண்டுகளில் தோன்றியவை. எனவே, 15-ம் நூற்ருண்டிற்கு முன் கீர்த்தன வடிவில் அமைந்த பாடல்கள் இல்லை என்றே துணியலாம். பிற்பட்ட காலத்தில் வரவர இவ்வகைக் கீர்த் தனங்கள் பெருகிக்கொண்டு வந்திருக்கின்றன. அருணாசலக் கவிராயரின் இராம நாடகக் கீர்த்தனை ஓர் எடுத்துக்காட்டு. இந் நூலைப் பின்பற்றி, 'பாரத நாடகம்' 'சகுந்தலை நாடகம்' 'அரிச்சந்திர நாட கம்,' 'பெரியபுராணக் கீர்த்தனை,' 'கந்த புராணக் கீர்த்தனை,' 'திருவிளையாடற் புராணக் கீர்த்தனை' முதலிய நூல்கள் பிறந்தன. இவைகளெல்லாம்

கதை யொன்றினை எடுத்துக்கொண்டு அதனைக் கீர்த்தனை வடிவில் பாடியனவாகும். தனிப்பட்ட முறையில் அமைந்த கீர்த்தனங்களுமுண்டு. கவி குஞ்சர பாரதி, முத்துத் தாண்டவராயர், வேத நாயகம் பிள்ளை முதலியோர்களது கீர்த்தனங்களைக் கூறலாம். இவற்றைப் பாடத் தொடங்கியது மிகப் மிகப் பிற்பட்ட காலத்திலாகும். தஞ்சையில் ஆட்சி புரிந்த மராட்டிய அரசர்களால் கீர்த்தனங்கள் மிக வும் சிறப்படைந்து விளங்கின. இக்கீர்த்தனங்கள் பெரும்பாலும் தெய்வத்தைப் பொருளாகக் கொண் டன. காதல் பற்றிக் கீர்த்தன வடிவில் தோன் றிய செய்யுட்களும் உண்டு. இவற்றைப் 'பதம்' என்பர். இப் பதங்கள் அபிநயம் செய்து காட்டு தற்குப் பெரிதும் ஏற்றவை. முற்கூறிய வழிகளில் சில சிறப்பான அம்சங்களைக்கொண்டு தே. வி. யின் கீர்த்தனங்கள் அமைந்திருக்கின்றன.

தே. வி. யின் கீர்த்தனங்களில் பல்லவி பொரு ளின் உயர் நிலையைச் சுட்டுகின்றது. அதுவே, திரும்பத் திரும்பப் பாடப் பெறுவதால் இங்ஙனம் உயர்நிலையாயிருத்தற்குப் பெரிதும் தகுதியுள்ளதே. ஒவ்வொரு பல்லவியும் உயிர் நிலையாயிருத்தலோடு, ஆசிரியரது உள்ள ஊற்றினின்றும் பொங்கி எழுந்து பாய்வதாகும். பல்லவிக்குத் துணையாய் அநுபல்லவி நின்று அதன் பொருளை வளம் படுத்து வதற்கு ஏற்ற முறையிலே சுருங்கி அமைந்திருக் கின்றது. இந்த அநுபல்லவி யின்றியும், கீர்த்தனம் இயன்று வருவதை ஒரு சில இடங்களிற்காணலாம்.

அவ்விடங்களில் சரணங்களைக் கண்ணி யென்பர். சரணம் பல்லவியின் பொருளைப் பலவாருக விளக்கி அதனை மனத்தில் பதிய வைத்தற்குத் துணையாவதாம்.

கீர்த்தனங்கள் அனைத்தும் செம்பாகமாகவும், தெளிவுடையனவாயும், எளிய சொற்களை யுடையன வாகவும் இருத்தல் இன்றியமையாதது. எளிமை யிலேதான் அழகு வாழ்வது; தெளிவிலேதான் இனிமை குடியிருப்பது. கடினமான சொற்களைக் கையாளுதல் சிறிதும் ஏற்கத் தகாததாம். இது போன்றே வடமொழியை மிகுதியாகக் கையாண்டு கீர்த்தனப் பொருள் எளிதில் விளங்க வொட்டாது மறைத்து விடுதலும் தக்கதன்ரும். இவ்விதமான குறைகள் தே. வி. யின் கீர்த்தனங்களில் சிறிதும் இல்லை.

தே. வி. யின் கீர்த்தனங்களின் மற்ருெரு சிறப் பியல்பு அவற்றிற் காணும் இலக்கியச் சுவையாம். இச் சுவையில் ஒருவகை நமது இலக்கியங்களிற் காணும் செய்திகளையும் நயமுள்ள சொற்ருெடர் களையும் அங்கங்கே எடுத்தாளுதலாம். உதாரண மாக,

அருணகிரிக்குச் செய்த
கருணைசெய் தடியேனை
ஆட்கொள்ள லாகாதா?

என்பதைக் காட்டலாம்.

கல்லைப் பிசைந்து கனியாக்க வல்லவர் என்பதில் திருவாசகத்தில் வரும் ஓர் இனிய சொற்றொடரை (திருவம்மானை, 5) நாம் காணலாம்.

வேறொரு வகை முன்புள்ள செய்யுளின் பொருளை இனிமையுற விளக்கி அமைத்தலாம்.

ஆழி நெடுந்தேரும்—வழியில்
அச்சு முறிந்ததுவோ?
ஏழு குதிரைகளும்—ஒன்றாய்
இடறி வீழ்ந்தனவோ?

என்பது முதலியவற்றைக் குறிக்கலாம். பிறிதொரு வகை இலக்கியச் சுவை முன்புள்ள இலக்கியச் செய்யுட்களின் பொருளமைதியையும் ரீதியையும் பின் பற்றுதலாகும். உதாரணமாக, 'திருநாமம் பாடி வாழ்த்துவோம்' என்பது முதலியவற்றைக் கூறலாம்.

இவையேயன்றி இலக்கிய கர்த்தர்கள் முதலியோரைப் பற்றிப் பாடி அவர்களது இலக்கியங்களின் சுவையையும் ஊட்டுகிறார். ஆதிப் பொதுமறை என்ற கீர்த்தனத்தை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

இவையெல்லாம் இலக்கியச் சுவையென்று பொதுப்படக் கூறுதல் அமையுமேனும், இலக்கியச் சுவை என நான் இங்கே கருதுவது இவற்றையல்ல. பண்டையோர் இலக்கியங்களைப் போலவே, சொல் நயமும், பொருள் நயமும், பிற அழகுகளும்

பொருந்திப் பிழைகள் யாதும் இன்றித் தெளிவு உடையனவாய், மனத்தைக் கவரும் இயல் புடையனவாய், உணர்ச்சியை எழுப்பவல்லன வாய், இன்பத்தை விளைக்கவல்லனவாய் தே. வி. யின் கீர்த்தனங்களும் அமைந்திருக்கின்றன. இவற் றில் இழிசன வழக்குக்களும் அவையல் வழக்குக் களும் காணப்படவில்லை. இலக்கணப் பிழை சிறி தும் இல்லாதது. பண்டையோர் கீர்த்தனங்களில் இவ்வாறு அமைந்தவை மிகச் சிலவேயாம். பதங் களுள் பலவகைக் குறைபாடுகளும் உள்ளன என் பதை அவற்றைக் கற்றுணர்ந்தோர் அறிவர். சிற் றின்ப உணர்ச்சி மிகுந்து, பிழை மலிந்து, இலக் கியச் சுவை அருகியுள்ளனவாய் அவை பெரும் பாலும் காணப்படுகின்றன.

இலக்கியச் சுவையோடு இசையினிமையையும் கீர்த்தனங்களில் எதிர்பார்க்கலாம். கவிமணி அவர் கள் இவ் இசை யினிமையை நன்கு உணர்ந்தவர் களே. இவ் இசையினிமையை உணர்தலும் நுகர் தலும் கவிஞனுக்கு இன்றியமையாதன. இவை யில்லாமற்போனல் கவிதை சுவையுறுதல் இல்லை; அதில் இனிமை காணப்படுதல் இல்லை. அரசகேசரி இயற்றிய 'இரகுவமிசத்திலும்' நிரம்ப வழகிய தேசிகர் இயற்றிய 'சேது புராணத்திலும்' இசை யினிமை உளதோவென நோக்கி வேறு பாடறி யலாம்.

ஆனல், இசை யினிமையை உணர்தல் வேறு. இசை இலக்கண நுட்பங்கள் முதலியவற்றை

அறிதல் வேறு. இசை யிலக்கணத்தில் இராகம், தாளம் முதலியவற்றின் ஞானம் இன்றியமையாது வேண்டப்படும். கவிஞனிடத்தில் இதனை எதிர் பார்த்தல் தக்கதன்று.

இசை யிலக்கண முணர்ந்தோரே கீர்த்தனம் இயற்றவேண்டும் என்ற கொள்கையும் பொருத்த மற்றது. பரம்பரை வழக்கும் அதுவன்று. பரிபாடலை எடுத்துக்கொண்டால் செய்யுள் இயற்றியவர் வேறு. பண் முதலியன ஊட்டியவர் வேறு. தேவாரத்தை எடுத்துக்கொண்டால் அதுவும் அப்படியே. ஞான சம்பந்தர், அப்பர் முதலிய அடியார்களது திருப் பாடல்களுக்கு ஆதியில் அமைந்த பண்முறை இப்போது இல்லை. அப் பண்முறை பிற் காலத்தில் மறைந்து விட்டமையால், புதிதாகப் பண் அமைத்தனர் என்று திருமுறை கண்ட புரா ணம் கூறுகிறது. பாவத்திற்குத் தக்கபடி இராக-தாளங்களை அமைத்தல் ஒரு தனிப்பட்ட திறமை. அத் திறமை கீர்த்தனங்களை இயற்றுபவர்களுக்கு வேண்டுவதன்று. அவ்வகைத் திறமை படைத்தவர் பலரும் இலக்கியச் சுவையின்றிப் பாடுவார்கள். பாவம் என்பதனை ஒரு பொருளாகவே அவர்கள் மதிக்க மாட்டார்கள். ஓசை யினிமை மட்டும்தான் அவர்கள் சிறப்பாகக் கருதுவார்கள். இவ்வகைச் சங்கீத நிபுணர்களுக்கு உதாரணமாகப் பட்டணம் சுப்பிரமணிய ஐயரைக் கூறலாம். இன்றும் அவரது கீர்த்தனங்களைப் படிப்பது பாவத்தின் பொருட் டல்ல; இலக்கியச் சுவையின் பொருட்டுமல்ல; ராக லக்ஷணங்களின் அமைதியை அறியும் பொருட்டே

யாம். இவர் இயற்றிய கீர்த்தனங்களை மிகச் சிறப்புடையனவாகச் சங்கீத வித்வான்கள் மாத்திரமே கருதுவார்கள்.

இங்குக் கூறியவற்றை நோக்கினால் இசை வகுத்தவர் கீர்த்தனங்களை இயற்றியவரின் வேறுயிருத்தல் சிறிதும் தவறில்லை என்பது விளங்கும்.

இசைப் பாடல்களைப் பற்றிக் கூறுமிடத்து, அவற்றின் 'இசை யினிமை மக்களின் தினசரி வாழ்வில் நேரும் மலினங்களை யெல்லாம் போக்க வல்லது' என்று மேல் நாட்டு ஆசிரியர் ஒருவர் கூறுகின்றார். இதன் உண்மை தே. வி. யின் கீர்த்தனங்களைக் கற்றுணர்வார்க்கு எளிதிற் புலப்படும்.

* தமிழிசை

வெந்தழல் நீராகும் வெள்ளெலும்பு பெண்ணுகும்
வந்தமத வேழம் வணங்கிடுமே—சந்தமெழப்
பாடுவா ருள்ளுருகிப் பாடும் தமிழிசைக்கு
நீடுலகி லுண்டோ நிகர்?

தமிழ் வகை மூன்றனுள் இசையை நடுவில் வைத்துச் சொல்லக் காரணம், அது முதலில் நிற்கும் இயலுக்கும் இறுதியில் நிற்கும் நாடகத்துக்கும் இன்றியமையாத சிறப்புடையது என்பதைக் காட்டுவதற்காக என்பர். தமிழ் முழுமையிலும் இசை கலந்து நிற்கிறதென்பது இதன் கருத்து. எந்த ஒரு பாடலையும் இசையின்றிப் படித்தால் கேட்க மனம் செல்வதில்லை. பண்ணொடு பாடினுல் அப்படியே ஆனந்தமாகக் கேட்டு நிற்கின்ருேம். கடவுள் திருமுன் நின்று ஒரன்பர் தேவார திருவாசகங்களைப் பண்ணிற் குழைத்துக் கசிந்துருகிப் பாடி நிற்கின்ருரென்ருல் கேட்பவர் அனைவரும் சிந்தை கட்டுண்டு குவித்த கை குவித்தபடியே சித்திரப் பதுமை போல் அசைவற்று நிற்கின்ருர்கள். இதனையும் பார்க்கின்ருேம். அந்தப் பாடலை இன்னொருவர் பண்ணின்றிச் சொல்வாராகுல் அதை அவர்கள் சிறிதும் காதில் வாங்கிக்கொள்ளாது ஒதுங்கிச் செல்வதையும் காண்கின்ருேம்.

இது ஏன்? பாடல்களைப் பண்ணேடு பாடும் போதுதான் அதற்கு உயிர் உண்டாகிறது; பொருள்

விளக்கம் ஏற்படுகிறது; பூரணமாகிறது. ஒருவனது மனக்கருத்து முழுமையும் அலுங்காத குலுங்காத வெறும் வார்த்தைகளைக் கொண்டு வெளிப்படுத்தி விட முடியாது. வெறும் சொற்களுக்கு அந்தச் சக்தி இல்லை. அவற்ருேடு எடுத்தல், படுத்தல், நீட்டல், குறுக்கல் முதலான உச்சரிப்பு வேறுபாடுகள் கலக்க வேண்டும். அதாவது பாவத்தை வெளிப்படுத்தும் இசை கலக்க வேண்டும். இசையும் வார்த்தையும் கலந்தால் தான் இதயம் பூர்ணமாய்த் திறந்ததாகிறது.

ஐயா நீ அருள் செய்ய வேண்டும்—உன்றன்
அடியிணை யன்றிவே றொருதுணை அறியேன்

என்ற அடிகளைப் பண்ணோடு இசைப்பதனுல் உண்டாகின்ற பொருள் வெறும் வாசிப்பினுல் மட்டும் உண்டாகுமா? ஒருநாளு மில்லை.

கீர்த்தனங்களுக்கு மட்டுமல்ல; இயற்றமிழ்ப் பாக்களுக்குக் கூட இசை பெய்து பாடினுல்தான் கருத்துத் தெளிவும் கவர்ச்சியும் ஏற்படும். 'இழுக்குடைய பாட்டிற்கு இசை நன்று' என்பது ஔவை மொழி. இதனுலேயே தமிழர்கள் எந்த ஒரு பாடலையும் பண்ணோடு பாடும் வழக்கத்தைக் கைக்கொண்டிருக்கிருர்கள். இது அவர்களிடம் இன்று நேற்று ஏற்பட்ட வழக்கமல்ல. பாட்டுக்கள் அடியாகத் தொடங்கிய காலத்திலேயே இவ்வழக்கம் ஏற்பட்டிருக்கவேண்டும். வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்பவை இன்னின்ன ஓசைகளைப்

பெறுமென்றும் இன்னின்ன பொருள்களை ஏற்று வருமென்றும் இலக்கணமே அமைத்து விட்டார்கள்.

பண்டைப் பனுவல்களான பரிபாடல், தேவாரம், திருவாய் மொழி முதலியவற்றிற்குப் பண்ணும் தாளமும் அமைத்துப் பாடி வந்த வழக்கம் மிக்க புராதனமானது. சிலப்பதிகாரத்தில் வருகின்ற வரிப்பாட்டும் ஒரு வகை இசைப்பாட்டே யல்லவா? பாடல்களுக்கு இசையமைத்துப் பண்டையோர் பெருகக் கையாண்டு வந்தமை இவற்ருல் அறிந்தோம். ஆகவே, இசையானது ஒருவன் மனக்கருத்தை வெளிப்படுத்துவதற்குத் துணையாக இருக்கும் வார்த்தைகளோடு ஒப்ப இன்றியமையாததென்பதும், அதுகலந்தன்றி இதயம் நன்கு திறக்கப்பட்டதாகா தென்பதும், இதனை நன்கறிந்திருந்த பண்டைப் பெரியோர்கள் இசையமையவே பாக்களை யாத்தார்களென்பதும், பாடல்களை இசையோடு பாடுவதென்பது ஆதி காலம் தொட்டு இன்றுவரை தமிழரிடம் நிலவி வரும் வழக்கமேயாம் என்பதும் நன்கு உணரப் படும்.

இனி, இந்த இசையைப் பாட்டுக்களில் எந்த அளவுக்குக் கலக்கலாம் என்பதைத் தெரிந்து கலப்பதே முறையானது. பிட்டு அல்லது கொழுக்கட்டைகள் இருக்கின்றன. முக்கால் பங்குக்கு மேல் மாச்சத்து உடையவை இவை. இவற்ரேடு சிறிது சீனி கலந்தாலல்லாமல் சுவையிராது; சாப்பிட முடி

யாது. கம்பராமாயணப் பாடல் முதலியவைகளை இசைக்கலப்பில்லாமல் சொன்னால் இனிமை தோன்ருது. இசை கலந்தால்தான் தெளிவும், இனிமையும் ஏற்படும். ஆனால் இசையை அளவுக்கு மிஞ்சி ஏற்றி விடவும் கூடாது. இயற்றமிழ்ப் பாட்டுக்கள் கொழுக்கட்டைக்குச் சமானமானவை.

அல்வா அல்லது லட்டு என்பவைகளோ முக்கால் பங்குக்கு மேல் இனிப்புக் கலந்தவை. அவற்றுக்குப் பின்னும் சீனி தேவையில்லை. கீர்த்தனங்கள் அல்வா போன்றவை. சில பாகவதர்கள் கீர்த்தனை பாடத் தொடங்கி இராக ஆலாபனையும் ஸ்வர வரிசையுமாக வார்த்தைகள் தோறும் நிறைத்துப் பொருளையே உருத்தெரியாமலாக்கி விடுகிருர்கள். கீர்த்தனைகள் இசை வெள்ளத்துக்குள் அழுந்துமாறு முக்கிக் கொல்லப்படுகின்றன. இது முறையல்ல. அல்வா என்ற பெயரைச் சொல்லி வெறும் சர்க்கரைப்பாகை உருட்டித் திரட்டிக் கொடுத்தால் உண்ண முடியுமா? பயன் தருமா?

கீர்த்தனைகளைப் பாடும் பாகவதர்கள் கவனிக்க வேண்டியவை நிறைய உண்டு. முதலாவது, சங்கீதத்தைப் போலவே அவர்கள் சாகித்தியத்தையும் மதிக்க வேண்டும். இரண்டாவது, பாட்டின் பொருளை அவர்கள் நன்கு தெரிந்து அப்பொருள் விளங்குமாறு தெளிவுபட உச்சரிக்க வேண்டும். இசை ஒன்றையே கவனித்து நெடிலைக் குறுக்கியும், குறிலை நீட்டியும் சில எழுத்துக்களை விழுங்கியும் தேய்த்தும் உச்சரித்துப் பொருட்பிழை உண்டாக்கக்

கூடாது. மூன்ருவது, சொற்களைப் பிரிக்கும்போது பொருளற்ற முறையில் பிரிக்காமல் ஏற்றவாறு பிரித்தும் இசைத்தும் பாடவேண்டும். எல்லா வற்றுக்கும் பாவம் நன்கு வெளிப்படுத்தப்படல் வேண்டும். அதாவது பாடல் இயற்றின ஆசிரியனின் பாவம் வெளிப்படுமாறுள்ள இராக தாளங்களை அமைத்து, அந்த உணர்ச்சி வசத்தனுக நின்று கேட்போரும் அதே நிலையடையுமாறு சுவைத்து ரசித்துப் பாடவேண்டும் இதுதான் மிகமிக முக்கியமானது.

இந்த இடத்தில் ஒரு கேள்வி எழலாம். அதாவது சாகித்தியம் செய்வார் ஒருவரும், இராக தாளங்களை அமைத்துப் பாடுபவர் வேருனவர்களுமாக இருந்தால் பாட்டு சோபிக்குமா? சாகித்திய கர்த்தாவின் பாவம் வெளிப்படுமா? என்பது ஆம். இது ஒரு பெரும் பிரச்சினை. சாகித்திய கர்த்தாவும், இராக தாளமமைப்பவரும், பாடுபவரும் ஒருவராகவே இருந்து விட்டால் மிக மேலானது தான்; அதற்குச் சந்தேகமில்லை. இம்மூவகைத் தன்மைகளும் ஒருவரிடமே அமைவது என்பது மிக அருமை. ஸ்ரீ தியாகையர், இசைக் கவியரசு இலட்சுமண பிள்ளை போன்றவர்கள் அநேகர் இல்லை.

இரண்டாவது, சாகித்ய கர்த்தாவே இராக தாளங்களையும் அமைப்பவராயிருப்பது. இவரும் முன்னவருக்கு அடுத்தபடியாகச் சிறப்புடையவர் தான். ஆனுல் இவ்விரு வகையாரையும் தவிர,

இன்னெருவர் இராக தாளங்களமைக்க ஒருவர் சாகித்தியம் செய்பவராயிருத்தல் கூடாதா? அப்படி இருந்ததில்லையா? அதனுல் வரும் நன்மை தீமை என்ன? என்பவை சிந்திக்கத் தக்கவை.

பாடும் கவிஞர் உள்ளம் பக்குவ நிலையை அடையும் போதுதான் பாடல்கள் வெளிப்படுகின்றன. அவர் மனம் முழுமையும் கவர்ந்த உணர்ச்சி அதனை நெகிழச் செய்து செஞ்சொற்களோடும் உருப்பெருத ஒருவகை ஊமை இசையோடும் கலந்துஊறி நிற்கின்றது. அது தக்க நிலையடைந்ததும் மரத்தினின்று கனி பழுத்து விழுகின்ருற்போலப் பாடலாக வெளிக்கிளம்பும். ஆகவே, பாடல்கள் பக்தி, சோகம், அன்பு, காதல், வீரம் முதலான உணர்ச்சி விசேஷங்களினடியாகத் தோன்றிக் குழைவு, கனிவு, இரக்கம், விண்ணப்பம், வெறுப்பு, ஒறுப்பு முதலான பாவங்களோடு வெளிப்படுகின்றன என்றறிகின்ரேம். இந்த பாவங்களைச் சிறிதளவு சங்கிதப் பயிற்சி யுடையவர்களுக்கும் படித்துப் பார்த்த மாத்திரத்திலே உணர்ந்து கொள்வது கடினமல்ல. அந்த பாவம் வெளிப்படுமாறு இராக தாளங்களமைப்பதும், பாடிக்காட்டுவதும் இயலக் கூடியவைகளே. இப்படித்தான் பெரும்பான்மையான பாட்டுக்களும் பாடப்படுகின்றன.

பாட்டுக்கள் இயற்றுவோன் ஒருவனும், இராக தாளங்கள் அமைப்போன் இன்னெருவனும், பாடுவோர் வேறு பலருமாக அமைந்துள்ள வழக்கம் பண்டைக் காலத்திலும் இருந்ததுதான். கடைச்

சங்க நூற்றொகையைச் சேர்ந்த பரிபாடல் என்னும் நூலைப் பார்த்தால் இது தெரியவரும். பாடல் தோறும் இயற்றினார் பெயரும் இசையமைத்தார் பெயரும் வேறு வேறாகக் குறிப்பிடப் பட்டிருக்கின்றன. இன்று நமக்குப் பழங்காலத்திலிருந்த கூத்து இசை என்பவற்றின் இயல்பையும் வரலாற்றையும் ஒருவாறு உணரச் செய்யும் ஒளி விளக்காயிருப்பது சிலப்பதிகார அரங்கேற்றுக் காதையும், அதற்கு அடியார்க்கு நல்லார் எழுதிய உரையும் ஆகும். அக்காதையிலும் ஆடலாசிரியன் அமைதி, இசையாசிரியன் அமைதி, கவிஞன் அமைதி என்றின்ன பல ஆசிரியர்களின் இலக்கணம் கூறிச் செல்கின்றமையைப் பார்த்தால் இசையாசிரியனும் இயற்றமிழாசிரியனும் வேறு வேறாயிருந்தார்கள் எனத் தெளிய உணரலாம்.

அநேக பெரியார்களுடைய கீர்த்தனங்களுக்குப் பழைய மெட்டு, புதியமெட்டு என இருவகை மெட்டுக்கள் ஏற்பட்டிருக்கின்றன. மகாகவி அருணாசலக் கவிராயர் இயற்றிய இராம நாடகத்துக்கு ஆசிரியர் காலத்தில் அமைக்கப்பட்ட இராக தாளங்கள் ஒரு வகையாயிருந்தன. பின்னர், அவற்றை மாற்றி அமைத்துப் பாடினவர்களும் உண்டு. திருவனந்தபுரத்தில் அஞ்சல்புரை இராமையர் என்றொருவர் இருந்தார். அவர் இராம நாடகக் கீர்த்தனையில் பலவற்றுக்கும் வேறுவகை மெட்டு அமைத்துப் பாடிவந்தார். உணர்ச்சி பாவத்தோடு கேட்பதற்கு இனிமையாகவே இருந்தது.

இன்று சுவாதித் திருநாள் கீர்த்தனங்களெல்லாம் அவர் அமைத்த மெட்டுப்படித்தான பாடப்படுகின்றன? இல்லை. சில மாற்றிப் பாடப்படுவதாகவும் அறிகின்ருேம். ஆகவே ஒருவர் பாட்டுக்கு இன்னெருவர் இராகதாளங்கள் அமைத்துப் பாட முடியாதென்பது வெறும் பேச்சு. சிறந்த முறையில் அமைந்த பாடலாயிருந்தால் அது இராக தாளங்கள் அமைக்கப் பெருத வெறும் பாடலாக இருந்தாலும்கூட ஆசிரியனுடைய பாவத்தைப் புலப்படுத்தி விடும். அதனை ஊன்றி உணர்ந்து இராக தாளங்களை அமைக்கவேண்டும் என்பது கூட இல்லை. ஒரு பாவத்தை வெளிப் படுத்துவதற்குப் பல மெட்டுக்கள் இருக்கின்றன. அவற்றுள் ஏற்றதைத் தெரிந்து அமைப்பதே முக்கியம். இதில்தான் பாடகர்களின் கவனம் நன்கு பதிய வேண்டும்.

கீர்த்தனங்கள் அமைப்போர் கவனிக்க வேண்டியவை பல உண்டு. பாட்டு என்பது வெறும் வார்த்தைகளின் தொடுப்பல்ல. நீளம் வீதிகளைக் கணக்காக்கி முழக்கோல் கொண்டு மட்டப்படுத்திக் கற்களை அடுக்கிக் கொண்டு போகிற கொத்தனல்லன் கவிஞன். அவன் நாவினின்று வரும் சொற்கள், அடித்துப் பெயர்த்தெடுத்த கரடுமுரடான கருங்கற்கள் போன்றில்லாமல் உயிர்த் தன்மை யுடையவையாய் இனிமையில் தோய்ந்து பண்பட்டு வருகின்ற செஞ்சொற்களாயிருக்க வேண்டும். அவை அடுத்துவரும் சொற்களின் கூட்டுறவினுல் புத்துயிர் பெற்று இலங்கவேண்டும்.

பாட்டு முழுமையினும் ஓர் உயிர்த்துடிப்பு இருக்க வேண்டும். பாட்டினை இசையோடன்றி வெறு மனே படித்தாலும் இசையோடு பாடினாலும் இன்பம் தரவேண்டும். ஆகவே, அது இலக்கியச் சுவை பெற்றுத்திகழ வேண்டுமென்றுகிறது. இத் தகைய பாட்டுக்கள்தாம் நிலையானவை; பயன் தருபவை. அல்லாதவையெல்லாம் கால வெள்ளத் தால் அடித்துக் கொண்டு போகப்பட்டு இருந்த விடம் தெரியாமலாகி விடும்.

இனி, தமிழிசை முன்னேற்றம் பற்றிக் கவ னிக்க வேண்டிய சில காரியங்களைக் கூற ஆசைப் படுகிறேன். சிலர் சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லார் உரையைப் படித்துவிட்டுத் தமிழில் பெரு நாரை இருந்தது; பெருங்குருகு இருந்தது என்று பேசிப் பெருமை பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். அந்த நாரையும் குருகும் நம்மை விட்டுப் பறந்து போய் வெகு காலமாகிவிட்டன. இனி அவை வரப் போவதில்லை. கரையிலிருந்து அழுதுகொண்டிருந் தால் கடல் கொண்டுபோன நூல்கள் வந்து கரை யேறப்போவதுமில்லை. ஆகவே பழமைபாராட்டி வீண்காலம் போக்குவதல்ல நாம் இப்பொழுது மேற் கொள்ள வேண்டும் காரியம். இழந்தவற்றை ஈடு செய்ய வேண்டும். 'யாழ் நூல்' என்னும் ஒப்பற்ற நூலை அரிதின் முயன்று ஆக்கித்தந்த விபுலானந்த அடிகளைப் போலப் பல புதுப் புது நூல்களை ஆக்க வேண்டும். பழைய நூல்கள் தலைமறைவாகக் கிடக்குமானல் அவற்றைத் துருவி ஆராய்ந்து

வெளிக்குக் கொண்டு வரவேண்டும். இல்லாவிட்டால் மொழி பெயர்ப்புகள் மூலம் தமிழிசைக் கலையை வளப் படுத்தலாம். தமிழிசைச் சங்கம் இத்துறையில் உழைப்பார்க்கு ஆக்கமும் கொடுத்து உதவுமாக!

கீர்த்தனங்கள் புதிது புதிதாக எழுதப்பட வேண்டும். பற்பல துறைகளிலும் கீர்த்தனங்கள் எழுதலாம். முன் சொன்னதுபோல அவை இலக்கிய நயம் செறிந்தவையாய் இருக்கவேண்டும். அருணுசலக் கவிராயர் கீர்த்தனைகளும் முத்துத் தாண்டவர் கீர்த்தனைகளும் இதற்கேற்ற முன்மாதிரிகள் ஆகும். தற்காலத்தில் ஸ்ரீலஸ்ரீ யோகி சுத்தானந்த பாரதியார் இவ்விஷயத்தில் செய்துவரும் தொண்டு போற்றற் குரியதாம்.

தமிழிசைக்கெனத் தனிப் பத்திரிகை வேண்டும். அது புதுப் புது வெளியீடுகளையும், புதிய கீர்த்தனங்களையும், சாகித்தியகர்த்தாக்கள் சங்கித வித்வான்கள் என்போரின் வரலாறுகளையும் தாங்கி வரலாம். அதோடு பாடகர்கள் பாட்டுக்களைக் கொலை பண்ணுமலிருப்பதற்கான வழிவகைகளை எடுத்துக் காட்டி அறிவுறுத்திக்கொண்டு மிருக்கலாம். இத்தொண்டு இசை முன்னேற்றத்துக்கு ஓர் இன்றியமையாத தொண்டு ஆகும்.

சமீபத்தில் கர்நாடக சங்கீதக் கலாசாலை ஒன்று சென்னையில் நிறுவப் போவதாக அறிந்தேன். அது மிகவும் பாராட்டத் தகுந்த ஒரு நல்ல காரியமாகும். அதனால் தமிழிசை பல வழிகளிலும் வளர்ந்து வருமென்று நம்புகிறேன்.

தமிழ் வாழ்க! தமிழிசை வாழ்க! தமிழர் வாழ்க!

5. காதல் பிறந்த கதை

எனது அருமை நண்பர் கவிமணி ஸ்ரீ தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் இயற்றிய பாக்களிற் சில இந்நூலில் வெளிவருகின்றன. இவைகள் கலைமகள் முதலிய பத்திரிகைகளுக்குச் சமீப காலத்தில் உதவப்பட்டன. இவைகளைத் திரட்டி, ஒரு கவிதை நூலாக வெளியிட முன்வந்த அருள்—நிலையத்தார்க்குத் தமிழுலகம் கடமைப்பட்டுள்ளது.

கவிதையின் இயல்பை வரையறை செய்வதற்குச் சில நூற்றுண்டுகளாக நூற்றுக்கணக்கான இலக்கிய ஆராய்ச்சியாளர்கள் முயன்று வந்திருக்கிறார்கள். ஆனால், ஒருவரது முயற்சியேனும் இதுவரையில் முற்றும் திருப்திகரமாய் முடிந்துள்ளது என்று சொல்வதற்கில்லை. சிவபெருமான் தன்மையைத்தான் கவிதையும் கொண்டிருக்கிறது. அவரது அடியையும் முடியையும் மாலும் அயனுங் காண முடியவில்லையல்லவா? அதுபோலவே கவிதையின் இயல்பையும் ஆராய்ச்சியாளர் கண்டு பிடிக்க முடியவில்லை.

ஆனால், இம்முயற்சிகளெல்லாம் பயன் அற்றனவா? இல்லை; இல்லவேயில்லை.

கவிதையின் இயல்புகள் மிகப்பல. அவைகளும் காலந்தோறும் இடந்தோறும் சூழ்நிலைகளுக்குத் தக்கபடி வேறுபடுகின்றன. ஒருசில

அம்சங்களையே ஒவ்வோர் ஆராய்ச்சியாளரும் அறிய முயல்வது. எனினும், தாம் கூறுவதே எல்லாவகையாலும் முற்றமுடிந்த உண்மையெனத் தாமும் நம்பி வாசகர்களையும் மயங்கச் செய்து விடுகிறார்கள். இக்குறையினால் இன்னோரது நூல்கள் பயனற்றுப் போகவில்லை. நூற் பொருள்களின் முக்கியத்துவம் நன்றாக நம் மனத்தில் ஆழ்ந்து பதிந்துவிடுவதற்கு இவ்வகை நூல்கள் உதவுகின்றன. அன்றியும் இந்நூல்களை நாம் கற்குந்தோறும் நமது அறிவு விலாசம் அடைகிறது. கவிதை அனுபவம் மென்மேலும் முதிர்வதற்கு இடமேற்படுகிறது. ஆகவே இவ் ஆராய்ச்சியுரைகள் பயனுடையனவேயாம்.

ஆனால், ஆராய்ச்சியாளர்களெல்லாரும் உண்மைக் கவிதைபற்றிய ஒரு விஷயத்தில் ஒற்றுமை மனம் உடையரா யிருக்கிறார்கள்; உண்மையான கவிதையைப் படித்த அளவிலே நம் மனத்திலே விவரிக்க முடியாத ஓர் இன்பம் உண்டாகி விடுகிறது என்கிறார்கள். இந்நூலில் முதலாவதாய் அமைந்துள்ள 'காதல் பிறந்த கதை' இத் தகுதி வாய்ந்த உண்மைக் கவிதையாகும். இதை நின்று புகழ்ந்துவிட்டுப் பின் இதைக் கற்று நுகர்வோம் என்று நாம் எண்ண முடியாது. கவிபாரதி,

நாட்டினிற் பெண்களுக்கு நாயகர் சொல்லும்—சுவை
நைந்த பழங்கதைகள் நானுரைப்பதோ?
பாட்டுஞ் சுதியு மொன்று கலந்திடுங்கால்—நம்முள்
பன்னியுபசரணை பண்ணுவதுண்டோ?

நீட்டுங் கதிர்களொடு நிலவுவந்தே—விண்ணை
நின்று புகழ்ந்து விட்டுப் பின்மருவுமோ ?
மூட்டும் விறகினைச் சோதி கவ்வுங்கால்—அவை
முன்றுபசாரவகை மொழிந்திடுமோ ?

என்று பாடுகின்றார். இதுபோலத்தான் நாமும் உண்மைக் கவிதையனுபவத்தில் விரைந்து மூழ்கித் திளைக்கின்றோம்.

இதுபோன்ற கவிதையை ஒருமுறை நுகர்ந்து இன்புற்றதோடு நமது மனம் முற்றும் திருப்தி யடைந்து விடுவதில்லை. மீண்டும் மீண்டும் அதனை நுகர வேண்டும் என்னும் அவா நம் மனத்தில் வேரூன்றி விடுகிறது. நுகர நுகரத் தெவிட்டுவ தில்லை. என்றும் மாருத இளமைத் தன்மையோடு நின்று நம் மனத்தைக் கவர்கின்றது. இவ் இயல் பினையும் கவிஞரும் ஆராய்ச்சியாளருமாகிய ஓர் மேல் நாட்டு ஆசிரியர் வற்புறுத்தியிருக்கிறார். தே. வி.யின் கவிதைகளிற் பல இவ் இயல்புடை யன என்பது தமிழ்மக்கள் நன்கு அறிந்ததே.

இவ் வகைக் கவிதைகள் தோன்றும் முறை யைக் குறித்தும் ஆராய்ச்சியாளர்கள் ஒரு முக மாய்ப் பேசுகிறார்கள். உண்மையுள்ளத்தின் அடி நிலத்திலிருந்துதான் உண்மைக் கவிதைகள் தோன் றும். எவ்வாறு உண்மை யுள்ளத்தை அறிவது? பாரதியின் கவிதை யொன்று ஞாபகத்தில் தோன்று கிறது.

சித்தந் தளர்ந்ததுண்டோ ?—கலைத்
தேவியின் மீது விருப்பம் வளர்ந்தொரு
பித்துப் பிடித்ததுபோல்—பகற்
பேச்சும் இரவிற் கனவும் அவளிடை
வைத்த நினைவை யல்லால் —பிற
வாஞ்சை யுண்டோ ?வயதங் ஙனமேஇரு
பத்திரண் டாமளவும்—வெள்ளை
பண்மகள் காதலைப் பற்றி நின்றேன், அம்மா.

என்ற கவிதையை அறியாதவர்கள் இருக்கமாட்டார்கள். இக் கவிதையிற் கூறியுள்ளது தே. வி. அவர்களைப் பற்றிய அளவில் முற்றும் உண்மை, உண்மை. ஆனால், இருபத்திரண்டு வயதளவு மட்டுமல்ல; இன்றுவரை அப்படித்தான். ஸ்ரீ தே. வி. அவர்கள் நீடூழி வாழ்ந்து கவிதா உபசரணையில் உயிர் தளிர்த்து நின்று தமிழன்னைக்குத் தொண்டு புரியுமாறு இறைவன் அருள் புரிக.

உண்மைக் கவிதை இன்பத்தைத் தமிழ் மக்களுக்கு ஊட்டி இச்சிறு வெளியீடு நீடுநிலவும் என்று உறுதியாய் நம்புகிறேன்.

6. கவிமணியின் உரைமணிகள்

மானஸிக உலகு முத்திறப்பட்ட கண்டங்களாக அமைந்துள்ளது. ஒன்று அறிவுலகு. பிறிதொன்று உணர்ச்சி, பாவனை என்ற இரண்டினாலும் இயன்ற உலகு. மூன்ருவது ஆன்ம உலகு. கவிமணி அவர்களது கீர்த்தனங்கள் மூன்ருவதாகக் கூறிய ஆன்ம வுலகினின்று பிறந்தவை. அவர்களது 'மலரும் மாலையும்' என்ற கவிதைத் தொகுதி பாவனையோடு கூடிய உணர்ச்சி யுலகிற்பூத்து மலர்ந்தது. அவர்களது உரைமணிகள் அறிவுலகாகிய சுரங்கத்தில் தோன்றி யொளிர்ந்தவை. இவைகள் முறையே கற்போரது ஆன்ம அனுபவத்திற்கும், கவித்துவ அனுபவத்திற்கும், அறிவு நுகர்சிக்கும் உரியன. மேற்கூறிய மூன்றுலகும் மனத்தில் ஒன்ருேடொன்று கலந்து கிடப்பதுபோல் இந்த மூன்று நூல்-தொகுதிப் பொருள்களும் கவிமணியிடத்தே கலந்து கிடந்தனவேயாம். மூன்று உலகையும் மனத்தத்துவ விளக்கத்தின் பொருட்டு நாம் பிரித்து உணர்வதுபோல் இம்மூன்று நூல்-தொகுதிகளும் பிரித்து அமைக்கப்பட்டன. ஆனுல், ஆன்ம நுகர்ச்சிக்குரிய கீர்த்தனங்கள் மற்றை இரண்டு நூல்-தொகுதிப் பொருள்களுக்கும் பிற்பட்டுத் தோன்றியவை. கவிமணியின் வாழ்க்கையிலும் அவை பிற்பட்டுத் தோன்றியவையே யாகும்.

எளிய வாழ்க்கைக்கு நிதர்சனமாக விளங்குபவர் கவிமணி. ஒப்பு யாருமின்றித் தாம் மேம்பட்டு

நிற்கும் துறையிலும் கூட, சிறிதும் அவர் செருக்குக் கொள்வதில்லை.

> எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
> செல்வர்க்கே செல்வந் தகைத்து

என்று வள்ளுவர் கூறியது இவருக்கு மிகவும் பொருத்தமாவதேயாம். ஆடம்பரப் பிரியரல்லாமை யால் இவர் பிரசங்கங்கள், மேடைப் பேச்சுக்கள் முதலியவற்றிற்குச் செல்வது வழக்கமில்லை. எனி னும் அன்பர்களது வேண்டுகோளை மறுக்கும் மனத் திட்பம் இவருக்கு இல்லை. சிலர் இதனை ஒரு குறை யென்பர். இந்தக் குறையினுல் கூட இவரது திறமை களுள் ஒன்று நமக்குப் புலப்படுகிறது. அது தான் இவரது பேச்சுத் திறமை.

பேச்சுத் திறமை யென்ருல் சரமாரியாக வாக்கி யங்களைப் பொழிந்து தள்ளுவதல்ல. கேட்போரது அறிவிற்படாதவாறு கருகிய சொற்களையும் பொருள் களையும் அடுக்கிக் கூறுவதுமல்ல. படாடோபமான சொல்லடுக்குக்களை எதுகைமோனைகளில் அமைத்து முழக்கித் தள்ளுவதுமல்ல. இனிய, எளிய சொற் களால் கேட்போர் உளங்கொள்ளுமாறு, நேர்பட முறைப்பட, விளக்கிச் சொல்வதே பேச்சு என்று சொல்வதற்குரிய தகுதி வாய்ந்தது. கவிமணியின் மேடைப் பேச்சுக்களில் இந்த இயல்பை நன்கு காணலாம்.

இரண்டாம் பகுதியிலுள்ள கட்டுரைகளில் கவிமணியின் இதயத்தை முதலாவது கவர்ந்துள்ளது வள்ளுவரது புகழ்.

"இவர் இறவாத புகழுடையவர். எக்காலத்தினரும், எந்நாட்டினரும், எம்மதத்தினரும் இவர் நூலைக் கற்று அனுபவிக்கலாம்; இவரது உபதேசங்களைக் கைக்கொள்ளலாம். இவர் கூறும் விஷயங்கள் அனைத்தும் எச்சமயத்தவரும் ஏற்றுக்கொள்ளும் தரத்தனவே. எனினும், இவர் சமணரே யாவர். உலகியலோடு பொருந்தத் தம் அனுபவம் காரணமாக நுணுகி உணர்ந்து கூறும் உண்மைகள் இவரது நூலிற் பல. இவர் சாணக்கியரது அர்த்த சாஸ்திரத்தைக் கற்று அதிலுள்ள பொருள்களைக் கூறியுள்ளார் என்பது உண்மையே. எனினும், அது குற்றமும் அன்று; இழிவும் அன்று. சிற்பி தனது வேலைப்பாட்டுக்குகந்த கல் எந்த மலையில் இருப்பினும் தேடிச் சென்று எடுக்கச் சலிக்க மாட்டான். அவனது குறிக்கோள் சிற்பச் சிறப்பு ஒன்றே; இத்தகைய சிற்பியே திருவள்ளுவர்.

இவரது பெருமை பற்றி இவரைத் தெய்வப் புலவரெனப் பலரும் கொண்டுள்ளனர். இவரது உபதேசங்கள் கன்ப்யூஸியஸ், இயேசுநாதர் முதலியோரது அமுத மொழிகளை ஒத்துள்ளன.

இவ்வாறு அமைந்த பெரிய நூலுக்கு வள்ளுவரது திருவுள்ளம் இதுவென ஆராய்ந்து உரை காணுதலே தக்கது. சிலர் தத்தம் கொள்கைகளுக்கு ஏற்கக்

குறட் கருத்துக்களைத் திரித்துக்கொள்கின்றனர். சொற்களையும் தொடர்களையும் கூடத் திரித்து விடுகின்றனர். இது பெரியதொரு தவறும். சொல் கருவியாகப் பொருளையும் அதன் துணையாக ஆசிரியரது உள்ளத்தையும் அறியும் அறிவே சிறந்தது. பாடல் என்பது ஆசிரியர் தந்த கண்ணாடிதான். அக்கருவியைப் பயன்படுத்தத் தெரியாமல் அதனையே உற்று நோக்கிக் கொண்டிருத்தல் ஆகாது''.

இங்ஙனம் அருமையாகக் கூறி வள்ளுவரது பெருமையைக் கவிமணி இனிதின் விளக்குகின்றார்.

அறிவியல் துறையில் தலைவராக விளங்கும் வள்ளுவருக்குப் பிற்பட்டு, பக்தி நெறி முதல்வரான மாணிக்கவாசகர் நமது கவிமணியின் உள்ளத்தைக் கவர்ந்துள்ளார். இவரது திருவாசகத்தைக் குறித்து,

வான்கலந்த மாணிக்க
　　வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால்
　　நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து
　　செழுங்கனித்தீஞ் சுவைகலந்து
ஊன்கலந்து உயிர்கலந்து
　　உவட்டாமல் இனிப்பதுவே

என இராமலிங்க சுவாமிகள் பாடியுள்ளமை யாவரும் அறிவர். திருவாசகத்தின் பெருமையில் ஐயங்கொண்டார் யாரும் இல்லை. அது தோன்றிய காலத்தைப்பற்றி மட்டும்தான் இப்பொழுதும் ஐயம்

தவிர்ந்த பாடில்லை. இதனைக் குறித்து ஆராய்ந்து கி. பி. 9–ம் நூற்றுண்டின் இறுதியில் மாணிக்க வாசக சுவாமிகள் வாழ்ந்து இவ் அரும்பெறல் நூலை இயற்றினர் என்றும், இவர் மூவர் முதலிகளுக்கும் பிற்பட்டவர் என்றும் கவிமணி முடிவு கூறுகின்றுர். இம் முடிவு பலர்க்கும் அங்கீகாரமாயுள்ளதே.

அறிவியல் நூலும் பக்தி நூலும் இவ்வாருக, உணர்ச்சியும் பாவனையும் ததும்புகின்ற தமிழ்ப் பேரிலக்கியம் ஒன்றினைப் பற்றிக் கவிமணி சிந்திக் கின்றுர். அதன்மீதுள்ள ஆதராதிசயத்தால், அதனை எரித்துவிட வேண்டும் என்ற முயற்சியைக் குறித்து அவரது உள்ளத்தில் கோபக்கனல் பொங்கி எழு கின்றது.

ஓலை எரியும், தாள் எரியும்,
உள்ளத்தெழுதி வைத்துநிதம்
காலை மாலை ஓதுகவி
கனலில் வெந்து கரிந்திடுமோ?

என்று கூறுகிருர். கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பனது கலைக்கோயிலான இராமாயணத்தைக் கற்று இலக்கியச் சுவையை நுகர்வது தமிழ் மக்கள் ஒவ்வொருவருக்கும் கடமையாகும் என்பதை இவர் வற்புறுத்துகின்றுர். இவ் அரிய இலக்கியத்திற்குப் பிழையற்ற பதிப்பு வெளியிடுதல் அவசியம் என்றும் கவிமணி கருதுகின்றுர்.

இயல்–தமிழின்பின், இசையைக் குறித்துச் சில கருத்துக்களை ஆசிரியர் வெளியிட்டுள்ளனர்.

'பாடல்களைப் பண்ணோடு பாடும்போதுதான் அதற்கு உயிர் உண்டாகிறது; பொருள் விளக்கம் ஏற்படுகின்றது; பூரணமாகிறது' என்று கூறுகின்றனர். வெறும் வார்த்தைகளால் மனக்கருத்து முழுமையும் வெளிப்படுத்த முடியாது. இசையமையப் பாடுதல் நமது நாட்டில் பண்டைக் காலம் தொட்டு வழங்கி வந்த ஒரு வழக்கேயாகும். ஆனால், இயலோடு கலவாத இசை அத்துணை இனிமையாகமாட்டாது என்றும் கருதுகின்றனர். கீர்த்தனங்களைப் பாடும் பாகவதர்கள் கைக்கொள்ள வேண்டும் சில நியதிகளும் இங்கே கூறப்படுகின்றன. பாட்டுக்கள் இயற்றுபவன் ஒருவனும் 'இராகதாளங்கள்' அமைப்பவன் பிறனொருவனுமாக இருத்தல் சிறிதும் தவறன்று என்பதும் நன்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. தமிழிசை முன்னேற்றம் பற்றி நாம் செய்யவேண்டும் காரியங்களையும் இவர் விளக்குகிறார். இசையை அடுத்து நாடகத்தைப் பற்றிய சிற்சில அரிய கருத்துக்களையும் ஆசிரியர் தெளிவுறுத்துகிறார்.

"மக்களின் அறிவை அபிவிருத்தி செய்வதற்கு நாடகத்தைப்போன்று ஒரு சிறந்த கருவி வேறெதுவும் இல்லை. அதனாலேயே காலஞ்சென்ற சரோஜினி தேவியார் நாடகத்தைப் 'பாமரமக்களின் பல்கலைக் கழகம்' என்று கூறியிருக்கிறார்கள். நமது கலாசாலைகள் தோறும் நாடக அரங்கு அமைக்கப்பட வேண்டும். தமிழ்மொழியில் நல்ல நாடகங்கள் இயற்றப்பட வேண்டும்."

என்று வற்புறுத்தி, நடிக்கும் கலையில் தக்கவர்கள் பயிற்சி பெற்று மேம்பட்டு வரவேண்டுமென்று கூறி ஆசிரியர் இக்கட்டுரையை முடிக்கின்றனர்.

பின்னர், இலக்கியத்துறையில் புகழ்பெற்று விளங்கிய வெள்ளகால் சுப்பிரமணிய முதலியாரை "எண்பதாண்டான இளைஞர்" என்று வாழ்த்துகின்றார். தேசீயத்துறையில் உழைத்து இப்போது மறைந்துவிட்ட வ. உ. சிதம்பரம் பிள்ளையின் புகழ் நீடுழி நிற்கவேண்டும் என்று ஆவல்கொண்டு, அந்தத் தியாக மூர்த்தியின் வாழ்க்கை வரலாற்றைப் பல மொழிகளிலும் வெளியிட வேண்டும் என்று மனங்கனிந்து மொழிகின்றனர்.

வ. உ. சி. முதலியோரது பெருஞ்செயல்களால் தேசீயத்துறையில் முயன்று வெற்றி பெற்று விட்ட நாம் அத்துடன் அமைந்து மகிழ்ந்திருக்கின்றோம். சுதந்திரம் அடைந்ததோடு நாம் சோம்பியிருத்தலாகாது. நமக்கு இப்போது பொறுப்பு மிகுதியாயுள்ளது. ஊக்கமும் உழைப்பும் இப்பொழுதுதான் மிகுதியாய் வேண்டப்படுவது.

கவிமணியின் இவ் உபதேசம் நமக்கு லட்சியமாகுக.

இந்த யுகத்திலே பிறந்த புண்ணிய புருஷராகிய காந்திஜியைக் குறித்தது அடுத்த கட்டுரை. இப்புண்ணிய மூர்த்தியைக் குறித்து,

"அவர் பேரறிஞர்; தீர்க்கதரிசி; சீர்திருத்தவாதி, உலக நன்மையை நாடும் உத்தமர். அஹிம்ஸையும்

சத்தியமும் அவருக்கு இருகண்கள். அன்பே அவருக்கு உயிர். மக்களை அடிமைத் தளையினின் றும் அகற்றி நல்வாழ்வு வாழச் செய்வதே அவர் குறிக்கோள்.''

என விவரிக்கின்றனர். அவர் நம்மைவிட்டுப் பிரிந்து போய்விட்ட போதிலும், அவர் போதித்து வந்த போதனைகள் நம் காதுகளில் எப்போதும் ஒலித்துக் கொண்டேயிருக்கவேண்டும்.

''எந்தத் தத்துவங்கள் நம் நாட்டை அடிமை வாழ்விலிருந்து அமர வாழ்விற்கு உயர்த்துகின் றனவோ அவைகளை நாம் உயிர்த் தத்துவங்கள் என்று கருதவேண்டும். அவற்றின்படி என்றும் நடக்க வேண்டும். பிறருக்கும் போதித்து நல்வழிப் படுத்த வேண்டும். இதுவே காந்தி யண்ணலுக்கு நாம் புரியும் கைம்மாறு; வழிபாடு.''

என்று ஓர் அரிய உபதேசத்தையும் கவிமணி தருகின்றார்.

இலக்கிய நெறியில் ஆசிரியர் கையாண்டுள்ள லட்சியங்கள் ''எனது லட்சியம்'' என்ற கட்டுரை யில் தரப்படுகின்றன. உண்மைக் கவியின் இயல்பு, புதிய இலக்கிய வளர்ச்சிபற்றிய கருத்துக்கள், அவ் இலக்கிய வளர்ச்சி மேம்படுதற்குக் கைக்கொள்ள வேண்டும் உபாயங்கள், சொல்லாக்கம், விமரிசனம் முதலியனபற்றி இவர் கொண்டுள்ள கருத்துக்கள்: இவையெல்லாம் சுருங்க இங்கே உணர்த்தப்படு கின்றன. தமிழோடு மிக இணைந்திருப்பதால் தென்

னிந்தியச் சரித்திரமும் தென்னிந்தியக் கல்வெட்டுக்களும் ஆராயப்படத் தக்கன என்பதும் இங்கே சுட்டப்படுகிறது.

தமது வாழ்விற் செய்த பெரு முயற்சிகளுள் ஒன்ருன சாசன ஆராய்ச்சி பற்றியது இந்நூலின் மூன்றும் பகுதியின் முதல் கட்டுரை. முதலில் சாசன ஆராய்ச்சி செய்வோரது தகுதியும் மனநிலையும் இவ்வாறு இருக்க வேண்டும் என்று வரையறுக்கின்றனர். 'திருவடி சார்த்த' என்பதன் பொருள் ஆதார பூர்வமாய் நன்கு விளக்கப்படுகிறது. தெலுங்கு நாட்டுச் சாசனத்தால் 13-ம் நூற்ருண்டில் மலபாரில் தமிழர்கள் குடியிருந்தார்கள் என்பதும் அவர்களில் சிலர் விசாகப்பட்டணம் வரையிலும் சென்று தங்கினுர்கள் என்பதும் புலப்படுகின்றன. இப்போது 'கொயிலோன்' என்று கூறப்படும் நகரம் முற்காலத்தில் 'குரக்கேணிக் கொல்லம்' என்று வழங்கியது சாசனத்தால் தெளிவாகிறது. 'புலேப்பேடி' என்ற சாசனம் சமுதாய வழக்கமொன்றினைத் தெரிவிக்கிறது. ஆண்டின் இறுதி மாதமான கர்க்கடக மாதத்தில் அஸ்தமனத்திற்குப் பின் வெளிப்பட்டுலவும் பெண்களைப் புலேயர்கள் தமது உரிமையாக்கிக் கொள்ளலாம். அப்பெண்கள் மேல் ஒரு சிறு கல்லே எடுத்து அவன் தீண்டிஞலும் போதும்; அவன் பின்னல் அவள் சென்றுவிட வேண்டியதுதான். இவ் வழக்கத்திற்குச் சில விதிவிலக்குகளும் இருந்தன. இவ்வாறே மண்ணுர் (வண்ணுர்)களுக்கும் இவ்வாருன உரிமை இருந்தது.

இதனை மண்ணார்பேடி என்று அழைத்தனர். இக் கொடிய வழக்கம் இன்ன காலம் முதல் நின்று போகக் கடவது என்று ஆணை பிறப்பித்துத் திரு விதாங்கோட்டு அரசரொருவர் அதனை ஒழித்தனர். இவ் ஆணையை யாரேனும் மீறிப் பூர்வ வழக்கத் தைக் கைக்கொள்வதாயிருந்தால், அவர்களை மட்டு மல்ல, அவர்களது பெண்டுபிள்ளைகளையும்—வயிற் றுப்பிள்ளை முதலாகத் தோண்டி யெடுத்து—வெட்டி வீழ்த்த வேண்டும் என்றும், தீண்டப்பட்ட பெண் குளித்துக் கரையேறித் தீட்டைப் போக்கிக் கொள்ளலாம் என்றும் சட்டம் இயற்றப்பட்டது. இவ்வழக்குக்கள் சேரநாட்டில் மட்டுமின்றி, தமிழ் நாட்டிலும் பல இடங்களில், பூர்வ காலத்தே இருந்ததென்று நாம் ஊகிக்கலாம். இராப்பாடி என்று வருபவர்கள் இச்சாசனம் கூறும் மண்ணார் களாக இருத்தல் வேண்டும். இச்சாசனத்தில் 'இப்படிக்குத் திருவயித்தும் நாட்டி' என்று வரு கிறது. இதனை, அயித்து—அயித்தம்—தீண்டாமை என்னும் பொருள் பயக்கும் சொல்லாயிருக்க வேண்டும் என்று கவிமணி கூறுகிறார். ஆனால் தீண்டாமையைத் திருத்தீண்டாமை என்று சிறப் பித்தல் பொருத்தமின்று. திருவயித்தும் என்பது 'திருவெழுத்தும்' என்பதன் திரிபாக இருத்தல் கூடும்.

சாசனங்களில் வரும் தொடர்களுக்கு அதனைப் பதிப்பித்தவர்கள் செய்துள்ள விநோத வியாக்கியா னங்களுள் ஒரு சிலவும் தரப்பட்டுள்ளன. 'ஐம்

படைப் பருவத்து' என்பது, 'மன்மதன் காதல் எழுப்புகின்ற பருவம்' என்று ஒருவரால் கொள்ளப் படுகின்றது. ஆனல் திருமாலின் படைக்கலங் களாகிய ஐம்படைகள் அமையச் செய்யப்பட்ட தாலியை அணியும் பருவம் என்பதே பொருள். பக்ஷிராஜன் என்று பொருள் படும் 'பறவைக்கரசு' என்ற தொடரைப் 'பறவைக் காசு' என வாசித்து அதன் நிறை முதலியவற்றை ஆராய்ந்தாரும் உளர். ஆடி மாதத்துச் சுவாதி நட்சத்திரம் என்று பொருள்படும் 'திருவாடிச் சோதிக்கு' என்ற தொடரை, 'திருவடிச் சோதிக்கு' என்று வாசித்துப் பொருள் கொண்டாரும் உளர். இப்பொழுது கோட்டைக்கரை என வழங்கிவருவது ஒரு சாசனத் தில் 'கரைக் கோட்டை' எனக் குறிக்கப்படு கின்றது. இப்பெயரை ஆங்கிலத்தில் எழுதிக் காரைக்குடி என வாசித்துக்கொண்டு, அந்நகரம் வரை வேணாட்டரசனுடைய போர் வீரர்கள் பாண் டியர் சேனையைத் துரத்தி யோட்டினார்கள் என்று சேரர் படைப்பெருமையை ஓர் ஆசிரியர் விளக்கி னர்.இதில் அவரது தேசாபிமானம் ஒன்றுதான் புலப் படுகிறது. 'திருபுவனதேவி சாசனம்' என்ற கட் டுரை கவிமணி கல்வெட்டுக்களைக் கண்டுபிடித்த வரலாற்றுக்கு ஒரு தக்க உதாரணமாக நாம் கருத லாம். 'சோழபுரம் சாசனம்' இராசேந்திர சோழீ சுவரம் என்ற கோயிலிலுள்ள கல்வெட்டு. ஆரம் பத்திலிருந்து சில பகுதிகள் அழிந்து குறைப்பட் டுள்ளது. கோயிலின் பெயரைக் கொண்டு, இது ஒரு சோழ அரசனது சாசனம் என்ற கொள்கை

இருந்தது. நமது கவிமணி, இதனோடு தொடர்புள்ள வேறு சில சாசனங்களையும் ஒப்புநோக்கி ஆராய்ந்து இது பாண்டியனது சாசனம் என்பதை நன்கு விளக்கியிருக்கின்றார்கள். இதில் வரும் 'ஐயன் மழவராயன் நமக்குச் சொன்னமையில்' என்ற தொடரில் குறிக்கப்படும் மழவராயனை, 'மாமடி' என்று பிறிதோர் சாசனம் அழைத்தலால், இவன் அரசனுக்கு மாமனாதல் வேண்டும் என்று துணியலாம்.

உலக முழுதுடையாள் சாசனம், அரசர்கள் தேவதாசியர்களை மணந்து, அரசியராக ஏற்றிருப்பது மன்றி, அவரது மக்களை அரசாட்சிக்கு உரிமைப்பட்டவராகவும் செய்திருக்கிறார்கள் என்பதைப் புலப்படுத்துகிறது. இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள சாசனக் கட்டுரையில் வரும் பராந்தக பாண்டியன் கலிங்க வெற்றியில் விக்கிரம சோழனுக்கு உதவி செய்தவன் என்பர் சில ஆராய்ச்சியாளர். இப்பாண்டியனுக்குப் பிற்பட்டவன் ஜடிலவர்மன் குலசேகரபாண்டியன். இக்குலசேகரன் 1190-ல் பட்டம் எய்தியவன் ஆதலால், பராந்தக பாண்டினது காலம் 12 ம் நூற்றுண்டின் முற்பகுதியாயிருக்கலாம். கலிங்கப் போர் நிகழ்ந்த காலத்தில் விக்கிரம சோழனுக்கு உதவியாய்ப் பராந்தக பாண்டியன் சென்றிருந்தான் என்பதற்கு வேறு

தக்க ஆதாரம் வேண்டும் என்று ஆசிரியர் துணி கின்றனர். இக்கட்டுரையின் இறுதியில் சேர்க்கப் பட்டுள்ள குறிப்புக்களும் நமக்குப் பெரிதும் பயன் படத்தக்கவை.

இங்குக் கூறியவற்ருல் கவிமணியின் உரை மணித்தொகுதி வாசகர்களுக்கு ஓர் அரிய நல்விருந் தாக அமைந்துள்ளது என்பது விளங்கும்.

* எனது லட்சியம்

நிருபர்: நாகர்கோவிலுக்கு வடக்கே இரண்டு மைலில் இருக்கிறது இந்தப் புத்தேரிக் கிராமம். நாகர்கோவிலில் இருந்து வரும்பொழுது பாதையின் இரண்டு பக்கமும் பசுமையான வயல்கள். புத்தேரிக்கு அருகில் பாதையின் மேற்புறம் பெரிய ஏரி—குளம். இதற்கு அப்பால் மலைகள். மலையும், குளமும், வயல்களுமாக உள்ள இந்த அழகிய புத்தேரிக் கிராமத்தில் குளத்தில் மலரும் மலரைப்போல் கவிதை மலர்கிறது. இதோ கவிமணி அவர்களைச் சந்திக்கிறோம். நமஸ்காரம்......

கவிமணி: வாருங்கள், வாருங்கள் நமஸ்காரம்......

நிரு: தங்களுடைய உடம்பு அசௌகரியத்தைப் பொருட்படுத்தாமல் இந்தச் சந்திப்புக்கு இணங்கியதற்கு முதலில் நன்றி செலுத்துகிறேன்......

கவி: தங்களைப் பார்த்ததும் எனக்கு க்ஷீணமெல்லாம் அடியோடு பறந்துவிட்டது......

நிரு: மிக்க மகிழ்ச்சி. புத்தேரி என்ற இந்தக் கிராமத்தின் பெயர் மனசைக் கவர்கிறது. இந்தப் பெயரின் காரணம் என்ன?......

---

* 1951-ம் வருடம் ஏப்ரல் மாதம் கவிமணியவர்கள் திருச்சி ரேடியோ நிருபருக்கு அளித்த பேட்டி.

கவி: யோகீச்சுவரர் என்ற ஒரு பெரியாருடைய சமாதி இங்கே இருக்கிறது. அந்தச் சமாதி யின் மீது ஒரு பெரிய புத்து வளர்ந்திருப்பதை வழியில் பார்த்திருப்பீர்களே......

நிரு: ஆமாம்...பார்த்தேன்......

கவி: அந்தப் புத்து இருக்கின்ற காரணத்தாலும் அதன் அருகில் ஏரி இருப்பதாலும் புத்தேரி என்று பெயர் வந்தது. "புத்தர் சேரி" "புத்தர் தேரி" என்ற பதங்கள் மாறி, புத்தேரி என்று வந்ததாகச் சிலர் சொல்கிருர்கள்......

நிரு: தாங்கள் பிறந்த ஊரே புத்தேரிதான் என்று நினைக்கிறேன்......

கவி: இல்லை, இது என் மனைவியின் ஊர். நான் பிறந்த ஊர் தேரூர். சுசீந்திரத்திற்கு ஒரு மைல் வடக்கே உள்ளது.

நிரு: ஒஹோ அப்படியா. தாங்கள் முதன் முதல் பாடிய கவிதை எது?......

கவி: சிறு பிராயத்தில் பலவிதமான கவிதைகள் பாடியதுண்டு. ஆனுல் ஒரு சிறு நூல் என்று சொல்லத்தக்க விதத்தில் பாடியது தேரூர் அழகம்மன் விருத்தம்.

நிரு: அப்பொழுது தங்களுடைய வயது என்ன இருக்குமோ?......

கவி: பதினெட்டுக்குமேல் இருபதுக்கு அகமாய் இருக்கலாம்.

நிரு: தமிழ் இலக்கண இலக்கியங்களை விசேஷமாகத் தாங்கள் யாரிடம் கற்றுக்கொண்டீர்கள்?

கவி: தேரூரின் சமீபம் வாணன் திட்டு என்ற ஒரு சிறு கிராமம் இருக்கிறது. அதில் திருவாடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த ஒரு மடம் உண்டு. அந்த மடத்தில் ஸ்ரீலஸ்ரீ சாந்தலிங்க ஸ்வாமிகள் என்ற ஒரு பெரியார் இருந்தார். அவர் தமிழ் நூல்களை முறையாகக் கற்றுத் தெரிந்தவர். அவரிடத்தில்தான் நான் தமிழ் கற்றேன். அவருடைய தூண்டுதலின் பேரிலே தான் அழகம்மன் விருத்தம் பாடினேன்.

நிரு: அந்த நூலிலிருந்து தங்கள் வாய் மொழியாக ஒரு விருத்தம் கேட்கலாமா?

கவி: ஆஹா, சொல்கிறேனே......

ஆற்றுப் பெருக்கையொத் தழிகின்ற செல்வத்தை
அடைவதில் விருப்பு மில்லேன்
ஆண்டியாய் வேண்டிப் புசித்துண்டு நாடோறும்
அலைவதில் வெறுப்பு மில்லேன்;

காற்றுப் பெயர்ந்திடிற் காயமோ சூத்திரக்
கயிறற்ற பாவை, அதனால்
காரியம் சிறிதேனுமுளதோ? உன் இருபதக்
கஞ்சமே தஞ்ச மென்று

போற்றிப் பெரும்பேறு பெறுதற்கென் உள்ளம் எப்
போதுந் தவிக்குது அம்மா!
பொங்கிடுங் குரவையிட் டெங்குமோ ரொலி செய்து
பொலிவாக மள்ளரெல்லாம்,

சேற்றுப் பெருக்கூடு நாற்றைப் புதைக்கின்ற
செய்யகஞ் சூழும் ஊராம்
தென்னிரத புரிவாழும் என்னரிய செல்வமே!
தேவியழ கம்மை உமையே!

நிரு: மிகவும் நன்றி. இந்த நூலுக்குப் பிறகு தாங்கள் தமிழ்ப் பத்திரிகைகளில் பாடல்கள் அவ்வப்போது எழுதி வந்தீர்கள். அப்படித்தானே?

கவி: ஆமாம். ஆனல் அவை பெரும்பாலும் புனை பெயரில் தோன்றின. பிறகுதான் ''மலரும் மாலையும்'' என்ற புஸ்தக ரூபத்தில் வெளிப்படையாக என் பெயரில் வந்தன.

நிரு: உண்மையான கவிதையின் பண்புபற்றித் தங்களுடைய கருத்தை அறிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

கவி: கவிதை, கடவுள், திருவிதாங்கூர் முழு ரூபாய்* இந்த மூன்றையும் இல்லை என்று சொல்ல முடியாது. திருவிதாங்கூர் முழு ரூபாய் என்னும் நாணயம் எந்தக் காலத்திலும் இருந்ததில்லை. ஆனல் அப்படி ஒரு நாணயம் இருப்

---

* திருவிதாங்கூரில் மட்டும் தனிப்பட வழங்கிய நாணயச் செலாவணி; இப்பொழுது நிறுத்தப்பட்டு விட்டது.

பதாக எண்ணித்தான், வரவு செலவுக் கணக்கு களை எழுதிவந்தார்கள். நாணயத்தைக் கண் முன் காட்டு என்ருல் எப்படிக் காட்டுவது. காட்ட இயலுமா? கடவுள், கவிதை இரண் டும் அப்படித்தான்.

நிரு: என்ருலும் தங்கள் அனுபவத்தைக்கொண்டு கவிதையின் முக்கிய பண்பு, இன்னதென்று விளக்கக் கூடுமல்லவா.....

கவி: கவிதை, இன்னதென்பதைப்பற்றி நான் ஒரு சிறு கவிதை எழுதியிருக்கிறேன்.

உள்ளத் துள்ளது கவிதை—இன்பம்
  உருவெடுப்பது கவிதை;
தெள்ளத் தெளிந்த தமிழில்—உண்மை
  தெரிந்து ரைப்பது கவிதை

என்று வருகிறது. இதிலிருந்து இன்பம், உண்மை, தெளிவு இந்த மூன்றும் ஒரு கவியில் இருக்கவேண்டும் என்பது விளங்குகிற தல்லவா? ஒரு பெண் பத்தாயிர ரூபாய் நகை போட்டிருக்கிருள். புடவையோ ஆயிரம் ரூபாய் இருக்கும். ஆனுல் அழகுதான் இல்லை. இன்னெரு பெண் சாதாரணப் புடவை. காதில் ஒகு குச்சு. கூந்தலில் ஒரே ஒரு ரோஜா. ஆனுல் முகத்தில் நல்ல தேஜஸ். முதலாவது பெண் பணக்காரி என்று தெரிகிறது. இரண் டாவது பெண் முகத்தில் அழகு இருக்கிறது. பணம் இலலை. ஆனுல் இருவரில் லக்ஷ்மி

யார்? தெய்வத் தன்மை யாரிடத்தில் இருக்கிறது? கவிஞர்களுக்குள் பல நூல்களைக் கற்றறிந்த பெரும் புலவர்கள் இருக்கிருர்கள். பாடல்களிலும் அந்தப் புலமையைக் காட்டலாம். ஆனல் கவிதா சக்தி மட்டுந்தான் காண முடியாது. வெறும் அடைமொழிகளையும், அணிகளையும் அடக்கிவைத்திருக்கிற செய்யுட்களெல்லாம் ஆடை ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட பிணங்களேயாம். உயிருள்ள கவிகள் அல்ல. உண்மைக் கவிதையின் உயிர்நாடி அதன் ஒலியிலேயே பேசும்.

நிரு: இன்றைய தமிழின் புதிய இலக்கிய வளர்ச்சி பற்றித் தாங்கள் என்ன கருதுகிறீர்கள்?

கவி: தமிழுக்கு ஒரு நல்ல காலம். இளைஞர்கள் ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் தமிழ் வளர்ச்சிக்காக உழைத்துவருகிருர்கள். கட்டுரைகள், கதைகள், கவிதைகள், எல்லாம் பல பத்திரிகைகளிலும் புத்தகங்களிலும் வெளிவருகின்றன. "கண்டவர்கள் எல்லாம் கண்ணை மூடிக்கொண்டு எழுதத் தொடங்கிவிடுகிருர்கள்; இது நல்லதல்ல" என்று சிலர் கண்டிப்பதுண்டு. ஆனல் இப்படிக் கண்டிப்பதில் அர்த்தமில்லை. இதற்குத் தடை உத்தரவு அவசியமா? சாத்தியமா? இவைகளில் வலுவுள்ளது தான் நிற்கும், மற்றவை மறைந்து

விடும் என்ற உண்மையை மறந்துவிடுகிருர்கள். நாடகத்தைப்பற்றி இதோடு ஒரு வார்த்தை. ''நாடகத் தமிழ், நாடகத் தமிழ்'' என்று சொல்லிப் பெருமை பாராட்டுகிருேமே தவிரப் பழைய காலத்தில் இருந்த ஒரு நாடகத்தையாவது எடுத்துக் காட்ட முடியாது. பாட்டன் கப்பலோட்டியாக இருந்திருக்கலாம். இப்பொழுது தரித்திரமாயிருக்கிருேம். நம்முடைய கடமை என்ன? இந்தத் தரித்திர நிலைமையை நீக்கி ஏராளமாகப் பொருள் சம்பாதிக்க வேண்டுவதுதான். நல்ல நாடகங்கள் நமக்கு மிக்க அவசியம். இப்பொழுது சிலர் எழுத முன்வந்திருக்கிருர்கள். அம்முயற்சியைப் பாராட்டவேண்டும். இசைத் தமிழைப் பற்றியும் சில சொல்ல விரும்புகிறேன். சிலர், சாகித்திய கர்த்தாக்களும் ராகதாளம் அமைப்பவரும் ஒருவராகவே இருக்க வேண்டுமென்று நினைக்கிருர்கள். அப்படி இருப்பது நல்லதுதான். ஆனல் எல்லா இசையாசிரியர்களும் கீர்த்தனை ஆசிரியர்களாகவும், கீர்த்தனை ஆசிரியர்கள் இசையாசிரியர்களாகவும், இருக்கிருர்களா? இருக்க முடியுமா? பரிபாடல் என்னும் பழந்தமிழ் இலக்கியத்தைப் பார்த்தால் இயற்றமிழ் ஆசிரியரும் இசையை அமைத்தவரும் வேறு வேருனவராய் இருப்பதைக் காணலாம். சிலப்பதிகாரத்தில் இசையாசிரியன் அமைதி, கவிஞன் அமைதி, தண்ணுமையோன் அமைதி, முதலியவற்றைப் பார்க்கிருேம். ஆத

லால் இருவரும் ஒருவராகத்தான் இருக்க வேண்டுமென்பதில்லை, எனத் தெரிகிறது.

நிரு: தமிழ் வளர்ச்சிக்குத் தாங்கள் கூறக்கூடிய வேறு யோசனைகள் ஏதாவது உண்டா?

நவி: தமிழ் வளர்ச்சிக்கு முதலாவது வேண்டியது கலாசாலைகளில் தமிழின் மூலமே எல்லாப் பாடங்களும் கற்பிக்கவேண்டும். காரியாலயங்கள் அனைத்திலும் கடிதப் போக்கு வரத்துக்குத் தமிழையே உபயோகப்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் அவசியமும் ஆர்வமும் உண்டாகும். பல புஸ்தகங்கள் வெளிவரும். மொழி வளரும். இங்கிலீஷ், பிரஞ்சு, ஜெர்மன் முதலிய பாஷைகளிலுள்ளதுபோல் பல துறைகளிலுள்ள நூல்கள் தமிழ் மொழியில் நமக்கு வேண்டும். மொழி பெயர்ப்பு முக்கியமானது. அனேக நூல்களை வேறு பாஷைகளிலிருந்து மொழி பெயர்க்க வேண்டும். முதல் நூல்களைத் தமிழ் மொழியிலேயே எழுதவேண்டும் என்பது சொல்லவே வேண்டியதில்லை. கற்றவர்கள் தாங்கள் எழுதும் முதல் நூல்களைத் தாய்மொழியிலேயே எழுதவேண்டியது அவசியம்.

நிரு: சொல்லாக்கம் பற்றித் தாங்கள் என்ன கருதுகிறீர்கள்?

நவி: விஞ்ஞானப் பதங்கள், தமிழில் ஏற்கெனவே கிடைப்பதைத் தவிர அந்தந்த பாஷைச் சொற்

களை அப்படி அப்படியே உபயோகித்துக் கொள்வதில் ஆக்ஷேபனையில்லை.

நிரு: மொழி வளர்வதற்கு விமர்சனக் கலையும் வளர வேண்டும் என்று சொல்வதைப் பற்றித் தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

கவி: விமர்சனம் அவசியந்தான். சிலர் ஆங்கிலத்தில் தேர்ச்சியுடையவரா யிருக்கிறார்கள். ஆனால் தமிழ்ப்பயிற்சி அவர்களுக்குக் கொஞ்சமும் கிடையாது. வேறு சிலர் தமிழில் தேர்ச்சியுடையவராய் இருக்கிறார்கள். ஆங்கிலப் படிப்பு அவர்களுக்கு இல்லை. இரண்டிலும் தேர்ச்சி உடையவர்கள் மிகச் சிலரே. இந்த நிலையில் தகுதியான விமர்சனம் வெளி வருவது எளிதான காரியமா?

நிரு: இலக்கியத்தைத் தவிர தாங்கள் விரும்பிக் கற்கும் விஷயங்கள் எவை என்று தெரிய விரும்புகிறேன்.

கவி: கவிகளைத் தவிர நான் விரும்பிக் கற்கும் விஷயம் தென்னிந்தியக் கல்வெட்டுக்களும், தென்னிந்தியச் சரித்திரமும். தமிழோடு இணைந்திருப்பதால், இவற்றை ஆராய்ந்து கட்டுரைகளும் எழுதியிருக்கிறேன். தமிழுக்கு இத்தகைய ஆராய்ச்சி மிக்க அவசியம் என்பதை நான் அனுபவத்தில் அறிந்திருக்கிறேன். அது போலவே, தென்னிந்தியக்

கல்வெட்டுக்கள் பற்றிய ஆராய்ச்சிக்கும் தமிழ் மொழியில் நல்ல பயிற்சி அவசியம் என்பதில் யாதும் ஐயமில்லை.

செந்தில் முருகா! திருமால் மருகா! என்
சிந்தை குடிகொண்ட தேசிகா! வந்தினிய
பைந்தமிழ்ச் சோலையிலே பாடும் கவிக்குயில்கள்
சந்ததம் வாழவரம் தா.

நிரு: தங்கள் பரிவுக்குக் கடமைப் பட்டிருக்கிறேன்.

வணக்கம்.

---

* சாசன ஆராய்ச்சி

பழங்கால வரலாறுகளை நாமறியத் துணை நிற்பன இலக்கியங்கள் சாசனங்கள் என்பவை யாகும். இவற்றுள் இலக்கியங்கள் தொடர்ச்சி யான வரலாற்றை நமக்கு உதவவில்லை. சாசனங் கள் ஏற்பட்டது சற்றுப் பிற்பட்டுத்தான். இச்சா சன காலம் முதற்கொண்டே ஒரு நாட்டின் ஆட்சிப் பரம்பரையை நம்மால் அறிய முடிகிறது. இவை களில்லாவிட்டால் பழமையைப் பொறுத்த அள வில் நாம் குருடர்களாக அன்றோ இருப்போம்? ஆகவே சாசனங்களை, இருண்டு கிடந்த பழங்கால வரலாற்றை விளக்கிக் காட்டும் ஒளி விளக்குகள் என்று சொன்னால் குற்றமாகாது.

நாம் இங்கே சாசனம் என்று குறிப்பிடுவது கல்லெழுத்து, செப்பேடு, ஓலைப்பிரமாணம் முதலிய வற்றை யாகும். பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட இச்சாசனங்களைப் படித்தறிந்து, அக்கால வரலா றுகளையும் வழக்கங்களையும் அறிந்துகொள்வதென் பது எளிதல்ல. இதற்கு முதலாவது, அக்கால வரி வடிவங்களான வட்டெழுத்து, கோலெழுத்து, மலை யாமை, கிரந்தலிபி போன்றவற்றில் பயிற்சியும் பாண்டித்தியமும் வேண்டும். இரண்டாவது தமி ழிலக்கியத்தில் தேர்ச்சியும், சுற்றுப்புற மொழி களில் ஓரளவு அறிவும் வேண்டும். மூன்றாவது, ஒரு காலத்தைப் பற்றி ஆராயப் புகும்போது அக்காலப்

பழக்கவழக்கங்கள் இவையாயிருக்கலாம் என்று ணர்தற்கேற்ற பரந்துபட்ட அறிவு அமைந்திருத்தல் வேண்டும். நான்காவது, நாடோடிப் பேச்சு வழக்கைப் பற்றியும் அறிந்திருத்தல் வேண்டும். இவ்வளவுக்கும் மேலாகத் தன்னபிமானம் என்ற மாசு நீங்கி, உண்மை காணவேண்டுமென்ற ஆசை சுரக்கின்ற மனநிலே அமைந்திருத்தல் வேண்டும். இவ்வளவும் பொருந்தப் பெற்றோரே சாசன ஆராய்ச்சிக்குத் தகுதியுடையோராவர்.

இன்னேரும் சாசனங்களைப் படித்தறிவதிலும் பொருளுணர்வதிலும் தவறிவிடுதல்கூடும். ‘யானைக் கும் அடி சறுக்கும்’ என்பார்களே, அது சாசன ஆராய்ச்சியைப் பொறுத்தவரையில் நூற்றுக்கு நூறு உண்மை. அதனுல் ஒருவர் தவறியதை இன் ெனருவர் எடுத்துக்காட்டி உண்மையைப் புலப் படுத்த வேண்டுவது மிக்க அவசியம். திருவிதாங் கூர்ச் சாசன ஆராய்ச்சி இலாகாவில் தலைமை வகித்து வந்த திரு. கோபிநாதராயர் ஒரு சிறந்த அறிஞர்; ஆராய்ச்சி வல்லுநர்; அரிய காரியங் களைச் சாதித்தவர். எனினும் அவர் தவறிய இடங் கள் இல்லாமலில்லை. அவற்றுள் ஒன்றைக் கீழே எடுத்துக் காட்டுகின்றேன். முதன் முதல் அதற்கு இடமாக இருந்த சாசனம் தரப்படுகின்றது.

1. ஸ்வஸ்தி ஸ்ரீ விக்ரமாதித்ய வரகுணர்க்கு யாண்டு எட்டுப் பங்குனித் திங்கள் திரு நந்திக்கரை இருந்து அடிகள்......(ர்தெ)

2. ங்க நாடு கிழவன் மகன் ஆய்குலமாதேவியாயின முருகஞ் சேந்தியைத் திருவடி சார்ந்த இவளுக் குக் குடியாக அட்டிக் குடுத்த பூ(மிவ)

3. ள்ளுவ நாட்டு மேற்கோட்டுப் பழங்கோப் பற்று செங்கணர் வந்தடி பல விதை பதி னைங்கல வித்துப் பாடும் சாண்டன் தடி பல விதை (நா)

4. ற்கல வித்துப் பாடும் குதாளங்கோடு தடி பல விதை ஐங்கல வித்துப் பாடும் இத நொடு செல்வன புல்லேல் படுவன தடிபல (விதை)

5. முக்கல வித்துப் பாடும் பெருமண்ணும் இடை மண்ணுந் தடிபல விதை ஐங்கல வித்துப் பாடும் ஏற்றித் தடிபல விதை ப(தி)

6. ஞழிக் காலால் முப்பந்திரு கல விந்துப் பாடும் இவற்றின் றலைக்கரையும் புலையுங் காராண்மை மீதாட்சி உள்ளடங்க இ(றயி)

7. லிகோநீக்கி செம்மருதர் குடியாக பார்த் திப சேகர புரத்து பெருமக்கள் காத்துாட் டுவதாக அட்டிக் குடுத்தது இத(னு)க்கு ரக்ஷாபே(ாக)

8. மாக இவை யிற்றுளேய் பெருமக்களுக்கு அட்டிக் குடுத்த பூமி குதாளங் கோட்டில் விதை நாற்கலம்.......................

இதில் குறிப்பிடப்படும் வரகுணன் கி. பி. 9-ம் நூற்ருண்டில் வேணுட்டை ஆண்டு வந்த ஆய் அரசனுவான். ஆய் வேந்தருள்ளே கோக்கரு நந்தடக்கன் என்பவன் பிரசித்தி பெற்றவன். ஏனென்ருல் முன்சிறையின்* பக்கத்திலுள்ள பார்த்திப சேகரபுரம் கோவிலேயும், அங்கிருந்த வேத பாடசாலேயையும் நிறுவியவன் இவனே. அக்கோவில் பற்றி யெழுந்த செப்பேட்டினுல் இது தெரிய வருகின்றது. மேலே காட்டிய வரகுண தேவன் சாசனத்திலும் பார்த்திப சேகரபுரம் குறிப்பிடப்படுகின்றமை காணலாம். அன்றியும் இச் சாசனத்து இரண்டாவது வரியில் 'தெங்கநாடு கிழவன் மகள் ஆய் குல மாதே வியாயின முருகஞ் சேந்தி' என வருவதுபோல, கோக்கரு நந்தடக்கன் சாசனத்திலும் 'தெங்கநாடு கிழவன் ஆயின சாத்த முருகன் ஆணைத்தி'x என்னும் தொடர் வந்துள்ளது. இதனுல் தெங்கநாடு கிழவனுன முருகன் என்பவன் காலத்தில் வாழ்ந்தவர்கள் இவ்விரண்டு அரசர் களும் என்று துணியலாம். ஆகவே இவ்விருவரும் தந்தையும் மகனுமாயிருக்க வேண்டும் என்று பலரும் கருதுகிருர்கள். பார்த்திப சேகரபுரம் கோவிலேப் பற்றிக் குறிப்பிடுகின்ற வரகுணன்; அக்கோவிலே நிறுவின கோக்கருநந்தடக்கனுக்குப் பிந்தியவன் என்பது மட்டும்தான் இதனுல் கொள் ளக் கூடுமே ஒழிய, மகன் தந்தை முறைமையைத்

---

* இது தென் திருவிதாங்கூரில் விளவங்கோட்டுத் தாலுகாவில் உள்ள ஓரூர்.

x Travancore Archaeological Series Vol. I P. 9.

துணிய இவ்வாதாரம் போதுமென்று தோன்ற வில்லை.

மேலே குறிப்பிட்ட சாசனம் இவனது ஆட்சி வருடம் எட்டாவது பங்குனி மாதத்தில் இவன் திருநந்திக் கரையில் இருக்கும்பொழுது கொடுக்கப் பட்டதாகும். இது ஒரு செப்பேடு. திருவனந்த புரம் ஹுஸூர் ஆபீஸில் இருந்தமையால் 'ஹுஸூர் ஆபீஸ் செப்பேடு' எனப்படும். திருவி தாங்கூர் சாசன வரிசை முதல் தொகுதி இரண்டா வது எண்ணில் பதிப்பிக்கப் பட்டிருக்கிறது இது.

சாசனத்தின் பொதுப் பொருள்:— 'தெங்கநாடு கிழவன் மகள் ஆய்குல மாதேவியாயின முருகஞ் சேந்தியைத் திருவடி சார்த்த அவளுக்கு விட்டுக் கொடுத்த 32 கலவித்துப்பாடு கொண்ட நிலத் தைப் பார்த்திப சேகர புரத்துப் பெருமக்கள் மேற் பார்வை செய்து கொள்வார்களாக' என்பது.

'இதில் 'திருவடி சார்த்த' என்றால் என்ன என் பது எளிதில் விள்ள முடியாத ஒரு கேள்வி. இதற்குக் கூறப்படும் விடையைப் பொறுத்தே முருகஞ் சேந்திக்கும் வரகுண தேவர்க்குமுள்ள தொடர் பும், சாசனத்தின் நோக்கமும் தெளிவுபடும். திரு. கோபிநாதராயரவர்கள் 'திருவடி சார்த்தல்' என்பதற் குத் 'திருமணம் செய்து கொடுத்தல்' எனக் கருத் துக்கொண்டு, 'வரகுணனுக்கு முருகஞ்சேந்தி மண முடிக்கப் பட்டாள்' எனக் கூறுகின்றார். இது பெரும் பிழையான பொருளாகும். அதற்குரிய காரணங்களை ஒவ்வொன்றாகக் கூறுகின்றேன்.

முதலாவது, செப்பேட்டின் அமைப்பையும் சிதைந்த எழுத்துக்களையும் சற்றுக் கவனிக்க வேண்டும். பட்டயத்தின் வலது ஓரம் சிறிது சிதைந்து போனமையால் இரண்டு எழுத்துக்கள் வீதம் அடிவரையும் மாய்ந்து விட்டன. மாய்ந்த எழுத்துக்கள் இவையாகத்தான் இருக்க வேண்டுமென்பதை ஏனைய பல சாசனங்களின் ஆதாரங்கொண்டு ஊகித்து அடைப்புக் குறிக்குள் இட்டிருக்கின்றேன்.

முதல் வரியில் 'அடிகள்' என்பதன்பின் செப் பேட்டில் கோவிக்ர மாதித்ய வரகுண' என்னும் சொற்கள் காணப்படவும் யாது காரணத்தாலோ ராயரவர்கள் அவற்றைப் பதிப்பிக்காமல் விட்டு விட்டார்கள். இது தவிர அவ்வரியில் இரண்டு எழுத்துக்கள் சிதைந்திருக்க வேண்டும். அவ்வளவுக்குத்தான் இடமுண்டு. ஆகவே சிதைந்த எழுத்துக்கள் 'ர்தெ' என்பவையா யிருக்கலாம். அன்றி 'ர்க்குதெ' என இத்தனை எழுத்துக்களுக்கு இடமில்லை. இதனை ஏனைய வரி களை நோக்கியும் உணர முடியும். அப்படியாயின் 'கோவிக்ரமாதித்ய வரகுணதேவர், தெங்க நாடு... முருகஞ் சேந்தியைத் திருவடி சார்த்த' என்று தொடர்வது அறியப்படும். 'மகள்' என்னும் சொல்லாலும் 'ஆய்குல மாதேவி* என்னும் தொட

---

* மாதேவியார் என்னும் வழக்குண்மை 'சந்திரகுலமா தேவியார்' — (South Indian Inscriptions: Vol. IV P. 193) என வருவதனுல் அறிக.

ராலும் முருகஞ் சேந்தி ஒரு பெண்மணி யெனவும், அவள் ஆய்குலத்தைச் சேர்ந்தவள் எனவும் அறி கின்றோம்.

இரண்டாவது 'திருவடி சார்த்தல்' என்றால் பொருளென்ன? 'வரகுண தேவர் திருவடி சார்த்த' என்பது அவனுக்கு மணம் செய்து கொடுப்பதைக் குறிப்பிடுமா? ஒரு நாளுமில்லை. பின் உண்மைப் பொருள் என்ன என்பது சிந்திக்கத் தக்கது. வைண வர்கள் 'திருவடி சேர்தல்' என்னும் தொடருக்குத் 'திருமாலின் திருவடிகளில் சேர்தல் (இவ்வுலக வாழ்வை நீத்தல்)' எனப்பொருள் கொள்வார்கள்.

"கூரத்தாழ்வார் நங்கையார் திருவடி சார்ந்தவாறே பின்பு ஆவர்த்திப்பதாக அறுதியிட்டது கூடுகிற வளவில் தம்முடைய புத்ரரான ஆழ்வானுடைய ஸ்ரீ வைஷ்ணவத்தைக் கண்டு இதினுடைய எடுப் பிருந்தமை கண்டோமுக்கு ஆழ்வானுக்கு அந்ய சேஷத்வம் வரவொண்ணாது என்று ஆவர்த்திகை தவிர்ந்தாரிறே, அன்றிக்கே ஸாபிப்ராயமாக வல் லார்க்குச் சொல்லவேண்டாதிறே" — என மேற் கோள் காண்க.

இதில் 'கூரத்தாழ்வார்' என வந்தது தந்தை யையும், 'ஆழ்வான்' என வந்தது மகனையும் குறிக் கும். வைணவ பரிபாஷையில் திருவடி சார்தல் என்றால் மரண மடைந்து திருமாலின் திருவடியைச் சார்தல் என்றே பொருள். சைவர்களும் உயிர் நீத்தலைச் 'சிவபதம் சேர்தல்' என்னும் தொட ரால் குறிக்கின்றமை காண்கிறோம்.

செப்பேட்டில் சார்நல் என இல்லாமல் சார்ந்தல் என வருகின்றது. முருகஞ் சேந்தி உயிரோடு இருக்கின்ருள்; மேலும் அவளது நல்வாழ்வுக்கு வேண்டிய நிலங்களும் விட்டுக் கொடுக்கப்படுன்றன. அப்படியிருக்கத் திருவடி சார்த்துவது எப்படியென்று ஐயுறலாம். மண வாழ்க்கையை வெறுத்துக் கன்னிகையராகவே யிருந்து கடவுள் வழிபாட்டில் தம் காலத்தைக் கழிக்க விரும்பிய பெண்கள், தம்மைக் கடவுள் திருவடிகளில் சமர்ப்பணம் செய்துவிடுகின்ற வழக்கம் பண்டை நாளில் இருந்துவந்தது. இதற்கு எத்தனேயோ உதாரணங்கள் காட்டமுடியும். இவ்விதமே ஆய்குலத்தைச் சேர்ந்தவளும், அரசன் உறவினளுமான முருகஞ்சேந்தி என்பாள் கடவுள் வழிபாட்டில் தன்னே ஈடுபடுத்தத் துணிந்தபோது அரசன் அவளேக் கடவுள் திருவடிகளில் காணிக்கை வைத்து, அவள் செலவுக்காக நிலமும் விட்டுக் கொடுத்திருக்க வேண்டும். இதுதான் பொருத்தமாகப்படுகின்றது.

மூன்ருவது, அரசனே முருகஞ் சேந்தியை மணம் செய்து கொள்ளுகின்ருனென்று வைத்துக் கொண்டாலும் தான் மணக்கப் போகும் பெண்ணுக்கு நிலம் எழுதிக் கொடுக்க வேண்டிய அவசிய மென்ன? அதுவும் 32 கல வித்துப்பாடு நிலமா கொடுப்பான்? கொடுத்த நிலத்தையும் பார்த்திப சேகர புரத்துப் பெருமக்கள் காத்து ஊட்டுவதாக விடக் காரண மென்ன? என்பன போன்ற பல கேள்விகள் கிளேக்கும். இவற்றுக்கு விடை

யிறுத்தல் எளிதல்ல. முன்னைய பொருளுக்கானால் கோவிலுக்கு உரிமைப்படுத்திய பெண்ணின் பொருட்டுக் கொடுக்கப்பட்ட நிலங்களை ஓர் அற நிலையத்தாரின் பாதுகாப்பில் விடுவது பொருத்த மாகும் என்னும் சமாதானம் உண்டு.

இக்காரணங்களால் விக்கிரமாதித்திய வரகுண தேவர்க்கு முருகஞ் சேந்தியைத் திருமணம் செய் விக்க அம்மன்னனால் ‘நிலம் கொடுக்கப்பட்டதைக் குறிப்பிடுவதல்ல இச்சாசனம் என்பதும், வரகுணன் தன் குலத்தில் பிறந்த முருகஞ் சேந்தி என்னும் பெண்மணியை அவள் விருப்பப்படி கடவுளுக்குக் காணிக்கை வைத்தபோது, அவள் செலவுக்காக நிலம் விட்டு, அதனைப் பார்த்திப சேகரபுரத்து அற நிலையத்தாரிடம் மேற்பார்வைக்கு ஏற்பாடு செய் ததனையே இது குறிக்கு மென்பதும் தெள்ளத் தெளிய உணரலாம்.